விலை: 30
பக்கங்கள்: 28

24 மணி நேரமும் உடனுக்குடன் செய்திகளை அறிந்துகொள்ள
NEWUTHAYAN.COM

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

சுடர் 33 கதிர் 327 ஐப்பசி 02ஆம் நாள் வெள்ளிக்கிழமை 19 ஒக்ரோபர் 2018 வள்ளுவர் ஆண்டு 2049

## சீனத் தயாரிப்பு வானூர்திகள் வான்படைக்கு

கொழும்பு, ஒக்.19
சீனாவில் தயாரிக்கப்பட்டு சிறிலங்காவில் பாகங்கள் ஒருங்கிணைக்கப்பட்ட >> 25

# வனவளத் திணைக்களத்தால் விவசாயக் காணிகள் பறிப்பு!

## வடமராட்சி கிழக்கில் விவசாயிகள் அந்தரிப்பு

யாழ்ப்பாணம், ஒக்ரோபர் 19
வடமராட்சி கிழக்கில் வயல் நிலங்களின் உரிமையாளர்கள் தமது நிலத்தை கால போக நெற்செய்கைக்காக உழுதபோது அந்தப் பிரதேசம் தமது ஆளுகைப் பகுதி என்று தெரிவித்து வனஜீவராசிகள் திணைக்களம் தடை விதித்துள்ளது.

முல்லைத்தீவு, வவுனியா மாவட்டங்களில் தமிழ் மக்களின் விவசாயக் காணிகள் வனஜீவராசிகள் திணைக்களத்தால் கையகப்படுத்தப்படுகின்றன என்று தொடர்ச்சியாகக் குற்றஞ்சாட்டப்பட்டு வரும் நிலையில் தற்போது யாழ்ப்பாணத்திலும் வனஜீவராசிகள் திணைக்களம் விவசாய நடவடிக்கைகளுக்குத் தடை விதித்துள்ளது. >> 24



## 28ஆண்டுகளுக்குப் பின்னர் மன்னாரில் மீண்டது 5 ஏக்கர்

2,583ஏக்கர் இன்னமும் விடுவிக்கப்படவில்லை

மன்னார், ஒக். 19
மன்னார் மாவட்டத்தில் திருக்கேதீஸ்வரம் மாந்தைப்பகுதியில் இராணுவத்தினரின் ஆக்கிரமிப்பில் 28 ஆண்டுகளாக இருந்த 5 ஏக்கர் காணி மக்கள் பாவனைக்காக விடுவிக்கப் >> 25

## நாளை மோடியை ரணில் சந்திப்பார்



கொழும்பு, ஒக்.19
இந்தியா பயணமான தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க நேற்றுமாலை புதுடில்லியை அடைந்தார். அவர் நாளை இந்தியத் >> 25

'றோ' கொலை முயற்சி என

## வதந்தி பரப்பியோரை கண்டறிவது அவசியம்

அமைச்சர் சமரசிங்க வலியுறுத்து

கொழும்பு, ஒக்.19
அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன இந்தியாவின் புலனாய்வு அமைப்பான றோவைக் குற்றஞ்சாட்டினார் என்று ஊடகங்களுக்குத் தகவல் வழங்கியவர்களை >> 25

மழையைத் தொடர்ந்து

## டெங்கு ஒழிப்பு அடுத்த மாதம்

யாழ்ப்பாணம், ஒக். 19
கொழும்பு சுகாதார அமைச்சின் டெங்குக் கட்டுப்பாட்டு அலகினர் மழை காலம் ஆரம்பித்துள்ளதையடுத்துத்து தேசிய டெங்குக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகளை அடுத்த மாதம் முதலாம் மற்றும் இரண்டாம் திகதிகளில் முன்னெடுக்குமாறு அறிவித்துள்ளனர்.
கடந்த மாதங்களில் நிலவிய காலநிலை காரணமாக டெங்குவின் தாக்கம் கடந்த ஆண்டை விடக் மிக குறைவடைந்து வரும் நிலையில் மக்களின் ஒத்துழைப்பினைப் பெற்று, டெங்குவினால் பாதிக்கப்படுவோரின் எண்ணிக்கையைக் குறைப்பதற்காக டெங்குவின் தாக்கம் >> 25

## அரசியல் ரீதியாக மைத்திரியை கொலை செய்ய ரணில் திட்டம்!

சு.கவின் 16 பேர் கொண்ட அணி சாடல்

கொழும்பு, ஒக்.19
அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவை அரசியல் ரீதியாகக் கொலை செய்வதற்குத் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரம சிங்க சதித்திட்டம் தீட்டுகின்றார். அரச தலைவர் கூறாத ஒரு செய்தியைப் பரப்பி அதன் >> 25

## கொலைச் சதி பாரதூரமானது; அதை மலினப்படுத்த முயற்சி

மைத்திரியின் ஆலோசகர்கள் சீற்றம்

கொழும்பு ஒக். 19
அரசதலைவர் மைத்திரிபால சிறிசேன மீதான கொலைச் சதி முயற்சி மிகவும் பாரதூரமானது. ஆனால் இது நாடகம் எனத் >> 25

## பயங்கர ஆயுதங்களுடன் சு.க. அமைப்பாளர் கைது

கொழும்பு ஒக். 19
சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் மாவனெல்லை இணைஅமைப்பாளரும், சப்ரகமுவ மாகாண சபையின் முன்னாள் உறுப்பினருமான இம்தியாஸ் காதர் ஆபத்தான >> 25

## வவுனியா விபத்தில் ஒருவர் பரிதாபச் சாவு

மற்றொருவரின் கை துண்டாகியது





வவுனியா, ஒக். 19
வவுனியா புளியங்குளம் பகுதியில் நேற்றுக் காலை 5 மணியளவில் இடம்பெற்ற விபத்தில் யாழ்ப்பாணத்தைச் >> 25

## சீனாவிடம் 1 பில். டொலரை கடன் பெற்றுள்ள இலங்கை

கொழும்பு, ஒக்.19
சீனாவிடம் இருந்து 1 பில்லியன் டொலர் கடன் கிடைத்துள்ளது என்று இலங்கை மத்திய வங்கி தெரிவித்தது. இந்த நிதி நேற்றுமுன்தினம் வழங்கப்பட்டுள்ளது.
இலங்கை நாணய மதிப்பை வலுப்படுத்தவும், வெளிநாட்டு நாணயக் கையிருப்பை அதிகரிக்கவும் இந்த நிதி பயன்படும் என்று கூறப்படுகின்றது.
வெளிநாட்டு >> 25



## தள்ளாடி வானூர்தி ஓடுபாதைக்கு அருகில் வெடிபொருள்கள் மீட்பு

மன்னார், ஒக். 19
மன்னார் தள்ளாடி வானூர்தி ஓடுபாதை அமைந்துள்ள பகுதிப் பற்றைக்குள் இருந்து நேற்று வியாழக்கிழமை மாலை ஒரு தொகுதி வெடி பொருள்கள் மீட்கப்பட்டுள்ளன. >> 25

## ஆவாவை உருவாக்கியது கோப்பாய் பொலிஸாரே!

சட்டத்தரணி றெமீடியஸ் நீதிமன்றில் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஒக.19
ஆவா என்ற குழுவை உருவாக்கியவர்கள் கோப்பாய் பொலிஸார்தான். வாழையே இல்லாத தோட்டத்தில் கைக்குண்டை வைத்துவிட்டு வாழைத் தோட்டத்தில் கைக்குண்டு மீட்கப்பட்டது என்று பொய் வழக்குப் போட்டவர்களும் அவர்கள்தான்.
இவ்வாறு நீதிமன்றில் சமர்ப்பணம் செய்தார் >> 25

## கல்வியற் கல்லூரி மாணவரை மிரட்டுகிறது மர்மக் காய்ச்சல்

யாழ்ப்பாணம், ஒக். 19
யாழ்ப்பாணம் தேசிய கல்வியற் கல்லூரி மாணவர்கள் சிலர் ஒருவகை காய்ச்சலினால் பாதிக்கப்பட்ட நிலையில் அவர்கள் வீடுகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர். >> 25



DFCC கருசரு, சிரேஷ்ட பிரஜைகளாகிய உங்களுக்காகவே

DFCC சிரேஷ்ட பிரஜைகள் கணக்கு

55 வயதிற்கு மேற்பட்டவர்களுக்கு

- ஆரம்பக் கட்டணம் ரூபா.1000 மட்டுமே.
- கணக்கில் வருடம் முழுவதும் உள்ள தொகைக்கேற்ப பல வெகுமதிகள்.
- சேமிப்புக் கணக்கிற்கு 7% வரை கவர்ச்சிகரமான வட்டி வீதம்.
- Virtual Wallet வசதி, இலவசமாக Online Banking வசதி.
- ஒரு வருட காலத்திற்கு இலவசமாய் SMS Alert வசதி.
- ஆரம்பக் கட்டணம் இல்லாமல் DFCC Credit Card ஐ பெற்றுக்கொள்ளலாம்.

மதிப்பு மிக்க சிரேஷ்ட பிரஜைகளாகிய உங்களுக்காக சிறப்பாக வடிவமைக்கப்பட்ட இச் சேவையைப் பெற்றுத்தர DFCC வங்கி எப்பொழுதும் அர்ப்பணிப்புடன் செயற்படும்.

*நிபந்தனைகளுக்கு உட்பட்டது

24 மணிநேர அழைப்பு நிலையம் 0112 350000
www.dfcc.lk

DFCC வங்கி
உங்கள் வளர்ச்சிக்கு

# எரிவாயு விலையை அதிகரிக்க இடமளிக்கப் போவதில்லை

## அமைச்சர் ரிசாட் தெரிவிப்பு



**கொழும்பு, ஒக்.19**
**சமையல் எரிவாயுவின் விலையை அதிகரிப்பதற்கு அரசு அனுமதிக்கப் போவதில்லை என்று கைத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சர் ரிசாட் பதியுதீன் திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளார்.**

லிட்ரோ எரிவாயு லங்கா நிறுவனத்தின் பிரதிநிதிகளுக்கும் அரச தொழில் முயற்சி மற்றும் கண்டி நகர அபிவிருத்தி அமைச்சர் லக்ஸ்மன் கிரியெல்ல மற்றும் அமைச்சர் ரிசாட் பதியுதீன் ஆகியோருக்கிடையில், கைத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சில் நேற்றுக் காலை இடம்பெற்ற சந்திப்பின்போதே, மேற்கண்டவாறு சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

போக்குவரத்துச் செலவு உட்பட இதர செலவுகள் அதிகரித்துவிட்டன. சமையல் எரிபொருட்களின் விலைச்சூத்திரத்துக்கு, இரண்டு தரப்பினரும் ஏற்கனவே இணங்கியிருந்த போதும், போக்குவரத்து மற்றும் ஏனைய செலவுகள் காலத்துக்கு காலம் அதிகரித்து வருவதால், சமையல் எரிவாயுவின் விலை அதிகரிப்பை மீளாய்வு செய்யுங்கள், என்று அமைச்சர்களிடம், லிட்ரோ எரிவாயு லங்கா நிறுவனத்தின் பிரதிநிதிகள் அழுத்தமாகத் தெரிவித்தனர். உலகசந்தையில் பெற்றோலியப் பொருள்களின் விலை அடிக்கடி அதிகரித்தாலும், அரசு எரிவாயு உட்பட்ட நுகர்வுப் பொருள்களின் விலையை அதிகரிக்க இடமளிக்கமாட்டாது. நுகர்வோரை பாதுகாப்பதற்கே நாம் முன்னுரிமை வழங்குகின்றோம், என்று அமைச்சர் ரிசாட் பதியுதீன் தெரிவித்தார்.

2007ஆம் ஆண்டு தொடக்கம், டீசல் விலை தொடர்ச்சியாக அதிகரித்துவருவதால், சமையல் எரிவாயுவைக் கொண்டு செல்லும் போக்குவரத்துச் செலவும் படிப்படியாக அதிகரித்து விட்டது. தொழிற்சாலைகள் இயங்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. சமையல் எரிவாயுவின் விலையை மீளாய்வு செய்யுமாறு அவர்கள் இந்தச் சந்திப்பின் போது கோரிக்கை விடுத்தனர்.

'சமையல் எரிவாயு விநியோகிப்பாளர்கள் தொடர்ந்தும் தமது சேவையை, நுகர்வோரை பாதிக்காத வகையில் மேற்கொள்ள வேண்டும். உலக சந்தையில், பன்னாட்டு மசகு எண்ணெயின் விலை உயர்வடைந்துள்ளதால், இலங்கையர்கள் பொருளாதார ரீதியில் பாதிக்கப்பட்டு வருகின்றனர். சமையல் எரிவாயுவின் விலையை அதிகரித்தால், அது நுகர்வோரை மேலும் துன்பத்துக்கு உள்ளாக்கும்' என்று அமைச்சர் ரிசாட் தெரிவித்தார்.

லிட்ரோ எரிவாயு லங்கா நிறுவனத்தின் பிரதிநிதிகள் விலைச்சூத்திரம் தொடர்பான முன்மொழிவொன்றை அமைச்சரிடம் கையளித்தனர்.

அதனைப் பெற்றுக்கொண்ட அமைச்சர் ரிசாட் பதியுதீன், வாழ்க்கைச்செலவு தொடர்பான அமைச்சரவையின் உப குழுவிடம் சமர்ப்பித்து, இதுதொடர்பில் பரிசீலிப்போம் என்று உறுதியளித்தார். (5.56)

# வவுனியாவில் தொடரும் மழை குளம் உடைப்பெடுக்கும் அபாயம்!

## சீர் செய்யும் பணி மும்முரம்

வவுனியா, ஒக். 19
வவுனியா மாவட்டத்தில் பூம்புகார் பிரதேசத்தில் உள்ள வைராமூன்றுமுறிப்பு குளம் உடைப்பெடுக்கும் நிலைமை ஏற்பட்டுள்ளது. இரண்டு இடங்களில் ஏற்பட்ட வெடிப்புக் காரணமாக 2 அடி நீர் வெளியேறியுள்ளது. இதனையடுத்து அவசர அவசரமாக அதனை மறுசீரமைக்கும் பணி முழுவீச்சாக முன்னெடுக்கப்பட்டுள்ளது.

வவுனியாவில் மூன்று நாள்களாகத் தொடரும் மழையை அடுத்து குளத்துக்கு நீர் வரத்து அதிகரித்துள்ளது. இந்த நிலையில் குளத்தின் அணைக்கட்டுப் பகுதியில் இருந்து நீர்க்கசிவு ஏற்பட்டு அணைக்கட்டு உடைப்பெடுக்கும் அபாயம் காணப்பட்டது.

மாவட்டச் செயலரின் கவனத்துக்கு கொண்டு செல்லப்பட்டதையடுத்து மாவட்டச் செயலக உத்தியோகத்தர்கள், கமநல சேவைத் திணைக்கள அதிகாரிகள் குளத்தை நேரில் ஆராய்ந்தனர்.

உடனடியாக தடுப்புப்பணிகளை முன்னெடுக்க வேண்டிய அவசிய நிலைமை காணப்பட்டமையில். கமநல சேவைத் திணைக்களம் மற்றும் மாவட்ட இடர் முகாமைத்துவப் பிரிவின் உதவியுடன் 4 ஆயிரம் வெற்றுப் பைகளில் மண் நிரப்பி அணைக்கட்டைப் பாதுகாக்கும் முயற்சி மேற்கொள்ளப்பட்டது. இந்தப் பணியில் அந்தப் பகுதி மக்கள் மற்றும் இராணுவத்தினர் ஈடுபட்டனர். (5.105.110)

# பன்னாட்டு இளைஞர் மாநாட்டுக்கு வவுனியா இளைஞன் பயணம்

வவுனியா, ஒக். 19
வவுனியா மாவட்ட இளைஞர் நாடாளுமன்ற உறுப்பினரும், தமிழ்த் தேசிய இளைஞர் கழகத்தின் தலைவருமான ஶ்ரீகரன் கேசவன், பேண்தகு அபிவிருத்தி இலக்குகளின் முதலாவது பன்னாட்டு இளைஞர் மாநாட்டில் பங்குகொள்வதற்காக பஹ்ரைனுக்கு நாளை பயணமாகிறார். இந்த மாநாடு 21ஆம் திகதி முதல் 25ஆம் திகதி வரை பஹ்ரைன் நாட்டின் தலைநகரான மனாமாவில் மிகவும் பிரமாண்டமான முறையில் நடைபெற இருக்கின்றது.

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் புலமைப் பரிசில் மூலம் தெரிவுசெய்யப்பட்டு இலங்கை நாட்டை பிரதிநிதித்துப்படுத்தி மாநாட்டில் பங்குகொள்ளும் இளையோரில் இவர் ஒருவரே தமிழராவார். (5.110)

# பொலிஸாரை ஊக்குவிக்க ஊடகங்கள் முன்வர வேண்டும்

## மத்தும பண்டார தெரிவிப்பு

கொழும்பு, ஒக்.19
பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கான பதவி உயர்வு வழங்குவதற்கான சிறப்பு திட்டம் தொடர்பிலும் அரசுடன் தாம் கலந்துரையாடல்களை மேற்கொண்டுள்ளதாக சட்ட ஒழுங்கு அமைச்சர் ரஞ்சித் மத்தும பண்டார தெரிவித்தார்.

நாட்டில் திட்டமிட்ட குற்றச் செயல்கள், பாலியல் வன்கொடுமைகள், கொள்ளை, கொலை மற்றும் போதைப்பொருட்கள் தொடர்பான குற்றச்செயல்கள் கடந்த மூன்று வருடக் காலப்பகுதியில் வெகுவாக குறைக்கப்பட்டுள்ளமை தொடர்பில் பொலிஸ்மா அதிபர் தலைமையிலான குழுவினரை கௌரவப்படுத்த நாம் கடமைபட்டுள்ளதாகவும் மேலும் தெரிவித்தார்.

மேல்மாகாண அழகியற் கலையரங்கத்தில் இன்று இடம்பெற்ற திறமையான வெளிப்படுத்தல்களை கொண்ட பொலிஸாருக்கு பொலிஸ்மா அதிபரின் நிதியத்தினால் வழங்கப்படும் பணப்பரிசில்களை வழங்கி வைக்கும் நிகழ்வில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில்,
ஏனைய ஊழியர்கள் போல் 8 மணிநேரம் மாத்திரம் கடமையாற்றுவோரல்ல பொலிஸார். இவர்கள் 24 மணிநேரம் கடமையாற்றினாலேயே நாட்டின் சட்ட ஒழுங்கு நடைமுறைப்படுத்தப்படுவதோடு சமாதானமும் சுதந்திரமும் நிலைப்படுத்தப்படும். இதுவே பிரஜைகள் சுதந்தரமாக வாழக்கூடிய சந்தர்ப்பத்தை ஏற்படுத்தி கொடுக்கும்.

இவ்வாறானவர்கள் கௌரவிக்கப்பட வேண்டியவர்கள் ஊடகங்கள் பிழைகளை சுட்டிக்காட்டுவதோடு நின்று விடாமல் பொலிஸாரின் திறமைகள் குறித்த கௌரவத்தையும் பெற்றுக்கொடுத்திட முன்வரவேண்டும். எனத் தெரிவித்தார்.

# பெற்றோர் இல்லாத நேரத்தில் சல்லாபித்த காதலர் சிக்கினர்

கொழும்பு, ஒக். 19
பாடசாலை மாணவிகளான இருவர், தமது காதலர்களுடன் தகாத நடவடிகையில் ஈடுபட்ட போது மாணவிகளில் ஒருவர் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளார். கொழும்பிலுள்ள பிரபல பெண்கள் பாடசாலையில் கல்வி பயிலும் மாணவிகளே இந்தச் சம்பவத்தில் தொடர்புபட்டுள்ளனர். பாடசாலை செல்வதாகக் கூறி வீட்டை விட்டு சென்ற மாணவிகள் இருவர், காதலர்களுடன் மீகொட பொலிஸ் பிரிவிலுள்ள ஒரு மாணவியின் வீட்டுக்குச் சென்று தகாத நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர். சம்பவம் தொடர்பில் ஒரு மாணவி மற்றும் அவரது காதலனை மீகொட பொலிஸார் கைது செய்துள்ளனர். கைது செய்யப்பட்ட மாணவி மருத்துவப் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார். அவர் வன்புணர்வுக்கு உள்ளாகியுள்ளார் எனச் சட்ட மருத்துவர் தெரிவித்துள்ளார்.

ராஜகிரிய பிரதேச பாடசாலையில் கல்வி கற்கும் இந்த மாணவிகள் இருவர் அந்த பிரதேச பாடசாலை மாணவர்கள் இருவருடன் காதல் தொடர்பு ஏற்படுத்திக் கொண்டுள்ளனர்.

பட்டவல வீட்டில் வசிக்கும் மாணவி தனது பெற்றோர் வீட்டில் இல்லாத போது தனது காதலனையும், நண்பியையும், அவரின் காதலனையும் வீட்டுக்கு அழைத்துச் சென்றுள்ளார்.

இந்தச் சந்தர்ப்பத்தில் மாணவியின் தந்தை திடீரென வீட்டிற்கு செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

வீட்டினுள் யாரோ இருப்பதனை அவதானித்த தந்தை வீட்டுக்குப் பின்னால் மறைந்திருந்து பார்த்துள்ளார். திடீரென கதவை திறந்த போது மாணவியின் காதலன், தந்தையைத் தாக்கிவிட்டுக் காதலியை அங்கிருந்து அழைத்துச் சென்றுள்ளார். அவ்வாறு சென்றவர்கள் தொடர்பில் எவ்வித தகவலும் கிடைக்கவில்லை.

சம்பவம் தொடர்பில் பொலிஸார் தீவிர விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# புதிய வகை எரிபொருளை அறிமுகம் செய்யத் திட்டம்

கொழும்பு, ஒக் 19
இலங்கையில் புதிய வகை எரிபொருளை அறிமுகம் செய்யப் பெற்றோலிய வள அபிவிருத்தி அமைச்சு திட்டமிட்டுள்ளது.

குறைந்த செலவில் முச்சக்கரவண்டிகளுக்குப் பயன்படுத்தக் கூடிய வகையில் புதிய எரிபொருள் அறிமுகம் செய்யப்படவுள்ளது.

அதற்கமைய ஒக்ரேய்ன் 87 அல்லது குறைந்த ஒக்ரேய்ன் ரக எரிபொருள் வகை ஒன்றை அடுத்த மாதம் சந்தையில் வெளியிடுவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.

நடைமுறையில் உள்ள எரிபொருளின் விலையை விடவும் மிகவும் குறைந்த விலையில் புதிய எரிபொருள் விநியோகம் செய்யப்படவுள்ளது.

புதிய எரிபொருள் முச்சக்கர வண்டிகளுக்கு மாத்திரமன்றி, உந்துருளிகளுக்கும் பயன்படுத்த முடியுமா என்பது தொடர்பில் தற்போது ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறன. முச்சக்கரவண்டி சாரதிகளுக்கு நன்மையை ஏற்படுத்தக் கூடிய புதிய எரிபொருள் திட்டம் வெற்றி பெறும் என்று அமைச்சர் அர்ஜுன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

சமகாலத்தில் இலங்கையில் எரிபொருளின் விலை உயர்ந்த நிலையில் காணப்படுகிறது. இந்த நிலையில் குறைந்த விலையில் எரிபொருள் விற்பனை செய்யப்படும் பட்சத்தில் சாரதிகளுக்கும், மக்களுக்கும் பெரும் நன்மையை ஏற்படுத்தும் எனச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது

# கள்ளமணல் ஏற்றிச்சென்ற வாகனம் விபத்து

வடமராட்சி, ஒக். 19
கள்ளமணல் ஏற்றிச்சென்ற கன்டர் ரக வாகனம் மதிலுடன் மோதி விபத்துக்குள்ளானது.

இந்தச் சம்பவம் மாலுசந்திப்பகுதியில் நேற்றுக் காலை 8 மணியளவில் இடம்பெற்றது.

கள்ளமணல் ஏற்றிச்சென்ற கன்டர் ரக வாகனத்தை நெல்லியடிப் பொலிசார் இடை மறித்த பொழுது சாரதி வாகனத்தை நிறுத்தாது செல்ல முற்பட்டுள்ளார்.

பொலிஸார் வாகனத்தைத் துரத்தி சென்ற பொழுது திக்கம் பகுதியில் வீட்டின் மதிலுடன் மோதி வாகனம் விபத்துக்குள்ளானது. சந்தேகநபர்கள் தப்பியோடியுள்ளனர். வீட்டின் மதிலுடன் தொலைத்தொடர்புத் தூண் ஒன்றும் உடைந்துள்ளது. மணலுடன் வாகனத்தை நெல்லியடிப் பொலிஸார் கைப்பற்றியதுடன் மேலதிக விசாரணைகளையும் மேற்கொண்டுவருகின்றனர். (26)



# பொருளாதாரப் பிரச்சினைக்குத் தீர்வாக 5,000 ரூபா தாளை இல்லாது செய்க

## பிச்சைக்காரன் திரைப்படப் பாணியில் யோசனை

**கொழும்பு, ஒக். 19**

**நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடிக்குத் தீர்வாக 5 ஆயிரம் ரூபா நாணயத் தாளை இல்லாமல் செய்யுமாறு நீதியான சமூகத்துக்கான தேசிய அமைப்பின் ஒருங்கிணைப்பாளர் சரத் விஜேசூரிய அரசுக்கு ஆலோசனை முன்வைத்துள்ளார்.**

நீதியான சமூகத்துக்கான தேசிய அமைப்பின் செயலகத்தில் அண்மையில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாட்டில் இடம்பெறும் பொருளாதார நெருக்கடிக்கு இறக்குமதி செய்யும் பொருள்களுக்கு வரையறை இடுவதை விடவும், அரசில் உள்ள அரசியல்வாதிகள் முன்னெடுக்கும் பெரிய செலவிலான நிகழ்வு களை நிறுத்துவது தான் மிகவும் பொருத்தமான நடவடிக்கை. என்.எம். பெரேரா நிதி அமைச்சராக இருந்த காலத்தில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடியைச் சீர்செய்வதற்கு அன்றிருந்த 50 ரூபா மற்றும் 100 ரூபா நாணயத் தாள்களை இல்லாமல் செய்ய தீர்மானித்தார். இதனால் பெட்டிகளில் அடுக்கி வைக்கப்பட்டிருந்த கறுப்புப் பணத்தை வெளியே கொண்டுவர முடிந்தது.

இதேபோன்று, இன்றும் 5 ஆயிரம் ரூபா நாணயத் தாளை இல்லாது செய்வதன் ஊடாகக் கடந்த காலத்தில் அடைந்த நன்மையை விடவும் தற்காலத்தில் பயன்கள் அதிகமாகும். பல்வேறு முறைகளில் சட்ட முரணான விதத்தில் பணத்தைப் பதுக்கி வைத்திருப்பது தொடர்பில் தகவல்கள் தெரிவிக்கப்படுகின்றன. சில அரசியல்வாதிகளிடம் உள்ள 5 ஆயிரம் ரூபா நாணயத் தாள்கள் நிரப்பிய பொதிகள் விகாரைகளிலும், கொள்கலன்களிலும் பதுக்கி வைக்கப்பட்டிருப்பதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன - என்றார்.

தென்னிந்தியத் திரைப்படமான பிச்சைக்காரன் திரைப்படத்தில் கறுப்புப் பணத்தை வெளிக்கொணர 2 ஆயிரம் ரூபா நாணயத் தாள் களை ஒழிக்க வேண்டும் என ஆலோசனை கூறும் காட்சி படமாக்கப்பட்டிருந்தது. அதையொட்டிய ஆலோசனையையே சரத் விஜேய சூரிய அரசுக்கு முன்வைத்துள்ளார்.

## மறுவாழ்வளிக்கப்பட்ட பட்டதாரிகளுக்கு வேலை வாய்ப்பு

யாழ்ப்பாணம்.ஒக் 19

மறுவாழ்வளிக்கப்பட்ட பட்டதாரிகளை அரச நியமனங்களுக்கு உள்ளீர்க்கும் நோக்கில் பெயர் விவரங்கள் பிரதேச செயலர் பிரிவுகளில் சேகரிக்கப்பட்டு வருவதாக பிரதேச செயலக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

மறுவாழ்வளிக்கப்பட்ட பட்டதாரிகளை அரச நியமனங்களுக்கு உள்வாங்குதல் தொடர்பாக சமர்பிக்கப்பட்ட அமைச்சரவை பத்திரத்துக்கு அமைவாக பட்டதாரிகளின் விவரங்கள் சேகரிக்கப்படவுள்ளன. யாழ்ப்பாண, மாவட்ட செயலகத்தின் ஊடாக அனைத்துப் பிரதேச செயலக பிரிவுகளிலும் உள்ள பட்டதாரிகள் தங்கள் விவரங்களைப் பதிவு செய்ய வேண்டும். இது தொடர்பாக மறுவாழ்வு அமைச்சின் இணைப்புச் செயலர் ஜே.பிரமிளஸ் கொஸ்தா மாவட்ட செயலருக்கு கடந்த 8 ஆம் திகதி கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளார். பட்டதாரிகளின் விவரங்களை சேகரிக்குமாறு நேற்றுமுன்தினம் பிரதேச செயலர்களுக்குக் கடிதம் அனுப்பப் பட்டுள்ளது. பெயர், முகவரி, அடையாள அட்டை இலக்கம், மறுவாழ்வு பெற்று வெளியேறிய திகதி உள்ளிட்ட விவரங்கள் சேகரிக்கப்படவுள்ளன. மறுவாழ்வு பெற்ற பட்டதாரிகள் தங்கள் விவரங்களை பிரதேச செலகங்களில் பதிவு செய்ய முடியும் என்று தெரிவிக்கப்பட்டது. (7)

## கசிப்பு வைத்திருந்தவருக்கு தண்டம் விதிப்பு

4 ஆயிரத்து 500 மில்லிலீற்றர் கசிப்பு வைத்திருந்த கொடிகாமம் நாவலடியைச் சேர்ந்தவருக்கு சாவகச்சேரி நீதிமன்றில் 35 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டது. தண்டத் தொகை செலுத்தத் தவறின் 5 மாதசிறைத்தண்டனையும் விதிக்கப்பட்டது. கொடிகாமம் பொலிஸாரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு நேற்றுமுன்தினம் விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது சந்தேகநபர் குற்றத்தை ஒப்புக் கொண்டதையடுத்து தண்டம் விதிக்கப்பட்டது. அனுமதிப் பத்திரமின்றி அரச சாராயம் விற்பனை செய்த மிருசுவில் வடக்கைச் சேர்ந்த பெண்ணுக்கு 5 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டது. (9)

## ஐ.தே.க.வின் பங்காளியே எப்.சி.ஐ.டி. என்கிறார் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ

ஐக்கிய தேசிய கட்சியின் பங்காளியாகவே நிதி குற்றப் புலனாய்வுப் பிரிவு செயற்படுகின்றது. தலைமை அமைச்சர் ரணில் விக்ரமசிங்கவின் ஆலோசனைகளின் நிமித்தமே இந்தப் பிரிவினர் செயற்படுகின்றனர் என முன்னாள் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ குற்றஞ்சாட்டியுள்ளார்.

பொய்யான குற்றச்சாட்டுக்களை தொடுத்து தமது நோக்கத்தினை நிறைவேற்ற முயற்சித்த ஐக்கிய தேசியக் கட்சியின் எண்ணம் தற்போது முறியடிக்கப்பட்டுள்ளது எனவும் தெரிவித்தார்.

முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்சவின் உத்தியோகப்பூர்வ இல்லத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துரைக்கும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் தெரிவித்ததாவது:


என் மீது பொய்யான நிதிமோசடி குற்றம் சாட்டி அரசு அநீதி இழைத்துள்ளது. நிதிக் குற்றப்புலனாய்வுப் பிரிவு ஐக்கிய தேசியக் கட்சியின் நோக்கங்களை நிறைவேற்றும் ஒரு அமைப்பு மாத்திரமே அந்நிறுவனம் மக்களுக்குச் சேவை வழங்கும் அமைப்பு அல்ல.

முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்சவின் ஆட்சி காலத்தில் மக்களுக்காக உருவாக்கப்பட்ட தாபனங்கள் இன்று தலைமை அமைச்சர் ரணில் விக்ரமசிங்கவின் தேவைகளுக்கு மாத்திரமே செயற்படுகின்றன இந்நிறுவனங்களில் சாதாரண மக்கள் ஒருபோதும் நீதியினை எதிர்பார்க்க முடியாது. ஒரு தரப்பினரது அழுத்தங்களின் ஊடாகவே அரசு இன்று செயற்படும் நிலைமைக்குத் தள்ளப்பட்டுள்ளது - என்றார் .

## இன முறுகலைத் தோற்றுவிக்கும் கல்முனை மாநகரசபை முதல்வர்

### மக்கள் குற்றச்சாட்டு

கல்முனை.ஒக் .19



கல்முனை பிரதேச செயலக வளாகத்தில் அமைக்கப்பட்டு வருகின்ற இந்து ஆலயத்தை அங்கிருந்து அகற்றுவதற்காக கல்முனை மாநகர சபை முதல்வர் ஜனாப் றக்ஹீப் நீதி மன்றில் தொடர்ந்த வழக்கை அடுத்து அங்கு பதற்றம் நிலவி வருகின்றது.

கல்முனை மாநகரசபை மேஜருக்கு சட்டவிரோதமாக கல்முனை பிரதேச செயலக வளாகத்திற்குள் அமைக்கப்பட்டுள்ள கட்டிடத்தை அகற்றுமாறு கிடைக்கப்பட்டுள்ள மனுவை அடுத்து, வழக்கினை நேற்றுமுன்தினம் தொடர்ந்துள்ளதாகத் தெரியவருகின்றது.

கல்முனை வடக்குப் பிரதேச செயலகத்தில் ஊழியர்களால் வழிபடுவதற்காக அமைக்கப்பட்டுள்ள இந்து ஆலயத்தை அகற்றுவதற்காக, கல்முனை நீதி மன்றத்தில் வழக்கு ஒன்றை கல்முனை மாநகரசபை முதல்வர் தாக்கல் செய்துள்ளார். இது இந்தப் பிரதேச தமிழ் மக்களிடம் கடும் அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ளது.

கல்முனை வடக்கு பிரதேச செயலகத்தில் அமைக்கப்பட்டுள்ள இந்தக் கட்டடம் கல்முனை மாநகரசபைக் குட்பட்ட பகுதிக்குள் அமைக்கப்பட்ட சட்டவிரோதமான கட்டடம் எனக் குறிப்பிட்டே ,இந்தச் சிறு ஆலயத்தை அகற்ற நடவடிக்கை எடுக்குமாறு வழக்குத் தாக்கல் செய்துள்ளார்.

வழக்கை விசாரித்த நீதிபதி இது தொடர்பான ஆவணங்களை 14 நாள்களுக்குள் கல்முனை வடக்குப் பிரதேச செயலர் சமர்ப்பிக்க வேண்டும் எனத் தீர்ப்பு வழங்கியுள்ளார்.

கல்முனை வடக்குப் பிரதேச செயலகம், தனியான நிர்வாகம், ஆளணி, முகாமைத்துவம், நிர்வாக எல்லைகளுடன் இயங்குகின்றபோதும், இதனைத் தரமுயர்த்தவிடாது கடந்த 30 வருடங்களாக சில முஸ்லிம் அரசியல்வாதிகள் தங்களின் அரசியல் அதிகாரங்களைப் பயன்படுத்தித் தடுத்து வருகின்ற அதேவேளை, கல்முனை வடக்குப் பிரதேச செயலகத்தில், ஊழியர்களால் வழிபட்டு வரும் வணக்கத் தலத்தை அகற்றுவதற்குத் தற்போது சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியை பிரதிநிதித்துவப்படுத்தும் கல்முனை மாநகரசபை முதல்வர் வழக்குத் தாக்கல் செய்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

இச்செயல் இனங்களிடையே இனவாதத்தை தூபமிட்டு வளர்க்கும் செயற்பாடா? என்ற கேள்வியையும் மக்கள் எழுப்பியுள்ளனர் .

நேற்றுமுன்தினம் நடைபெற்ற கல்முனை மாநகரசபை அமர்வில், சபையின் எதிர்க்கட்சியைச் சேர்ந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர்கள் முதல்வரை நோக்கி ஆலய வழக்கு தாக்கல் தொடர்பாக கேள்வி கேட்டதுடன், இந்த வழக்கை திரும்பப் பெறுமாறும், இது இனங்களுக்கிடையில் ஒற்றுமையை சீர்குலைக்கும் செயல் எனவும் கருத்துக்ளை முன்வைத்தனர். இதன் போது மாநகரசபை முதல்வர் நீதிமன்றில் வழக்கு இருப்பதால் இது பற்றிக் கருத்துக்கூற முடியாது என்று தெரிவித்தார் என்றும் அதையடுத்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர்களுக்கும், முதல்வருக்கும் காரசாரமான விவாதம் ஏற்பட்டதாகவும், இதன் பிற்பாடு சபையின் கூட்டத் தொடர் ஒத்திவைக்கப்பட்டதாகவும் அறியமுடிகின்றது.

நேற்று முன்தினம் கல்முனை வடக்குத் தமிழ்ப் பிரிவு பிரதேச செயலக வளாகத்திற்குள் கூட்டமைப்பின் உறுப்பினர்களும்,பிரதேசவாழ் இளைஞர்களும் கூடியிருந்தனர். இதன் பின்பு சிறிய கலந்துரையாடல்கள் இடம்பெற்றன. அப்போது கலாசாரம் மற்றும் மத விழுமியங்களைப் பேணிக் காப்பதற்காக நீதித் துறையை மக்களைக் கொண்டே அணுகுவதாகவும் அங்கு கூடியிருந்த இளைஞர்கள் தெரிவித்தனர்.

இதேவேளை கல்முனைமாநகர சபையில் ஏற்பட்ட இவ் விரும்பத்தகாத நிகழ்வு இனங்களுக்கடையேயான நல்லுறவைப் பாதிப்படையச் செய்யும் என்பதை அனைவரும் கவனத்தில் கொள்ளவேணடும். சகல இன மதமக்களின் வணக்கஸ்தலங்கள் அனைவராலும் மதிக்கப்பட வேண்டியதொன்றாகும். இறை நம்பிக்கை கொண்ட அனைவரும் மாற்று மதத்தினரின் வழிபாட்டுத் தலங்களைமதித்து,பாதுகாக்கவேண்டும். இதைத்தான் ஒவ்வொருமதமும் போதிக்கின்றது. இதனைஉணர்ந்துகொண்டால் மாற்றுமதத்தினரின் உள்ளங்களைநோகடிக்கும் எண்ணம் எவருக்கும் ஏற்படாது. எனத் தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் நாயகம் வீ.ஆனந்தசங்கரி தெரிவித்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

# எரிபொருள் விலைச் சூத்திரம் சர்ச்சைக்குரியதாகவுள்ளது

## மங்கள சமரவீர விளக்கமளிப்பு

கொழும்பு ,ஒக் .19

துறைமுகத்திலிருந்துதரையிறக்குவதற்கான செலவீனம், செயன்முறை செலவீனம், நிர்வாக செலவு மற்றும் வரி உள்ளிட்ட நான்கு விடயங்களை அடிப்படையாகக் கொண்டே எரிபொருள் விலைச் சூத்திரம் தயாரிக்கப்பட்டுள்ளது என நிதி அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்தார்.

இதன் மூலம் உலக சந்தையில் எரிபொருள் விலை அதிகரிப்புக்கேற்ப உள்நாட்டிலும் விலை அதிகரிப்பதைப் போன்று உலக சந்தையில் விலை குறையும், உள்நாட்டிலும் குறைவடையும் எனவும் தெரிவித்தார்.

நிதி அமைச்சில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

தேர்ந்தெடுக்கப்பட்ட சில நாடுகளில் எம்மால் அவதானிக்கப்பட்ட வகையில் இம்மாதம் எரிபொருள்களுக்கான வரியை நோக்கும் போது இந்தியாவில் பெற்றோலுக்கு 82.17 வீதமும், டீசலுக்கு 57 வீதமும், இங்கிலாந்தில் பெற்றோலுக்கு 178 வீதமும், டீசலுக்கு 180.27 வீதமும் வரி அறவிடப்படுகின்றது. எனினும் இலங்கையில் பெற்றோலுக்கு 53.68 வீதமும், டீசலுக்கு 25.48 வீதம் மாத்திரமே வரி அறவிடப்படுகின்றது.

இவை அனைத்தையும் கவனத்தில் கொண்டே எரிபொருள் விலை சூத்திரம் தயாரிக்கப்பட்டுள்ளது. இவற்றை அடிப்படையாகக் கொண்டு அடுத்த மாதம் 10 ஆம் திகதிக்கான எரிபொருள் விலையைக் கணிப்பிட முடியும். எனினும் இவ்வாறான மாற்றங்களுக்கு அமெரிக்கத் தலைவரின் சில விடயங்களும் காரணமாக அமைகின்றன - என்றார்.

## பருத்தித்துறை நவீன சந்தையின்

# மரக்கறி விற்பனைப் பகுதி தொடர்ந்தும் மேல்தளத்தில்

வடமராட்சி, ஒக். 19

**பருத்தித்துறை நவீன சந்தையின் மேல் தளத்தில் இயங்கி வரும் மரக்கறி விற்பனைப்பகுதிதொடர்ந்தும்அங்கேதான் இயங்கவுள்ளது. நகரத்தில் வதியும் பொதுமக்கள், புத்திஜீவிகள், நலன் விரும்பிகள் ஆகியோரின் அபிப்பிராயங்களுக்கமைய இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.**

மேல்தளத்தில்இயங்கிவரும்மரக் கறி விற்பனைப் பகுதியை நவீன சந்தைக் கட்டடத்தின் கீழ் தளத் துக்குமாற்றவேண்டும்என்றுவலி யுறுத்தி மரக்கறிச் சந்தை வியாபா ரிகள் அண்மையில் போராட்டம் நடத்தினர். இது தொடர்பாக பருத் தித்துறை நகர சபை நிர்வாகம் கலந்துரையாடல்களைநடத்தியது டன்இறுதியாகநகரபொதுமக்கள், புத்தி ஜீவிகள், நலன்விரும்பிகள் ஆகியோருடனான சந்திப்பையும் நடத்திக் கருத்துக்களைப் பெற்றுக் கொண்டது. பருத்தித்துறை நகர சபை மண்டபத்தில் சபைத் தலை வர் யோ.இருதயராஜா தலைமை யில் அண்மையில் இடம்பெற்ற இந்தச்சந்திப்பில்நகரசபை உறுப் பினர்களும்கலந்துகொண்டனர். இந்தச் சந்திப்பில் மரக்கறி விற்ப னைப் பகுதி மேல் தளத்திலேயே செயல்படவேண்டும்என்றகருத்து முன்வைக்கப்பட்டதையடுத்து அது ஏற்றுக்கொள்ளப்பட்டது. எனி னும் முதியோர்களின் நன்மை கருதி தற்போது மேல் தளத்துக்கு போகும்பாதையைதொழில்நுட்ப வல்லுநர்களின்ஆலோசனையுடன் திருத்தியமைப்பதென இந்தச்சந்திப் பில் தீர்மானிக்கப்பட்டது. (ம-173)



## 'வலிகாமத்தின் வர்ணங்கள்' சிற்பங்களின் கண்காட்சி

யாழ்ப்பாணம். ஒக். 19

வலிகாமம் கல்வி வலயத்தின் அனுசரணையுடன் வலயத்திற்குட்பட்ட பாடசாலைகளில் சித்திரப்பாடத்தை கற்கும் மாணவர்களின் கை வண்ணத்தில் உருவான சிற்ப சித்திரங்களாலான கண்காட்சி நிகழ்வு சுன்னாகம்ஸ்கந்தவரோதயக்கல்லூரியில்கடந்தவெள்ளிமற்றும்சனி ஆகிய தினங்களில் இடம்பெற்றன.

வலிகாமம்வலயக்கல்விப்பணிப்பாளர்எஸ்.சந்திரராஜாதலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் வடமாகாணக் கல்விப் பணிப்பாளர் வ.உதயகுமார் முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்டு கண்காட்சியை ஆரம்பித்து வைத்தார்.

(ம-422)

# நவராத்திரி நிகழ்வுகள்

**நீர்வேலி கந்தசுவாமி கோயில்**

நீர்வேலிகந்தசுவாமிகோயிலில்இன்றுவெள்ளிக் கிழமை காலை 7 மணிக்கு மானம்பூ உற்சவம் இடம்பெறும். காலையில் சிறப்புப் பூசை வழிபாடு களை அடுத்து முருகப் பெருமான் எழுந்தருளி வாழைவெட்டும்நிகழ்வு இடம்பெறும். தொடர்ந்து முதலாவது ஐப்பசி வெள்ளியை முன்னிட்டும் கேதார கௌரி விதம் ஆரம்பமாவதை ஒட்டியும் சிறப்பு வழிபாடு என்பன நடைபெறும்.

**மனோன்மணி அம்மன் ஆலயம்**

நீர்வலி தெற்கு மனோண்மணி அம்மன் ஆலயத் தில் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு நவராத்திரி பூசை சிறப்பு வழிபாடுகள் இடம்பெற வுள்ளன. அம்மனுக்கு சிறப்பு வழிபாடு மற்றும் கற்பூரவழிபாடுகள், நவராத்திரிபாமாலைஎன்பன இன்று இடம்பெறவுள்ளன.

**கொழும்புத்துறை மேற்கு சனசமூக நிலையம்**

கொழும்புத்துறைமேற்குசனசமூகநிலையம்நடத் தும் நவராத்திரி விழா இன்று வெள்ளிக்கிழமை நிலையத்தலைவர் இ.தனஞ்சயன்தலைமையில் நடைபெறவுள்ளது. காலை 9 மணிக்கு நிலைய முன்பள்ளிமாணவர்களுக்கானநவராத்திரிபூசை வழிபாடுகள் மற்றும் கலை நிகழ்வுகள் என்பன இடம்பெறவுள்ளன. தொடர்ந்து இரவு 7 மணிக்கு சனசமூக நிலையத்தில் சிறப்பு வழிபாடுகள் இடம் பெறவுள்ளன.

**அரசகேசரிப் பிள்ளையார் ஆலயம்**

நீர்வேலி அரசகேசரிப் பிள்ளையார் ஆலயத்தில் மானம்பூதிருவிழாஇன்றுவெள்ளிக்கிழமைநடை பெறும். இரவு 7 மணிக்கு சிறப்பு வழிபாடு இடம் பெற்று விநாயகப்பெருமான் நீர்வேலி வடக்கு மீனாட்சிஅம்மன்ஆலயத்துக்குஎழுந்தருளுவார். இரவு 9 மணிக்கு வாழைவெட்டும் நிகழ்வு இடம் பெறும்.

**அரியாலை சனசமூக நிலையம்**

அரியாலை சனசமூக நிலையம் நடத்தும் நவராத் திரி விழா இன்று வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு சனசமூக நிலைய முன்பள்ளியில் இடம் பெறும். நிலைய தலைவர் வி.சுதாகர் தலைமை யில்நடைபெறும்இந்தநிகழ்வில்சிறுவர்களுக்கான ஏடு தொடங்குதல் மற்றும் சமய வழிபாடுகள் என் பன நடைபெறும்.

**உடுவில் இந்து இளைஞர் மன்றம்**

உடுவில் இந்து இளைஞர் மன்றத்தின் நவராத்திரி விழா இன்று காலை 9 மணிக்கு மன்ற மண்டபத் தில் தலைவர் தி.தியாகச்சந்திரன் தலைமையில் இடம்பெறவுள்ளது. சிறப்புப்பூசைவழிபாடுகளைத் தொடர்ந்து மாணவர்களுக்கான விளையாட்டுப் போட்டிகள், கலைநிகழ்வுகள் என்பன இடம்பெற வுள்ளன. (ம-17,35)

## தென்மராட்சிபிரதேசசெயலகத்தின் பன்னாட்டு சிறுவர் முதியோர் விழா

தென்மராட்சி பிரதேச செயலகத்தின் பன் னாட்டு சிறுவர் முதியோர் மற்றும் சிறப்புத் தேவையுடையோர் தின விழா இன்று பிற் பகல் 2 மணிக்கு தென்மராட்சி கலைமன்ற கலாசார மண்டபத்தில் நடைபெறும்.

பிரதேசசெயலர் திருமதிதேவந்தினிபாபுதலை மையில்நடைபெறும்நிகழ்வுக்குமுதன்மை விருந்தினராக வடமாகாண சமூக சேவை கள் திணைக்கள பணிப்பாளர் திருமதி செல் வரத்தினமும் சிறப்பு விருந்தினராக உலக தரிசன நிறுவன யாழ். பிராந்திய திட்ட முகா மையாளர்கொன்சகாஅனுராஜும், மதிப்புறு விருந்தினர்களாக சாவகச்சேரி டிறிபேக் கல் லூரிஅதிபர்செ.பேரின்பநாதன், சாவகச்சேரி அஞ்சலதிபர் ஏ.ஜே.ஐ.இன்பராஜ் லம்போட், தென்மராட்சி முதியோர் பேரவை தலைவர் மருத்துவர் இ.கந்தையா ஆகியோரும் கலந்துகொள்வர். (ம-9,159)



## கலையரங்கு திறப்பு விழா

சாவகச்சேரி, ஒக். 19

தென்மராட்சி தெற்கு கோவிலாக் கண்டி மகாவிஷ்ணு கலையரங்கு இன்று பிற்பகல் 3 மணிக்கு திறந்து வைக்கப்படவுள்ளது.

மகாவிஷ்ணு கடற்றொழிலாளர் சங் கத் தலைவர் சி.கஜேந்திரன் தலை மையில் நடைபெறும் நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக வட மாகாண சபை உறுப்பினர் கேசவன் சயந்தன், சிறப்பு விருந்தினர்களாக சாவகச்சேரிபிரதேசசபைத்தவிசாளர் க.வாமதேவன், சட்டத்தரணி நி. கேசாந் ஆகியோரும்கலந்துகொள்ள வுள்ளனர். (ம-9,159)

கோப்பாய் தொகுதிக்கான கிராமிய அபிவி ருத்திமற்றும்சமகாலஅரசியல்நிலமைகள் தொடர்பானகலந்துரையாடல்நேற்றுமுன் தினம்மாலை4.30மணியளவில்ஊரெழு பாரதி சனசமூக நிலைய முன்றலில் நடை பெற்றது.

வலி.கிழக்கு பிரதேசசபை உறுப்பினர் சி. அகீபன்தலைமையில்இடம்பெற்றஇந்தக் கலந்துரையாடலில் நாடாளுமன்ற உறுப்பி னர் தர்மலிங்கம் சித்தார்த்தன், மாகாண சபைஉறுப்பினர்கள்அ.பரஞ்சோதி, பா.கஜ தீபன், யாழ். மாநகரசபை உறுப்பினர் ப.தர் சானந்த், வலிகிழக்குபிரதேசசபைத்தலை வர்தி.நிரோஸ், பிரதேசசபைஉறுப்பினர்கள் இரா.செல்வராஜா, சு.சிவபாலன், ச.ரேணுகா மற்றும், சி.முகுந்தன், கிசோர், ஊரெழு கணேசா வித்தியாசாலை அதிபர் அன்ரன் பிறேம்ராஜ், பொது அமைப்புக்களின் பிரதி நிதிகள், சமூக ஆர்வலர்கள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

(ம-8)

## வாணி விழாக்கள்

**கோப்பாய்ஆசிரியகலாசாலை**

கோப்பாய் ஆசிரிய கலாசாலை யின் இந்து மன்றம் நடத்தும் வாணிவிழா இன்று வெள்ளிக்கி ழமைகாலை10மணிக்குஅதிபர் வீ.கருணலிங்கம் தலைமை யில் நடைபெறவுள்ளது. விழா வுக்குமுதன்மைவிருந்தினராக கொழும்புஅரசின்கல்விஅமைச் சின் செயற்றிட்டப் பணிப்பாளர் சைவப்புலவர்காரைகந்தையா பத்மானந்தன் கலந்து கொள் வார். சிறப்பு விருந்தினர்களாக வடக்கு மாகாணசபை உறுப்பி னர் சந்திரலிங்கம் சுகிர்தனும் கலாசாலையின் ஓய்வுநிலை விரிவுரையாளர் முருகேசு கௌரிகாந்தனும் கலந்துகொள் ளவுள்ளனர்.

**கலைவாணி சனசமூக நிலையம்**

அளவெட்டிதெற்குகலைவாணி சனசமூக நிலையம் நடத்தும் வாணிவிழா இன்று இரவு 7 மணிக்கு நிலைய முன்றலில் நிலையத்தலைவர்பிரசாந்தலை மையில் இடம்பெறவுள்ளது. 2014ஆம் ஆண்டு முதல் 2018 ஆம் ஆண்டு வரையிலான காலப்பகுதியில்புலமைப்பரிசில் பரீட்சையில்தோற்றிசித்திபெற்ற மாணவர்கள் இன்றைய நிகழ் வில்மதிப்புறுத்தப்படவுள்ளனர்.

**அளவெட்டி தெற்கு அ.மி.த.க. பாடசாலை**

அளவெட்டி தெற்கு அ.மி.த.க. பாடசாலையின் வாணிவிழா வும், சரஸ்வதிசிலைதிறப்புவிழா வும், கொடிப்பீடத் திறப்பு விழா வும், சிறுவர், முதியோர்தின நிகழ்வும் இன்றும் நாளையும் பாடசாலை அதிபர் எம்.சி.சுதாக ரன் தலைமையில் இடம்பெற வுள்ளன. முதல் நாள் நிகழ்வு இன்றுகாலை 9.35 மணிக்கும் நாளைய நிகழ்வு 10.05 மணிக் கும் பாடசாலையின் டானியல் பூவர் அரங்கில் இடம்பெறவுள் ளன. (ம-17)

# டெங்கு அற்ற பாடசாலையாக நுணாவில் அ.த.க. பாடசாலை

## தேசிய ரீதியான போட்டியில் தெரிவிப்பு

சாவகச்சேரி, ஒக். 19

தென்மராட்சி பிரதேசத்தில் டெங்கு அற்ற பாடசாலையாக நுணாவில் அ.த.க.பாடசாலை தெரிவு செய்யப்பட்டுள்ளது. பாடசாலை அமைந்துள்ள (ஜே/309) கிராம அலுவலர் பிரிவையும் டெங்கு அற்ற கிராம அலுவலர் பிரிவாக மாற்றுவதற்கு சாவகச்சேரி சுகாதாரத் திணைக்களத்தினர் ஏற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றனர்.

டெங்கு அற்ற பாடசாலையைத் தெரிவுசெய்வதற்கு தேசிய ரீதியில் போட்டிகள் நடத்தப்பட்டன. ஒவ்வொரு பொதுச் சுகாதார பரிசோதகர் பிரிவிலும் தலா ஒரு பாடசாலை வீதம் தெரிவு செய்யப்பட்டு டெங்கு தொடர்பான விழிப்புணர்வூட்டல் மேற்கொள்ளப்பட்டது.


தென்மராட்சி பிரதேசத்தில் சாவகச்சேரி சுகாதார பிரிவினரால் நடத்தப்பட்ட செயற்றிட்டங்களின் பிரகாரம் தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் மட்டுவில் பொது சுகாதார பரிசோதகர் பிரிவுக்குட்பட்ட கைதடி - நுணாவில் அ.த.க.பாடசாலை முதலிடத்தையும், கொடிகாமம் பொது சுகாதார பரிசோதகர் பிரிவுக்குட்பட்ட மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி இரண்டாமிடத்தையும், எழுதுமட்டுவாழ் பொது சுகாதார பரிசோதகர் பிரிவுக்குட்பட்ட உசன் இராமநாதன் மகா வித்தியாலயம் மூன்றாமிடத்தையும் பெற்றுக் கொண்டன. இந்தப் பாடசாலைகளுக்கான பணப்பரிசில்களும் சான்றிதழ்களும் சாவகச்சேரி சுகாதாரத் திணைக்களத்தினரால் வழங்கப்படவுள்ளன.

யாழ். மாவட்டத்தில் உள்ள பாடசாலைகளிடையே நடத்தப்பட்ட போட்டியில் முதலிடம் பெற்ற பாடசாலைகளில் யாழ். பிராந்திய சுகாதாரத் திணைக்களத்தினர் பரிசோதனைகளை மேற்கொண்டு வருகின்றனர் எனவும் இதில் மாவட்ட நிலையில் முதலிடத்தைப் பெறும் பாடசாலை மாகாண நிலைப் போட்டிக்கும் மாகாண நிலையில் முதலிடம் பெறும் பாடசாலை தேசிய நிலைக்கும் தெரிவு செய்யப்பட்டு பரிசில்களையும் சான்றிதழ்களையும் பெறவுள்ளன எனத் தெரிவிக்கப்பட்டது.

பிரதேச நிலையில் கைதடி - நுணாவில் அ.த.க.பாடசாலை முதலிடம் பெற்றதால் பாடசாலையில் கல்வி பயிலும் மாணவர்களுடன் சுகாதாரப் பகுதியினரும் இணைந்து பாடசாலை அமைந்துள்ள கிராம அலுவலர் பிரிவினையும் (ஜே/309) டெங்கு அற்ற கிராம அலுவலர் பிரிவாக மாற்றுவதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றனர். இந்தப் பகுதிகளில் அடிக்கடி பரிசோதனைகளை மேற்கொண்டு டெங்கு உற்பத்தியாகக் கூடிய நிலையில் அல்லாமல் துப்பரவாகக் காணப்படும் குடியிருப்புகளுக்கு டெங்கு அற்ற குடியிருப்பு என 'ஸ்ரிக்கர்' ஒட்டப்படுவதுடன் டெங்கு உருவாகக் கூடிய நீரேந்து பொருள்கள் காணப்படாத சாலைகளை டெங்கு அற்ற சாலையாக அறிவிக்கப்பட்டு விழிப்புணர்வு பதாகைகள் கட்டப்படவுள்ளன.

குடியிருப்புகளில் சேரும் உக்கக் கூடிய குப்பைகளை வளவுக்குள் வெட்டிப் புதைக்குமாறும் டெங்கு உற்பத்தியாகக்கூடிய பொலித்தின் பிளாஸ்ரிக் பொருள்களை கூடிய அளவு குடியிருப்புகளுக்குள் கொண்டு வருவதைத் தவிர்க்குமாறும் இரண்டு நாள்களுக்கு ஒரு தடவை குடியிருப்பினை அண்டிய சுற்றாடலைப் பார்வையிட்டு நீர் ஏந்து பொருள்கள் இல்லையென்பதை உறுதிப்படுத்திக் கொள்ளுமாறும் குடியிருப்பாளர்களுக்கு சுகாதாரப் பகுதியினர் அறிவித்துள்ளனர்.

(ம-9,159)



வெள்ளநீர் மேலாண்மைக்காக

# வேளாவில்குளத்தில் சீமெந்துக்குழாய்கள்

## சாவ. பிரதேச சபையில் தீர்மானம்

கொடிகாமம், ஒக். 19

மந்துவில்கிழக்கில் உள்ள வேளாவில் குளத்தில் மழை வெள்ளம் விரைவாக உள்ளே வரவும் மேலதிகமாகச் சேரும் வெள்ளநீர் வெளியேறவும் குளத்திற்கு சீமெந்துக் குழாய்கள் பொருத்த வேண்டும். இவ்வாறு கடந்த திங்கட்கிழமை இடம்பெற்ற சாவகச்சேரி பிரதேச சபையின் அமர்வில் உறுப்பினர் வை. குகானந்தன் தனிநபர் தீர்மான வரைவை சமர்ப்பித்து உரையாற்றினார்.

இந்தக் குளம் அப்பகுதி மக்களின் பங்களிப்புடன் அண்மையில் தூர்வாரப்பட்டுள்ளது. சாவகச்சேரி பிரதேச சபைப் பிரிவில் மழை பெய்யும் காலங்களில் வெள்ளம் இந்தக் குளத்தை வந்தடைகிறது. அதிகளவு மழைவீழ்ச்சி ஏற்படும் வேளைகளில் குளம் நிறைந்து அயலில் உள்ள குடியிருப்புகளுக்குப் பாதிப்பினை ஏற்படுத்துகிறது. குளம் மறுசீரமைக்கப்பட்ட போதிலும் மழை வெள்ளம் குளத்திற்கு வருவதற்கும் வெளியே செல்வதற்கும் போதிய சீமெந்துக் குழாய்கள் இல்லாத நிலை காணப்படுகிறது. மழை வெள்ளம் உள்ளே வரவும் வெளியே செல்வதற்கும் உரிய குழாய் வசதிகளை ஏற்படுத்த வேண்டும் என்று அவர் மேலும் தெரிவித்தார். உரிய மதிப்பீடு தயாரிக்கப்பட்டு சபை நிதியில் குழாய்கள் பொருத்த நடவடிக்கை எடுக்கப்படுமென உபதவிசாளர் பதில் வழங்கினார். தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. (ம-9,159)

# வாழ்வு முழுமையாவதற்கு வாசிப்பு இன்றியமையாதது

## நல்லூர் பிரதேச சபை உறுப்பினர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஒக். 19

வாசிப்பு என்பது மனிதனைப் பூரணப்படுத்துவது மட்டுமல்ல பரிபூரணப்படுத்துகிறது. வாழ்வுமுழுமையாவதற்கு வாசிப்பு இன்றியமையாதது என்று தெரிவித்தார் நல்லூர் பிரதேச சபையின் உறுப்பினர் மதுசுதன்.

நல்லூர் பிரதேச சபையின் உள்ளூராட்சி வாரம் மற்றும் வாசிப்பு மாதநிறைவுநிகழ்வும் சான்றிதழ் வழங்கும் நிகழ்வும் பிரதேச சபையின் மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றது. இதில் விருந்தினராகக்கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் மதுசுதன் அனுப்பியுள்ள செய்திக் குறிப்பில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:

இன்றுவாசிப்புப்பழக்கமானது எம்மிடையே அருகி வருகிறது. அமெரிக்க அதிபராகவிருந்த ஆபிரகாம் லிங்கன் வறுமை காரணமாக தெருவிளக்கின் கீழேயே தனது கல்வியைப் பெற்றுஉயர்ந்துஅமெரிக்கஅதிபராக இருந்தார். அத்தோடு சிறைச்சாலைகளில்இருந்தபல உலகத் தலைவர்களான நெல்சன் மண்டேலா, காந்தியடிகள் போன்றோர் சிறைக்காலத்திலேயே வாசிப்புப் பழக்கத்தினையும், தமது சுயசரிதைகளையும் எழுதும் காலமாகவும் அதனை வினைத்திறன் மிக்கதாகப் பயன்படுத்தியிருந்தார்கள். இவ்வாறு வாசிப்பானது வாழ்வியலுக்கு மிகவும் முக்கியமானஒன்றாகும்.

இன்று நல்லூர் பிரதேச சபையானது அனைத்து சபைகளுக்கும் முன்மாதிரியாக இவ்வாறான வாசிப்பு மாதத்தினை முன்னிட்டு எடுத்துள்ள விழாவானதுபாராட்டுதலுக்குரியது.

வடக்கு மாகாணம் கல்வியில் பின் தங்கிவிட்டது என்று எல்லோரும் கூச்சலிடுகிறார்கள். ஆனால் அண்மையில் வெளியாகிய புலமைப்பரிசில், க.பொ.த சாதாரண தரபெறுபேறுகளில்வடக்குமாணவர்கள் அகில இலங்கை ரீதியில் முன்னிலை வகிப்பதனை பார்க்கின்ற போது நாங்கள் ஒன்றும் கல்வியில் வீழ்ந்துவிடவில்லை.




பரீட்சை முடிவுகள், நாங்கள் வீழ்ந்த கல்வியை தூக்கி நிறுத்தி சமுதாயத்தினைக் கட்டியெழுப்புவோம் என எம் மாணவர்கள் உறுதிபூண்டிருப்பதனை உலகுக்கு வெளிக்காட்டி நிற்கின்றன - என்றுள்ளது. (ம)

### மூக்குக் கண்ணாடி விநியோகமும் மருத்துவப் பரிசோதனையும்

நல்லூர் சங்கிலியன் மன்றத்தின் 74ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு மருத்துவப் பரிசோதனை முகாமொன்று நாளை நடைபெறவுள்ளது. சங்கிலியன் மன்ற மண்டபத்தில் காலை 8.30 மணி முதல் பிற்பகல் 2.00 மணி வரை இந்த முகாம் இடம்பெறவுள்ளது. கண்பார்வைக் குறைபாடுகள் தொடர்பிலும் பரிசோதிக்கப்பட்டு இலவசமாக மூக்குக் கண்ணாடிகளும் வழங்கப்பட



சுன்னாகம் புனித அந்தோனியார் ஆலயத்தில் இளையோர் தினம் அண்மையில் சிறப்புறக் கொண்டாடப்பட்டது. நிகழ்வின் ஆரம்பத்தில் இளையோருக்கான திருப்பலி அருட்திரு ஜெகன் கூஞ்ஞோ (அ.ம.தி) அடிகளாரால் ஒப்புக் கொடுக்கப்பட்டது. திருப்பலியின் பின்னர் இளையோருக்கான கருத்தரங்கும் நடைபெற்றது. மாலையில் கலைநிகழ்வுகளும் மதிப்புறுத்தல் நிகழ்வுகளும் நடைபெற்றன. (ம)

# தார் வீதி அமைப்பு

யாழ்ப்பாணம், ஒக். 18

யாழ். மாநகராட்சி மன்றம் கொழும்புத்துறை தோட்ட வீதியைத் தார் வீதியாக மாற்றியமைத்துள்ளது.

கடந்த பல வருடங்களாக இந்த வீதி சீரமைப்பு இன்றி மணல் வீதியாகக் காணப்பட்டது. 600 மீற்றர் நீளம் கொண்ட இந்த வீதி தற்போது தார் வீதியாக மாற்றப்பட்டுள்ளது. இந்த வீதி சீரமைக்கப்படாததால் இந்தப் பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள் போக்குவரத்துச் செய்ய பெரும் சிரமப்பட்டார்கள். மழை காலங்களில் வீதியில் வெள்ளம் வழிந்தோட முடியாது தேங்கியும் காணப்பட்டது. தற்போது அந்த நிலை முடிவுக்கு வந்துள்ளது என்று அந்தப் பகுதி மக்கள் தெரிவித்தனர். (ம-17)



யாழ். மாநகர முதல்வருக்கும் ஜப்பானிய தூதுவராலயத்தின் பொருளாதாரப் பிரிவின் ஆலோசர் புமி இட்டோவுக்கும் இடையிலான சந்திப்பு கடந்த வெள்ளிக்கிழமை மாநகர முதல்வரின் அலுவலகத்தில் நடைபெற்றது. மேற்படி சந்திப்பில் யாழ் மாநகரத்தின் திண்மக் கழிவகற்றலின் முறையான திட்டமிடல் குறித்தும், திண்மக் கழிவுகளை முறையாக அகற்றுவதற்காக வாகனங்களைக் கொள்வனவு செய்தல் குறித்தும் விரிவாகக் கலந்துரையாடப்பட்டது. (ம)

## ஆசிரியர்களுக்கு ஈருருளி வழங்கல்

வவுனியா.ஒக் .19

வன்னிமாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிவமோகனின் நிதி ஒதுக்கீட்டில், வன்னிக்குறோஸ் முன்பள்ளி, கல்வி மேம்பாட்டுப்பேரவையின் பத்து ஆசிரியர்களுக்கு ஈருருளிகள் வழங்கப்பட்டுள்ளன.

இந்த நிகழ்வில் வன்னிமாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மருத்துவர் சி.சிவமோகன், வவுனியா தெற்குப் பிரதேச சபையின் உறுப்பினர் நாதன், வன்.னிக்குறோஸ் மகளிர் பேரவையின் வவுனியா நகரின் இணைப்பாளர் அக்சனா ஆகியோர் கலந்து கொண்டனர். (222)



## சிறுவர் தினக் கொண்டாட்டம்



முல்லைத்தீவு ,ஒக் .19

பன்னாட்டுச் சிறுவர் தினத்தை முன்னிட்டு, 68 ஆவது படைப்பிரிவின் ஒத்துழைப்புடன், 683 ஆவது படைப்பிரிவு மற்றும் 7 ஆவது கெமுனுசேவா படையினர் இணைந்து, உடையார்கட்டு கலைவாணி முன்பள்ளி மற்றும் தேராவில் மதுசா முன்பள்ளி என்பவற்றில் கல்வி கற்கும் மாணவர்களுக்குக் கடந்த 10 ஆம் திகதி பகல் தேனீர் விருந்துபசாரம் வழங்கினர். (245)



முல்லைத்தீவு கள்ளப்பாடு முகிலன் முன்பள்ளிச்சிறார்கள் 30 பேருக்கு நேற்று முன்தினம் கற்றல் மற்றும் விளையாட்டு உபகரணங்கள் வழங்கப்பட்டன.
தாயக விருட்சத்தின் மாதாந்த நிதியில் இருந்து இந்த உதவி வழங்கப்பட்டது. (222)

## தோரணம் கட்டும் போட்டி

கொடிகாமம், ஒக். 19

நவராத்திரி விழாவை முன்னிட்டு, கிளிநொச்சி இந்துக் கல்லூரி மாணவர்களுக்கிடையில் தோரணம் கட்டுதல் போட்டி கடந்த 15 ஆம் திகதி திங்கட்கிழமை நடைபெற்றது.

ஆசிரியர்கள் நி.மதுராகரன் இ.இராசகுலன், கி.வரதராஜா இ.கோபிக்கண்ணா, அனந்தன் ஆகியோரின் மேற்பார்வையில் தரம் 7தொடக்கம் 10 வரையான வகுப்பைச் சேர்ந்த மாணவர்களுக்கு தோரணம் கட்டுதல் போட்டி இடம் பெற்றது. (159)



## பொதுச் சந்தை சீரமைப்புப் பணிகள் ஆரம்பம்

முல்லைத்தீவு.ஒக்.19

முல்லைத்தீவு, குமுழமுனை பொதுச் சந்தையின் சீரமைப்புப் பணிகள் நேற்று முன்தினம் காலை 9 மணியளவில் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

குமுழமுனைப்பிரதேச சபை உறுப்பினர் இ. கவாஸ்கரின் முயற்சியினால் சபையில் மேற்கொள்ளப்பட்ட தீர்மானத்தின் அடிப்படையில் இந்தப் பணிகள் ஆரம்பிக்கப் பட்டுள்ளன.

பொதுச்சந்தையில் அடிப்படைத் தேவைகள் காணப்படுவதாகவும், அதனை நிறைவேற்றுவதற்குப் பிரதேச சபையின் நிதி ஒதுக்கீட்டில் சீரமைப்புக்கள் ஆரம்பிக்கப்பட்டு இடம்பெற்று வருகிறன.

அவ்வகையில் சந்தையைச் சுற்றி வேலிகள் அமைக்கப் பட்டு, இரண்டு நுழைவாயில்களுக்கும் பிரதான வீதிகள் கிரவல் இட்டு அமைக் கப்பட்டு வருகின்றன. இதனால் அப்பகுதி மக்களின் நீண்டகாலத் தேவை நிறைவேற்றப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.



# சிகிச்சை பெறுவதற்குப் பல மணிநேரம் காக்கவைக்கப்படும் நோயாளர்கள்

## மாங்குளத்தில் இந்த அவலநிலை

**முல்லைத்தீவு,ஒக் .19**

**முல்லைத்தீவு மாவட்டத்தின் ஏ-9 வீதியில் காணப்படும் பிரதான மருத்துவமனைகளில் ஒன்றான மாங்குளம் ஆதார மருத்துவமனையில் மூன்று மருத்துவர்கள் கடமையில் உள்ள போதும், நோயாளர்கள் உரிய சேவைகளை, உரிய நேரத்தில் பெறமுடியாது நீண்ட நேரம் காக்க வைக்கப்படுவதாகக் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.**

காலை எட்டு மணிக்கு வருகை தந்த தாய் தன் கைக்குழந்தையுடன் பத்து மணி தாண்டியும் சிகிச்சை பெறுவதற்காக காத்திருக்கும் அவலநிலையும் நிலவுவதாகத் தெரிவிக்கப்பட்டது.

ஒரு மருத்துவர் சேவையில் ஈடுபட ஏனைய இருவர் விடுமுறையில் இருப்பதாகவும், இதனாலேயே இந்த நிலை ஏற்படுவதாகவும் மக்கள் கூறுகின்றனர். மாரி மழை ஆரம்பித்துள்ள நிலையில், அதிகளவான நோயாளர்கள் மருத்துவமனைக்கு வருகின்றனர் என்றும், மருத்துவமனையினரின் இந்த நடவடிக்கையால் நோயாளர்கள் பாதிக்கப்படுகின்றனர் என்றும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

இந்த மருத்துவமனையை பத்துக்கும் மேற்பட்ட கிராம அலுவலர் பிரிவில் உள்ள மக்கள் பயன்படுத்துவதோடு, வீதி விபத்துக்கள் பலவும் இந்த பகுதிகளுக்குள்ளேயே இடம்பெறுகின்றன.

அதிகளவான நோயாளர்கள் வரும் மருத்துவமனையாக உள்ளபோதும் மருத்துவமனையின் வசதிகளும் இலகுவாக இருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த மருத்துவமனையில் உள்ள குறைகள் தொடர்பில், பலதடவைகள்




பிரதேச அபிவிருத்திக் குழுக் கூட்டம், மாவட்ட அபிவிருத்திகுழ கூட்டங்களில் கலந்துரையாடப்பட்டதோடு, வடமாகாண சுகாதார அமைச்சரின் கவனத்துக்கும் கொண்டுசென்று அவர் திடீர் பயணம் மேற்கொண்டு நிலைமைகளை அவதானித்திருந்தார். இருப்பினும் நிலைமைகள் சீராகவில்லை எனத் தெரிவிக்கப் படும் அதேவேளை, அண்மையில் மருத்துவமனையில் ஒரு மருத்துவர் மட்டும் சேவையில் ஈடுபட, ஏனைய இருவரும் விடுமுறையில் சென்றதால் மக்கள் மிக நீண்ட நேரமாக காத்திருந்து சிகிச்சைகளை பெற்றுச் சென்றுள்ளனர். இந்த நிலைமையை உடனடியாகச் சீர்செய்து மக்களுக்குச் சிறந்த சேவையை பெற்றுக்கொடுக்க வேண்டியது அதிகாரிகளின் கடமையும் பொறுப்புமாகும் என மக்கள் தெரிவித்துள்ளனர். இந்த விடயம் தொடர்பாக வடக்கு மாகாண சுகாதார அமைச்சரிடம் கேட்டபோது:
கடந்த நான்கு மாதங்களுக்கு முன்னர் இதே மருத்துவமனையில் இப்படியான சம்பவங்கள் இடம்பெறுவதாக கிடைக்கப்பெற்ற முறைப்பாட்டை தொடர்ந்து அனுமதியற்ற விடுப்பினை எடுத்த மருத்துவருக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட்டு, அவருக்கான நடவடிக்கைகள் இன்னமும் நிறைவுறாத நிலையில் உள்ளது. இருந்தும் தற்போது மீண்டும் அப்படியான ஒரு சூழல் மீள உருவாகியுள் ளது. கிழமை முடிவு நாள்களில் வெளிமாவட்டங்களில் இருந்து வந்து கடமையாற்றும் மருத்துவர்கள் விடுமுறையில் செல்லவே விரும்புகின்றனர், இருந்தபோதும் இப்படி ,இரு மருத்துவர்கள் ஒரே தடவையில் விடுப்பு எடுப்பதை தவிர்த் துக் கொள்ளுமாறு அறிவுறுத்தி இருப்பதாகத் தெரிவித்தார். (222)

# உடையார்கட்டுச் சந்தையின் குறைபாடுகளை கேட்டறிந்து கொண்ட பிரதேசசபை தவிசாளர்

முல்லைத்தீவு.ஒக் .19

முல்லைத்தீவு மாவட்டத்தின் உடையார்கட்டுச் சந்தையில் காணப்படும் பல்வேறு குறைபாடுகளைப் பிரதேச சபைத் தவிசாளர் செ.பிறேமகாந் வடமாகாணசபை உறுப்பினர் ஆ. புவனேஸ்வரன், பிரதேச சபை உறுப்பினர்கள் ஆகியோர் கடந்த 15 ஆம் திகதி நேரில்ச் சென்று கேட்டறிந்து கொண்டனர்.

வியாபாரிகளுக்குக் குடிதண்ணீரினை பெற்றுக்கொள்வதில் சிரமம் காணப்படுகிறது. கிணறு இருந்தும் நீர் இறைக்கும் மோட்டர் இல்லாத நிலையில், சந்தைப் பகுதி காணப்படுகின்றது. மரக்கறி விற்பனை நிலை யக் கட்டத்துக்கு மின்விளக்கு களைப் பொருத்துமாறும் வியாபாரிகள் கோரிக்கை விடுத்துள்ளார்கள். இதனை நடைமுறைப்படுத்துவதாகத் தவிசாளர் தெரிவித்துள்ளார்.

மீன் வியாபாரம் செய்யும் கட்டடத்தில் கட்டாக்காலி கால்நடைகள் இரவில் வந்து கிடக்கின்றன. கட்டத்தினைச் சுற்றி வேலி அடைத்து தரவேண்டும் என்றும், மின்குமிழ் பொருத்த வேண்டும் என்றும் தெரிவித்துள்ளார்கள்.

தொடர்ந்து பழக்கடைகளை பார்வையிட்டுள்ளதுடன், புதிதாக பிரதேச சபையினால் பழக்கடைகள் கட்டித் தரவேண்டும் என்றும் பழங்கள் தற்காலிக கொட்டகைகளில் வைத்தே வியா பாரம் செய்வதாக வியாபாரிகள் தெரிவித்துள்ளார்கள்.

வீதியின் அருகில் உள்ள வணிக நிலையத் தொகுதிகளில் மழைக் காலத்தில் சீரான நீர் வடிகால் அமைப்பு இல்லாத காரணத்தால் மழைநீர் அனைத்தும் கடைக்குள் செல்கின்றது எனவும் நீர் வழிந்தோடக்கூடிய வசதியினைச் செய்து தரவேண்டும் என்றும் கடைத்தொகுதி வணிகர்கள் கோரிக்கை விடுத்துள்ளார்கள். இதனையும் சீர்செய்து தருவதாகவும், கட்டம் கட்டமான நடவடிக்கைகள் எடுப்பதாகவும் பிரதேச சபைத் தவிசாளர் தெரிவித்துள்ளார். (ரி3)






# 2018, 5 ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் அகில இலங்கையில் அதி சிறந்த முறையில் சித்தியடைந்த பிள்ளைச் செல்வங்களுக்கு இலங்கை வங்கியின் கௌரவிப்பு

## நாட்டில் முதலாமிடம் - ஒவ்வொருவருக்கும் ரூ.150,000 பரிசுத் தொகை, சான்றிதழ் மற்றும் தங்கப் பதக்கம்




புமித் மெத்னுள் விதானகே
சோமவீர சந்திரசிறி வித்தியாலயம், பிலியந்தல




குருகுலசூரிய சனுப திமத் பெரேரா
புனித மரியாள் மகா வித்தியாலயம், வேயாங்கொடை

## நாட்டில் இரண்டாமிடம் - ஒவ்வொருவருக்கும் ரூ.100,000 பரிசுத் தொகை, சான்றிதழ் மற்றும் தங்கப் பதக்கம்




ஹெட்டியாராச்சிகே செனுஜி அகித்மா ஹெட்டியாராச்சி
ரெஜி ரணதுங்க ஆரம்ப வித்தியாலயம், மினுவாங்கொடை




மகேந்திரன் திகலொளிபவன்
யாழ்ப்பாணம் இந்து ஆரம்ப பாடசாலை, யாழ்ப்பாணம்




நவாஸ்கன் நதி
சாவகச்சேரி இந்து ஆரம்ப பாடசாலை, சாவகச்சேரி

## நாட்டில் மூன்றாமிடம் ரூ.75,000 பரிசுத் தொகை, சான்றிதழ் மற்றும் தங்கப் பதக்கம்




பாலகுமார் ஹரிதிக்ஹன்சுஜா
சிவபுரம் ஆரம்ப பாடசாலை,
வவுனியா.

2018 அக்டோபர் 12 ஆம் தினம் பண்டாரநாயக்கா ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் (BMICH) நுக செவன வளாகத்தில் இடம் பெற்ற பரிசளிப்பு நிகழ்வின் போது வழங்கப்பட்டது.

www.boc.lk
1975
BOC CALL CENTRE

தலைமைக் காரியாலயம் "இலங்கை வங்கி சதுக்கம்" இலக்கம் 1,
இலங்கை வங்கி மாவத்தை, கொழும்பு 01.

இலங்கைவங்கி
BOC
தேசத்தின் வங்கியாளர்

### மேலைத்தேய கலாசாரங்களால்

# தமிழரின் அடையாளங்கள் மெல்ல விலகிச் செல்கின்றன

## மரபுரிமைகள் நிலைய திறப்பு நிகழ்வில் முதலமைச்சர் எடுத்துரைப்பு

**யாழ்ப்பாணம், ஒக். 19**

**எமது வாழ்வியல் அடையாளங்கள் இன்று எம்மைவிட்டுத் தூர விலகிச் சென்று கொண்டிருக்கின்றன. மேலைத்தேய கலாசாரங்களை நாம் பின்பற்றத் தொடங்கியதாலும், எமது சந்ததி வழிவந்த அடையாளங்களை நாம் தொலைக்க முற்பட்டதாலும் இந்த நிலை என்று வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன் தெரிவித்தார்.**

தமிழர் மரபுரிமைகள் நிலையம் யாழ்ப்பாணம் செம்மணி வீதியிலுள்ள நல்லூர் ஸ்தான சி.சி.த.க பாடசாலையிலும், தமிழர் நாகரிக மையம் முல்லைத்தீவின் மாந்தை கிழக்கு அம்பாள்புரம் மாங்குளம் மல்லாவி முதன்மை வீதியிலும் அமைக்கப்பட்டு நேற்றுத் திறந்துவைக்கப்பட்டன. வடக்கு மாகாண கல்வி அமைச்சின் பண்பாட்டலுவல்கள்திணைக்களம்இவற்றைஒழுங்கமைத்து அமைத்திருந்தன.

இரண்டு நிகழ்வுகளிலும் முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன்உள்ளிட்டவிருந்தினர்கள் கலந்துகொண்டிருந்தனர். யாழ்ப்பாணம்நல்லூர்ஸ்தான சி.சி.த.க பாடசாலையில் நடந்த திறப்புநிகழ்வில் உரையாற்றுகையில்முதலமைச்சர் மேலும்தெரிவித்ததாவது:

முன்னோர்களின் பயன்பாட்டுப் பொருள்களான அம்மி, ஆட்டுக்கல், திருகை, பித்தளைக்குடம், மூக்குப் பேணி, மண்ணெண்ணெய்விளக்குகள் தற்காலச் சந்ததியினருக்குப்பெயரளவில்கூடத்தெரியாததாகிவிட்டன.

பண்டைய இலக்கியங்கள், ஏட்டுச்சுவடிகளில்மட்டுமன்றி சிலகிராமப்புறங்களிலும்எமது மரபுரிமை அடையாளங்களை வெளிப்படுத்தும் வகையிலேயே இவை உருவாக்கப்பட்டுள்ளன. மக்களின் பாவனையில் இருந்துவந்த பாக்கு வெட்டி,துலா,கருங்கல்அம்மி, ஆட்டுக்கல், உரல் போன்ற பொருள்கள்அறிவியல்வளர்ந்திராத காலத்திலேயே நெம்புகோல் தத்துவம், சில்லும் அச்சாணியும் போன்ற விஞ்ஞான அறி வியல் தத்துவங்களை வெளிப்படுத்துவனவாக அமைந்திருந்தன என்று இன்றைய விஞ்ஞானிகள் கூறி வியக்கின்றனர்.

கூசாவில்தண்ணீர்வைத்துக் குளிர்ந்த சுத்தமான நீரைத் தாகம்தீரும்வரைமுன்னோர்கள்அருந்தினர். நாமோகுளிர்சாதனப் பெட்டியில் நீரை வைத்து கடுமையான குளிர் நீரை அருந்துகின்றோம். விளைவு விரைவாகவே பற்கள் பழுதடைகின்றன. உடம்பில் சளி அதிகரிக்கின்றது.

அந்தக்காலத்தில் மதிய, காலை, மாலை உணவுகளை இன்னோர் இடத்துக்கு எடுத்துச் சென்று உண்ண வேண்டிய தேவைகள் ஏற்பட்ட போது சிறியஅழகானஓலைப்பெட்டிகள் பயன்படுத்தப்பட்டன. ஓலைப் பெட்டியில் உணவை எடுத்துச்சென்றபோதுஉணவு பழுதடைகின்ற தன்மை தவிர்க்கப்பட்டது என்று இன்றையவிஞ்ஞானிகூறுகின்றான். நீர்ப்பற்றுஎதுவும்இன்றிஉடன் சமைத்தஉணவுபோல்மிகவும் காத்திரமாக அந்த உணவு காணப்படுகின்றதுஎன்றுகூறுகின்றார்கள். பனைஓலையில் இருக்கும் சில தாதுப் பொருள்களும் உணவுடன் சேர்ந்து அந்த உணவுக்கு மேலதிக சுவையை வழங்குகின்றது என்றும் கூறுகின்றார்கள்.

தற்போது மருத்துவர்களும் மருந்தகத்தினரும்தான் நன்றாக உழைக்கின்றார்கள்!

### தேநீரில் செப்பு நாணயம்

இன்று பித்தளை மூக்குப் பேணியில்தேநீர்அருந்துவது நாகரீகம் இல்லை. ஆனால் மேலைத்தேயத்தவர்களோ செப்புப் பாத்திரத்தில் தேநீர் அருந்த விரும்புகின்றார்கள் அல்லது தேநீருக்குள் ஒரு செப்பு நாணயத்தை இட்டு அருந்துகின்றார்கள். அதிலே விஞ்ஞான நன்மைகளைக் கண்டுள்ளார்கள்.

### மூக்குப் பேணிகளில் குடிப்பது தனிசுகம்

அந்தக் காலத்தில் மூக்குப் பேணிகளில் தேநீரை அண்ணாந்து குடிப்பது தனி சுகம் மட்டுமல்ல சுகாதாரமும் கூட. அந்த சுகத்தை இன்றைய சந்ததியினர் சந்திக்கவில்லை.

கோப்பைகளில் உணவு உண்பதைவிட வாழை இலை, தாமரை இலை ஆகியவற்றில் உணவிட்டு உண்ணும்போது சுவை அதிகம். ஆட்டுக்கல்லில் அரைத்த உழுத்தம் மாவில் சுட்ட வடை தனிச் சுவை. அம்மியில் அரைத்தஇஞ்சிசேர்த்தசம்பல் இருந்தால் எத்தனை இடியப்பத்தையும் வரிசையாக உள்ளே தள்ளலாம். இவைகள் எல்லாம் எமது மூதாதையர்கள் எமக்கு அறிமுகப்படுத்திய சுகாதாரத்துடன் கூடிய பழக்கவழக்கங்கள்.

வாழ்க்கை மாற்றம் என்பது ஏற்றுக்கொள்ள வேண்டியதொரு நிகழ்வு. பால்ய வயது வாழ்க்கைக்கு மாறுங்கள் என்றுகூறவில்லை. எமதுஅடிகளைத்துருவிஆராய்வதிலும் அவற்றில் காணும் தொழில்நுட்பச் சிறப்பைப் பங்கிட்டுக் கொள்வதிலும் நன்மைகள் இருக்கின்றன. தமிழர்களின் பாரம்பரிய மருத்துவ முறைகள்கூட இன்று உலகளாவிய ரீதியில் மிகப்பெரிய செல்வாக்கைப் பெற்று விளங்குவது சிறப்பிற்குரியது. எதுவித பக்க விளைவுகளும் இன்றி மிகக் குறைந்தசெலவில்மேற்கொள்ளக்கூடியஎமதுமூலிகைமருத்துவ முறைமைகள் மேற்கு நாட்டுமக்கள்மத்தியில்பெரிய வரவேற்பைப் பெற்றிருக்கின்றது. ஒவ்வொரு வருடமும் பல்லாயிரக் கணக்கான மக்கள் சுதேச வைத்தியத்தைப் பெற்றுக் கொள்வதற்காக இந்தியா உள்ளிட்ட நாடுகளுக்குப் படையெடுக்கின்றார்கள்.

### பன்னாடுகளிலிருந்துவரும் மாத்திரைகளில்இரசாயனம்

எம்மைச் சுற்றி இருக்கின்ற மருத்துவக் குணம் நிரம்பிய மூலிகைகள் பற்றி நாம் எதுவுமே அறியாது வெளிநாடுகளில்இருந்துஇறக்குமதியாகும் இரசாயனமாத்திரைகளையே உட்கொண்டுவருகின்றோம். நான் கூட அதைத் தான் செய்கின்றேன். காரணம் விரைவில் குணமடைய வேண்டும் என்ற வேகமும் ஆர்வமும். பக்க விளைவுகள் பற்றி நாம் அதிகம் அலட்டிக் கொள்வதில்லை. இது பாரதூரமானது - என்றார். (4,ரி3)

---

### யாழ்.மாநகர சபையின்

# சுகாதாரதொழிற்சங்கத்தினரின் கைகலப்பால் 8 பேருக்கு மறியல்

யாழ்ப்பாணம், ஒக். 19

யாழ்ப்பாணமாநகரசபையின்சுகாதாரதொழிற்சங்கத்தின் இரண்டு தரப்புகளுக்கு இடையே இடம்பெற்ற மோதலையடுத்து 8 பேர் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

சபையின் சுகாதார ஊழியர்கள் தொழிற்சங்கத்தின் முன்னாள் தலைவர் கையூட்டுவாங்கினார் என்ற குற்றச்சாட்டை அந்தச் சங்கத்தின் புதிய தலைவர் முன் வைத்ததையடுத்தே சில நாள்களுக்கு முன்னர் இந்த மோதல் ஏற்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.

அந்தச் சங்கத்தின் தற்போதைய தலைவர் மற்றும் அவரது தரப்பைச் சேர்ந்த மூவரும் சங்கத்தின் முன்னாள் தலைவர் மற்றும் அவரது தரப்பில் மூவர் என்று 8 பேர் யாழ்ப்பாண நீதிவான் மன்றில்நேற்றுமுன்தினம்முற்படுத்தப்பட்டனர். இரண்டுதரப்பினர்திருநகர்பகுதியில்மோதலில் ஈடுபட்டனர் என்று பொலிஸார் நீதிமன்றில் அறிக்கை முன்வைத்தனர்.

முன்னாள்தலைவர்கையூட்டுப்பெற்றதாகபுதிய தலைவர் குற்றச்சாட்டை முன்வைத்தார். அது தொடர்பில் அவரிடம் விளக்கம் கேட்கச் சென்றபோதே, அவரது தரப்புகள் முன்னாள் தலைவரைத் தாக்கினார்கள் என்று முன்னாள் தலைவரின் சட்டத்தரணி மன்றுரைத்தார்.

முன்னாள்தலைவர்கையூட்டுப்பெற்றார்என்று தற்போதைய தலைவருக்கு முறைப்பாடு கள் கிடைத்துள்ளன. அவை தொடர்பில் விசாரித்தபோதே முன்னாள் தலைவரும் அவரது தரப்புகளும்தற்போதைய தலைவரையும்ஏனையோரையும் தாக்கினார்கள் என புதிய தலைவரின் தரப்புச் சட்டத்தரணி சமர்ப்பணம் செய்தார்.

இருதரப்பு சமர்ப்பணங்களையும் ஆராய்ந்த மன்று 8 பேரையும் வரும் 26ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டது. (4,37)

---

# தோட்டாக்களுடன் ஒருவர் கைது

வவுனியா, ஒக். 19

வவுனியா செட்டிகுளம் பகுதியில் வீடு ஒன்றிலிருந்து துப்பாக்கிரவைகள் நேற்றுமுன்தினம் மீட்கப்பட்டுள்ளன. ஒருவர்கைதுசெய்யப்பட்டார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

செட்டிகுளம் பொலிஸ் பிரிவுக்கு உட்டபட்ட சின்னகுளம் பகுதியில் ஏகே 47 வகைத் துப்பாக்கிகளுக்குப் பயன்படும் துப்பாக்கி ரவைகளே மீட்கப்பட்டுள்ளன.

அந்த வீட்டின் உரிமையாளர் கைதுசெய்யப்பட்டுள்ளார். "மீன்பிடிக்ககுளத்துக்குச்சென்றபோது குளக்கரையில் துப்பாக்கி ர வைகள் காணப்பட்டன. அவற்றைஎடுத்துவந்து வீட்டில் வைத்தேன்" என்று சந்தேகநபர் கூறியுள்ளார். அவர் விசாரணைகளின் பின்னர் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டார். அவர்ஒருநாள்விளக்கமறியலில்வைக்கப்பட்டார்என்றுமேலும் தெரிவிக்கப்பட்டது. (4,10,222)



---

### யாழ். வண்ணார்பண்ணைப் பகுதியில்

# பாலியல்தொல்லைகொடுத்தாரென நாட்டாமைக்குஎதிராக 4 வழக்குகள்

யாழ்ப்பாணம், ஒக். 19

தனியார்கல்விநிலையத்துக்குச் சென்று திரும்பும் மாணவிகளுக்குப் பாலியல் தொல்லைகொடுத்தார்என்ற குற்றச்சாட்டில்விளக்கமறியலில்வைக்கப்பட்டுள்ளகுடும்பத் தலைவருக்கு எதிராக 4 வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

மறைகாணி பதிவுகளின் அடிப்படையில்சந்தேகநபர், வீதியில் சென்ற மாணவிகளுக்குப் பாலியல் ரீதியில் கொடுமைப்படுத்துவது உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாகத் தெரிவித்தே அவர் மீது நான்கு வழக்குகளைத் தாக்கல் செய்துள்ளோம் என்று யாழ்ப்பாணப் பொலிஸார் தெரிவித்தனர்.

யாழ்ப்பாணம் வண்ணார் பண்ணைப்பகுதியில்இயங்கும் தனியார் கல்வி நிலையத்துக்குச் சென்று திரும்பும் மாணவிகளுக்கு வீதியில் பாலியல்ரீதியானதொல்லை விளைவித்தார் என்று கொட்டடியைச் சேர்ந்த குடும்பத் தலைவருக்குஎதிராகயாழ்ப்பாண பொலிஸ் நிலைய பெண்கள் பிரிவுக்கு முறைப்பாடுகள் கிடைத்தன.

குறித்தநபர்யாழ்ப்பாணநகரில் நாட்டாமை வேலை பார்ப்பவர் என்று விசாரணையில்தெரியவந்ததாகப் பொலிஸார் தெரிவித்தனர். கடந்த 10ஆம் திகதி அவர் கைதுசெய்யப்பட்டார்.

சிறுமிகளுக்குப் பாலியல் தொல்லைகொடுத்தார்என்று குற்றஞ்சாட்டி முதலில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது. சந்தேகநபரைகடந்த16ஆம் திகதி செவ்வாய்க்கிழமை வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தார்.

இந்த நிலையில் மேலும் சில மாணவிகள் கடந்த ஞாயிற்றுக்கிழமை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடுகள் வழங்கினர். அதனடிப்படையில் அந்த மாணவிகளின் முறைப்பாடுகளைப் பொலிஸார்நேற்றுமுன்தினம்செவ்வாய்க்கிழமை நீதிமன்றில் முன்வைத்தனர்.

சந்தேகநபர், யாழ்ப்பாண நீதிவான்நீதிமன்றில்நேற்றுமுன்தினம் முற்படுத்தப்பட்டார். அதனைஅடுத்துசந்தேகநபர்மீதானகுற்றச்சாட்டுகள் தொடர்பில்உரியவிசாரணைகளை முன்னெடுக்க உத்தரவிட்டநீதிவான்சி. சதீஸ்தரன் சந்தேகநபரின் விளக்கமறியலை வரும் 30ஆம் திகதி வரைநீடித்தார். (4,37)

---

# பன்னாட்டுக் கூட்டுறவு தின நிகழ்வும் பரிசளிப்பும் நாளை

யாழ்ப்பாணம், ஒக். 19

வடக்குமாகாணபனை, தென்னைவளஅபிவிருத்திக்கூட்டுறவுச்சங்கங்களின்சமாசம் நடத்தும் 96 ஆவது பன்னாட்டுக் கூட்டுறவு தின நிகழ்வும் பணியாளர் மதிப்பளிப்பும் நாளை சனிக்கிழமை காலை 6 மணிக்கு யாழ்ப்பாணத்திலுள்ள சமாச கூட்டுறவாளர் மண்டபத்தில் நடைபெறும்.

சமாசத்தின் தலைவர் வ.தெய்வேந்திரம் தலைமையில் நடைபெறும் இந்த நிழ்வுக்கு முதன்மை விருந்தினராக வடக்கு மாகாண கூட்டுறவு ஆணையாளர் பொ.வாகீசன் கலந்து கொள்வார்.

2017ஆம் ஆண்டின் சிறப்பு அங்கத்தவர்கள் பணியாளர்கள் மற்றும் ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சை, ஜி.சி.ஈ. உயர்தரப் பரீட்சை போன்றவற்றில் சித்தி பெற்ற அங்கத்தவர்களின் பிள்ளைகள் போன்றோர் பாராட்டி மதிப்பளிக்கப்படவுள்ளனர்.

2017 ஆம் ஆண்டின் சிறந்த சங்கங்கள் மற்றும் கொத்தணிகள் போன்றவற்றுக்கும் சிறப்புவிருதுகள்வழங்கப்படும். பன்னாட்டுக்கூட்டுறவாளர்தினத்தை முன்னிட்டுநடத்தப்பட்ட பல்வேறு போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கும் பாராட்டிப் பரிசில்கள் வழங்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டது. (4,17)

# புதிய வாகனம் வாங்குவதில் நகரசபை அமர்வில் குழப்பம்

## அடுத்த அமர்வுக்கு விடயம் ஒத்திவைப்பு

வவுனியா, ஒக். 19

வவுனியா நகரசபைத்தவிசாளருக்குவாகனத்தைக்கொள்வனவு செய்வது பற்றிய விடயம், சபை அமர்வில் நேற்றுப் பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியது. சபை அமர்வு தவிசாளர் இ.கௌதமன் தலைமையில் நடைபெற்றது.

கடந்த திங்கட்கிழமை பொதுக்கணக்காய்வுக்குழுக்கூட்டம்யாழ்ப்பாணத்தில் நடைபெற்றபோது சபையின்நிர்வாகக்குறைபாடுகள் தொடர்பாகவும் பேசப்பட்டன. இந்தச் சபைக்குப் புதிய வாகனம் ஒன்றைக் கொள்வனவு செய்யுமாறு வடக்கு மாகாண அவைத்தலைவர் சி.வி.கே.சிவஞானம் கூறியிருந்தார். அதுபற்றிச் சபையின் முடிவை நகரசபைத் தவிசாளர் கோரினார்.

உறுப்பினர் ரி.கே.ராஜலிங்கம், வருமானம்ஈட்டாதவிடயங்களுக்காக நிதியைச் செலவிடுவது சரியல்ல. அவைத்தலைவர் சிவஞானம் இன்னும் 15 நாள்களின் பின்னர் இருக்கமாட்டார். அவர்களுக்குக்காற்றுப்போய்விடும்-என்றார். குறுக்கிட்ட தவிசாளர் அவைத்தலைவரை இவ்வாறு கூறவேண்டாம்-என்றார்.

உறுப்பினர் நா. சேனாதிராஜா கடந்தவாரம் வாகனம் இல்லை என்று கூறிக் குப்பை அகற்றும் உழவியந்திரத்தில்பயணம்செய்த தவிசாளரைக் கடுமையாகச் சாடினார்.

இருவருக்கும் இடையில் கடும் வாக்குவாதம் இடம்பெற்றது.

இதன்போது பேசிய உறுப்பினர்களான பா. பிரசன்னா, எம் .லறிப், செபநேசறாணி, பாரி, பாயிஸ், ஆகியோர் வாகனம்கட்டாயம்தேவை என்று தெரிவித்தனர்.

இந்த விடயம் நிகழ்சி நிரலில் இல்லை. தான்தோன்றித் தனமாக முன்மொழிவுகளை வழங்கிவிட்டுதீர்மானங்கள்எடுப்பதுசபையின் பிழையான செயற்பாடு.

அடுத்த அமர்வில் இது பற்றிப் பேசலாம் என்று உறுப்பினர் சேனாதிராஜா கூறினார். இதனையடுத்து அடுத்த அமர்வுக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

**வர்த்தக நிலையம்**

கொரவபொத்தான வீதியில் அனுமதியின்றி அமைக்கப்பட்டுள்ள வர்த்தகநிலையம் தொடர்பாக கடந்தஅமர்வுகளில்பேசபட்டுவாக்கெடுப்புவரை சென்றதுடன் கடையை அமைத்தவருக்கே அதனை வழங்கவேண்டும் என்று இறுதியில் தீர்மானிக்கபட்டது. கடைஅமைந்துள்ளகாணி வவுனியா பிரதேசசெயலகத்துக்குட்பட்டது என்றுசபைச் செயலர் கடந்த அமர்வில் தெரிவித்திருந்தார்.

சபையின் வேண்டுகோளின் பிரகாரம் அந்தக் காணியை நகரசபைக்கு வழங்குமாறு பிரதேச செயலருக்குக் கடிதம்மூலமாகத் தெரியப்படுத்தபட்டது. இந்த விவகாரம் நேற்று எடுக்கப்பட்டபோது, உறுப்பினர் எம்.றசூல்லரீப், கடை 6 மாதங்களாக மூடப்பட்டுள்ளது. உரிமையாளர் கடன்சுமைக்குள் தள்ளப்பட்டுள்ளார். மனிதாபிமான அடிப்படையில்தண்டப்பணம்அறவிட்டுக் கடையை நடத்த அனுமதி வழங்கவேண்டும் என்று கோரினார். இந்தவிடயத்தில்சபைசட்டப்படிசெயற்படவேண்டும் என்று சக உறுப்பினர் சந்திரகுலசிங்கம் கூறினார். கடையின்நிலம்பிரதேச செயலகத்தின்கீழ்இருப்பதால்நாம் முடிவெடுக்க முடியாது. வர்த்தக நிலையத்தைத் திறப்பதற்கோ, மூடச்சொல்வதற்கோ எமக்கு அதிகாரம்இல்லை. கட்டடம் நகரசபையின் அனுமதியின்றிக் கட்டப்பட்டமைக்காக நீதிமன்றில் வழக்குத் தொடரமுடியும் என்றும் அவர் கூறினார். இதேவிடயத்தைச்செயலரும்கூறினார். பிரதேசசெயலகத்தின்பதில்கிடைத்தபின்னர்அதுபற்றிப் பேசலாம் என்று தவிசாளர் தெரிவித்தார். (4,110)

# வெள்ளம் வழிந்தோடும் வகையில் கால்வாய்கள் துப்புரவு செய்யப்படும்

## வலி. மேற்கு சபையில் தீர்மானம் நிறைவேற்றம்

யாழ்ப்பாணம், ஒக். 19

பருவகால மழையைக் கருத்திற்கொண்டு வலி. மேற்குப் பிரதேச சபைக்கு உட்பட்ட பிரதேசங்களில் நீர் வழிந்தோடக்கூடிய வகையில் கால்வாய்களைத் துப்பரவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று தெரிவித்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

சபையின் மாதாந்த அமர்வுதவிசாளர் த.நடனேந்திரன் தலைமையில் சபைமண்டபத்தில் நேற்று முன் தினம் நடைபெற்றது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உறுப்பினர் ச.ஜெயந்தன் தீர்மான வரைவை சபையில் முன்வைத்தார்.

"சபைக்குஉட்பட்டபிரதேசங்களில் தாழ்வான மற்றும் உயர்ந்த நிலங்கள் உள்ளன. பருவ மழையால் தாழ்வான பிரதேசங்களில் வெள்ளம் தேங்கும் வாய்க்கால்கள், பாலங்கள், மதகுகளால் வெள்ளம் ஓடாதவாறு அடைபட்டுக் காணப்படுகின்றன. வெள்ளநீர்குடிமனைகளுக்கு அருகில் தேங்கி தொற்று நோய்கள் ஏற்பட வாய்ப்புகள் உள்ளன. சபை வீதி, அபிவிருத்தி திணைக்களம், வீதி அபிவிருத்தி அதிகார சபைகளுக்குச் சொந்தமான கால்வாய்கள், மதகுகள், பாலங்கள் துப்புரவு செய்யப்பட வேண்டும்என்று அவ்ரதுதீர்மான வரைவில் கூறப்பட்டது.

இது தொடர்பில் உரிய அதிகாரிகளுக்குத்தெரியப்படுத்திவெள்ளம் வடிந்தோடும் வகையில் துப்பரவு செய்யுமாறு கடிதம் அனுப்பி அதனை நடைமுறைப்படுத்துவது என்று தெரிவிக்கப்பட்டது. அது தீர்மானமாக நிறைவேற்றப்பட்டது.

**வீதிகளில் வேகத் தடை**

சபையின் எல்லைக்குட்பட்ட முக்கிய சந்திகளில் விபத்துகள் ஏற்படுகின்றன. வேகத்தடை அமைக்க வேண்டும். இதுதொடர்பில்நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்றுமுடிவெடுக்கப்பட்டது.

**கடைகள் மீள் கேள்வி கோரல்**

சுழிபுரம்சத்தியகாட்டுச்சந்தையின் 3 கடைகள், வட்டுக்கோட்டையில் உள்ள 5 கடைகள் உட்பட 8 கடைகளுக்குக் கேள்வி கோரல் நடைபெற்றது. குத்தகைக்கு எடுத்தவர்கள் முழுமையாகப் பணத்தைச் செலுத்திக் கடைகளை எடுக்க முன்வராததால் மீள் கேள்வி கோரல் செய்வது என்று முடிவெடுக்கப்பட்டது.

**போக்குவரத்துக்கு இடையூறானவை**

போக்குவரத்துக்கு இடையூறாக வீதிகளின் இருமருங்கிலும் உள்ள மரங்கள், கொடிகளையும்மின்கம்பங்களில் படரும் கொடிகளையும் அகற்ற வேண்டும். இல்லை என்றால் மின் தொடர்பான பிரச்சினைகள் ஏற்படும். இதனை உரியவர்களின் கவனத்துக்குக் கொண்டுவந்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி உறுப்பினர் சி.இதயகுமாரன் தீர்மான வரைவை முன்வைத்தார். அது தீர்மானமாகநிறைவேற்றப்பட்டது. போக்குவரத்துக்கு இடையூறாகவுள்ளவற்றைகாணிகளுக்குஉரித்துடையோர் அகற்ற வேண்டும். 1987ஆம் ஆண்டு பிரதேச சபைச் சட்டம் 15 ஆம் இலக்க 43 ஆம் பிரிவின்படிஇதற்குநடவடிக்கைஎடுக்க முடியும். அதேபோன்று மின் கம்பங்களைச் சேதப்படுத்தும் வகையில் உள்ள மரங்கள், கொடிகளை மின்சார சபையுடன் அகற்ற நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவித்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

(4,7)

# பிள்ளைகளுக்கு விஷம் வழங்கிய தாயாருக்கு எதிராக நடவடிக்கை

## மூத்த பொலிஸ் அத்தியட்சகர் தெரிவிப்பு

வவுனியா, ஒக். 19

வவுனியா செட்டிகுளம் பகுதியில் தனது மூன்று பிள்ளைகளுக்கு விஷம் அருந்தக் கொடுத்து, தானும் அருந்தி உயிர்மாய்க்க முயன்ற தாயும் அவரது பிள்ளைகளும் அண்மையில் காப்பாற்றப்பட்டிருந்தனர். உயிர்மாய்க்க முயன்ற தாயாருக்கு எதிராக நீதிமன்றில் வழக்குத்தாக்கல்செய்ய சட்ட ஆலோசனை மேற்கொள்ளப்படுகின்றது என்று வவுனியா பிராந்திய மூத்த பொலிஸ் அத்தியட்சகர் ரி.எஸ்.எம். என். தென்னக்கோன் தெரிவித்தார்.

உயிர்மாய்ப்புகளுக்கு எதிரான விழிப்புணர்வுக்கருத்தரங்குவவுனியாவில் நேற்று இடம்பெற்றது. அதில்உரையாற்றும்போதுஅவர் மேலும் தெரிவித்ததாவது:

எனது பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் 13 பொலிஸ் நிலையங்களில் கடந்த பத்து மாதங்களுள் பெண்கள் 10பேர், ஆண்கள் 12பேர் என 22பேர் உயிர்மாய்த்துள்ளனர். அதிகமானவர்கள் இளவயதினர்.

செட்டிகுளம் பகுதியில் தாய் ஒருவரால் நஞ்சு அருந்தக் கொடுக்கப்பட்ட பிள்ளைகள் 14,15,16 வயதுடையவர்கள். தாய் தனதுபிள்ளைகளுக்குவிஷம்வழங்கமுடியாது. அவர்களின் பிள்ளைகளுக்கு உயிர் ஆபத்து நிகழ்ந்தால் தாய் தான் காரணமாக அமைந்துவிடுவார்.

பிராந்தியத்தில் 21 முதல் 25வயதுக்குட்பட்டவர்கள் 8பேரும், 31 தொடக்கம் 35வயதுக்கு உட்பட்டவர்கள் 7பேரும் உயிர்மாய்த்துள்ளனர்.

உங்களுக்கு சுகவீனம் ஏதும் இருந்தால்மருத்துவரிடம்சென்று கூறுங்கள். பிரச்சினைகள் இருந்தால் பொலிஸ் நிலையத்துக்குச் சென்று கூறுங்கள் - என்றார்.

வவுனியா நகரசபை கலாசார மண்டபத்தில் வவுனியா பிரதேச செயலகம், இறம்பைக்குளம்ஈஷி மிஷன் சுவிஷேச சபை என்பன இணைந்து உலக உளநல தினத்தை முன்னிட்டு கருத்தரங்கை ஏற்பாடு செய்தன. (4, 110)

# அரச அதிகாரிகள் மதிக்கிறார்களில்லை

## கவலைப்படுகின்றனர் வலி. வடக்கு சபை உறுப்பினர்கள்

யாழ்ப்பாணம், ஒக். 19

வலிகாமம் வடக்குப் பிரதேச சபை உறுப்பினர்கள்தேவையின்நிமித்தம் கிராமமட்ட அரசஅதிகாரிகளை நாடும் பொழுது உரிய மரியாதை கிடைப்பதில்லைஎன்றுஉறுப்பினர்கள் நேற்றுச் சபையில் தெரிவித்தனர்.

வலி. வடக்கு பிரதேச சபையின் மாதாந்த அமர்வு தவிசாளர் சோ.சுகிர்தன்தலைமையில் சபை மண்டபத்தில் நேற்று நடைபெற்றது. அங்கு உறுப்பினர்கள் இவ்வாறு தெரிவித்தனர்.

"மக்கள் பிரதி நிதிகளான எங்களை அரச அதிகாரிகள் மதிப்பதில்லை. பிரதேச செயலக நிர்வாகத்தின் கீழ் கிராமமட்டத்தில்பலஅதிகாரிகளை மக்களின் பிரச்சினைகள் தொடர்பாகக் கதைக்கச் செல்லும்போது தொடர்பாடல் சரியானதாக அமைவதில்லை. வீட்டுத் திட்டம், காணிக்கான அனுமதி போன்ற விடயங்களுக்காகச் செல்கின்றோம். எங்களைக் கண்டுகொள்கிறார்களில்லை. மக்களின் தேவைகள் தொடர்பாக அதிகாரிகளைச் சந்திக்கச்சென்றுஅவமானத்துடன் திரும்பிவருகிறோம். சில அதிகாரிகள் தாங்கள் வைத்ததுதான் சட்டம் என்று'மாபியா'போலச்செயற்படுகிறார்கள். இவற்றுக்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்" என்றனர்.

இது தொடர்பில் பிரதேச செயலருக்குக் கடிதம் அனுப்புவதாகத் தீர்மானம்நிறைவேற்றப்பட்டது.

**கோழி இறைச்சிக் கடைகள்**

கோழி இறைச்சிக் கடைகளை வைத்திருப்பவர்கள் கழிவகற்றல் தொடர்பான விளக்கத்தைச் சபையில்சமர்ப்பித்தால்மாத்திரமேஅனுமதிப்பத்திரம்வழங்கப்படும்என்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

கோழிஉரித்தகழிவுகளைமூட்டையாகக் கட்டி தெருவில் எறிந்துவிட்டுப் போகின்றனர்.

கோழிப்பண்ணையாளர்கள்தமது கோழிக்கழிவுகளை எவ்வாறு அப்புறப்படுத்துகின்றனர்என்றுசபைக்குத்தெரிவிக்கவேண்டும். அப்போது தான்வருடாந்த அனுமதிப்பத்திரம் வழங்கப்படும். உதாரணமாக நிலத்தில் புதைக்கலாம் அல்லது சபைக்குக் குறிப்பிட்டதொகைப் பணத்தை செலுத்துவதன் மூலமாக சபையினால் கழிவுகள் அப்புறப் படுத்தலாம் என்று அதில் வலியுறுத்தப்பட்டது.

**கூட்ட மற்றும் கணக்கு அறிக்கை**

சபையின் கூட்ட அறிக்கை முக்கிய ஆவணம். சபையில் முன்வைக்கப்படும்விடயங்கள்அறிக்கையில் குறிப்பிடப்படவில்லை என்று சிறிலங்கா சுதந்திரக் கட்சி உறுப்பினர் பொ.ஆதவன் கூறினார். சபையில் தீர்மானங்கள் முன்வைக்கப்பட வேண்டுமானால் எட்டு நாள்களுக்குமுன்புசெயலரிடம்சமர்ப்பிக்க வேண்டும் என்று சொல்கிறார்கள். சில சமயங்களில் ஏழு நாள்களுக்கு முன்பு அதைக் கொடுத்தால் ஏற்றுக்கொள்ளப்படுவதில்லை.

சபை ஆரம்பித்த நாளில் இருந்து அறிக்கைகளில் சில விடயங்கள் தவறவிடப்படுவதாகச்சுட்டிக்காட்டி வருகிறேன். அது திருத்திய அறிக்கையில் கூட வருவதில்லை. அறிக்கை எழுதுதல் தொடர்பாக பரீட்சயமான அலுவலர்களை நியமிக்குமாறு கூற சபையினர் ஏற்றுக்கொண்டனர். அது அறிக்கையில் குறிப்பிடப்படவில்லை. கணக்கு அறிக்கையும் அவ்வாறு தான் உள்ளது. வரவு-செலவுகுறிப்பிடப்பட்டுள்ளது. விவரங்கள் குறிப்பிடப்படவில்லை. ஆக்வே அறிக்கைகளைஏற்றுக்கொள்ளவில்லை - என்றார்.

"கூட்டஅறிக்கைகள் நான்குநாள்களுக்குள் கிடைக்க நடவடிக்கை எடுக்கப்படும். பொதுவானகணக்கு அறிக்கை முறை இப்படித் தான் அமையும். விரிவான கணக்கு அறிக்கை வேண்டும் என்றால் அதையும்தரமுடியும்"என்றுதவிசாளர் தெரிவித்தார்.

கிராம அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் தலா2மில்லியன்வீதம்36வீதிகள் சீரமைக்கப்படும். சிறந்த உள்ளூராட்சி நூலகமாக அளவெட்டி நூலகம் தெரிவு செய்யப்பட்டுள்ளது. அதற்கான விருது கொழும்பில் வழங்கப்படும் என்று தவிசாளர் சபையில்தெரிவித்தார். (4,7)




Cine World -Kotahena 10.30/2.30/6.30 (0775-766365)
Majestic - Jaffna 4.30 (0212-227712)
Raja - Jaffna 10.30/2.30/6.30 (0212-227332)
Saru Cinema - Point Pedro (0775-163461)
G.K.Cinemax - Kalmunai 10.30 (0672-226792)
Suganthi - Batticaloa 2.00 (0652-223516)
Bala - Chavakachcheri One Show Only (0776-991002)
Dinusha - Navalapitiya 10.30 (0542-222423)
Kibesh - Mankadu One Show Only (0785-925899)
Nahams - Chunnaham 10.30 (0542-222423)
மற்றும் நாடெங்கிலும் உள்ள ஏனைய திரையரங்குகளிலும்


## உருவப் படத் திறப்பு விழாவும் கிரியைகளும்



குப்பிழான், யாழ்ப்பாணம்
சமாதி கோயில் சரவணமுத்து
சுவாமிகளின் மகள்

**அன்னபூரணி அம்மாள்**

அவர்கள் 05.09.2018
வெள்ளிக்கிழமை
சிவபதமடைந்து விட்டார்.

அவர்களின் நினைவாக 21.10.2018 ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு இந்தியா கும்பகோணம் வட்டிப்பிள்ளையார் கோயில் அருகில் இல.11 , சரோஜினி நகர் என்னும் இடத்தில் உருவச் சிலை சிறப்பு விழாவும் கிரியைகளும் நடைபெறும் என்பதனை அறியத்தருகின்றோம்.

குடும்பத்தினர் மற்றும் உறவினர்கள்.
குப்பிழான்

## 5ஆம் ஆண்டு நினைவஞ்சலி

**செல்வி சதுஷா சுந்தரலிங்கம்**



அன்னை மடியில்
02.09.2002

ஆண்டவன் அடியில்
19.10.2013

ஐந்தாண்டுகள் ஆனதுவோ உங்கள் முகம் கண்டு
ஆறவில்லை நம் இதயம் அன்பும் பாசமும் நிறைந்த
பொக்கிஷம் நீங்கள் நித்தம் புலம்புகின்றோம்
உங்கள் திருமுகம் காணாமல் ஆறவில்லை எங்கள் துயர்
உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

மட்டுவில் வடக்கு,
சந்திரபுரம்,
சாவகச்சேரி.

குடும்பத்தினர்
சி.கந்தையா (பேரன்), க.வாமதேவி (பேர்த்தி),
சதுஷன் (தம்பி), மாமன்மார், அன்ரிமார்.

## LOLC FINANCE PLC

### Gigantic Motor Vehicle Auction Sale
### On Tuesday day 23rd October 2018

To Be Held At
Station Road, Vairavapuliyankulam, Vavuniya.

**FOUR WHEEL TRACTOR**

| | | | | |
|---|---|---|---|---|
| MAHINDRA | 2523CC | 2006 | NCRA | XXXX |
| MAHINDRA | 2500CC | 2016 | NCRF | XXXX |
| MAHINDRA | 2523CC | 2012 | NPRD | XXXX |
| TAFE | 2500CC | 2016 | SP RE | XXXX |
| TAFE | 2500CC | 2012 | NCRC | XXXX |
| TAFE | 2500CC | 2015 | EP RD | XXXX |

**TWO WHEEL TRACTOR**

| | | | | |
|---|---|---|---|---|
| SIFANG GN | 815CC | | NP SN | XXXX |

**HARVESTER**

AGROTECH 4LZ-02 COMBINE
KUBOTA DC-69G COMBINE
KUBOTA DC-68G COMBINE
AGROTECH 4LZ-02 COMBINE
MF MASSEY FERGUSON

**MOTOR BIKE**

| | | | | |
|---|---|---|---|---|
| BAJAJ CT 100 | 100CC | 2016 | NC BEL | XXXX |
| BAJAJ DISCOVER | 150CC | 2011 | NE WM | XXXX |
| BAJAJ PLATINA | 102CC | 2015 | NP BDC | XXXX |
| BAJAJ PLATINA | 102CC | 2017 | NC BDW | XXXX |
| BAJAJ PLATINA | 102CC | 2017 | NP BFM | XXXX |
| BAJAJ PLATINA | 102CC | 2017 | NC BET | XXXX |
| BAJAJ PULSAR | 149CC | 2011 | NP BFW | XXXX |
| BAJAJ PULSAR | 150CC | 2015 | NP WT | XXXX |
| BAJAJ PULSAR | 150CC | 2016 | NP BDE | XXXX |
| BAJAJ PULSAR | 150CC | 2016 | NP BEG | XXXX |
| BAJAJ PULSAR | 150CC | 2017 | NP BEP | XXXX |
| BAJAJ PULSAR | 150CC | 2015 | NP BGA | XXXX |
| BAJAJ PULSAR | 200CC | 2016 | NP BDH | XXXX |
| DEMAK DZR | 120CC | 2017 | NP BFP | XXXX |
| DEMAK WARRIOR | 150CC | 2016 | NP BFY | XXXX |
| HERO DASH VX | 110CC | 2017 | NP BEU | XXXX |
| HERO DASH VX | 110CC | 2016 | NP BFA | XXXX |
| HERO DASH | 110CC | 2016 | NP BFC | XXXX |
| HERO DASH | 110CC | 2016 | NP BEK | XXXX |
| HERO DASH | 110CC | 2016 | NP BED | XXXX |
| HERO DASH-VX | 110CC | 2014 | NP BFA | XXXX |
| HERO DAWN | 98CC | 2015 | NP BBT | XXXX |
| HERO DAWN | 98CC | 2015 | NP BCW | XXXX |
| HERO GLAMOUR | 124CC | 2017 | NP BDL | XXXX |
| HERO GLAMOUR | 124CC | 2016 | NP BFY | XXXX |
| HERO HF DELUXE CAST SELF | 100CC | 2017 | NP BEV | XXXX |
| HERO HF DELUXE | 100CC | 2013 | NP BFJ | XXXX |
| HERO HF DELUXE | 98CC | 2015 | NP BBB | XXXX |
| HERO HONDA KARIZMA | 225CC | 2017 | NP BCL | XXXX |
| HEROMAESTRO | 110CC | 2015 | NP BFK | XXXX |
| HERO PASSION PRO | 98CC | 2014 | NP BDJ | XXXX |
| HERO PLEASURE | 100CC | 2015 | NP BBG | XXXX |
| HERO PLEASURE | 100CC | 2015 | NP BCR | XXXX |
| HERO PLEASURE | 100CC | 2015 | NP BDP | XXXX |
| HERO PLEASURE | 100CC | 2016 | NP BDP | XXXX |
| HERO PLEASURE | 102CC | 2014 | NP BEP | XXXX |
| HERO SPLENDER | 98CC | 2015 | NP BAV | XXXX |
| HERO SPLENDOR | 98CC | 2017 | NP BCR | XXXX |
| HF DELUXE CAST SELF | 100CC | 2016 | NP BFB | XXXX |
| HONDA ACTIVA | 109CC | 2016 | NP BEE | XXXX |
| HONDA ACTIVA | 109CC | 2015 | NP BEB | XXXX |
| HONDA DIO | 109CC | 2016 | NP BDI | XXXX |
| HONDA DIO | 109CC | 2016 | NP BED | XXXX |
| HONDA DIO | 110CC | 2016 | NP BES | XXXX |
| HONDA DIO | 110CC | 2017 | NP BEU | XXXX |
| HONDA SHINE APDS | 125CC | 2013 | NP BFM | XXXX |
| HONDA TWISTER | 109CC | 2016 | NP BAV | XXXX |
| SUZUKI GIXXER | 150CC | 2015 | NP BEC | XXXX |
| TVS APACHE | 180CC | 2016 | NP BDN | XXXX |
| TVS APACHE | 180CC | 2017 | NP BFG | XXXX |
| TVS APACHE | 200CC | 2014 | NP BFD | XXXX |
| TVS METRO | 100CC | 2017 | NP BBF | XXXX |
| TVS WEGO | 110CC | 2016 | NP BFK | XXXX |
| TVS XL SUPER HD | 100CC | 2016 | NP BED | XXXX |
| TVS XL SUPER | 100CC | 2016 | NP BFP | XXXX |
| YAMAHA SALUTO | 125CC | 1993 | NP BDU | XXXX |

**CAR**

| | | | | |
|---|---|---|---|---|
| SUBARU 110 | 1000CC | 2005 | 18 | XXXX |

**LORRY**

| | | | | |
|---|---|---|---|---|
| LANKA ASHOK LEYLAND | 6540CC | 2005 | NP LA | XXXX |

**THREE WHEELER**

| | | | | |
|---|---|---|---|---|
| BAJAJ | 145CC | 2006 | NP QD | XXXX |
| BAJAJ | 145CC | 2004 | NP QI | XXXX |
| BAJAJ | 150CC | 2004 | NP JL | XXXX |
| BAJAJ | 150CC | 2003 | NP JW | XXXX |
| BAJAJ | 174CC | 2007 | NP HQ | XXXX |
| BAJAJ | 174CC | 2009 | CP QN | XXXX |
| BAJAJ | 174CC | 2009 | NP QS | XXXX |
| BAJAJ | 174CC | 2010 | NP QU | XXXX |
| BAJAJ | 174CC | 2010 | NC YB | XXXX |
| BAJAJ | 174CC | 2010 | NC YC | XXXX |
| BAJAJ | 174CC | 2011 | NP QX | XXXX |
| BAJAJ | 198CC | 2012 | NP YM | XXXX |
| BAJAJ | 198CC | 2012 | NP AAG | XXXX |
| BAJAJ | 198CC | 2012 | WP YY | XXXX |
| BAJAJ | 198CC | 2012 | NW AAE | XXXX |
| BAJAJ | 198CC | 2013 | NP AAF | XXXX |
| BAJAJ | 198CC | 2014 | NP AAJ | XXXX |
| BAJAJ | 198CC | 2014 | NC AAO | XXXX |
| BAJAJ | 198CC | 2015 | NE AAW | XXXX |
| BAJAJ | 198CC | 2011 | NP ABI | XXXX |

**TRUCK**

| | | | | |
|---|---|---|---|---|
| TATA ACE | 702CC | 2015 | NP PR | XXXX |

### On View – 20th, 21th & 22nd October 2018

Between 9.00 a.m – 5.00 p.m

**Conditions of Sale**

✓Entrance: By a non refundable Ticket of Rs. 500.00 per person & a refundable deposit of Rs. 5,000.00 per person on the day of Auction.
✓Payment: **Non – refundable** initial deposit of 25% in Cash at the fall of the Hammer & Balance 75% & Removal latest by 3:00 pm on Wendsday 31st October 2018 to be paid to LOLC Finance PLC No.27, 2nd Cross Street, Vavuniya.
✓The Management has the right to withdraw any vehicle (s) from the Auction without prior notice.
✓The decision of the Auctioneer will be final.

**SCHOKMAN & SAMERAWICKREME**

*One Country. One Auctioneer. Celebrating 126Years of Service Excellence.*

D,ads

Head Office & Showroom
24, Torrington Road, Kandy.
Tel: 081 2227593,
Fax: 081 2224371
Email: schokmankandy@sltnet.lk

City Office & Showroom:
6A, Fairfield Gardens,Colombo 08.
Tel: 011 2502680, 2585408.
Tel / Fax: 011 2588176
Email: schokman@samera1892.com

Web: www.sandslanka.com

## 6ஆம் ஆண்டு நினைவலைகள்



**திருமதி தவராணி தவராசா**

| அன்னை மடியில் | ஆண்டவன் மடியில் |
|---|---|
| 24.01.1959 | 25.10.2012 |

திதி: தசமி (19.10.2018)

மீளாத் துயரில் நீர் உறங்கி
ஆண்டுகள் ஆறு ஆனதம்மா
மீண்டு எப்போது வருவீர் என
மனதும் இங்கே ஏங்குதம்மா

எத்தனை ஆண்டுகள் கடந்தாலென்ன
ஆறவில்லை எம் மனது - உம்
புன்னகை தழும்பும் பூ முகத்தை
காண்பதினி எப்போதம்மா

மாற்றம் ஒன்றே மாறாதென்று
எம் வாழ்விலும் எத்தனை மாற்றங்கள் - ஆனாலும்
சிறிதளவு மாறாமல் - இன்னும்
எம் மனமெல்லாம் நீ தானம்மா.....!

இறையவன் திருவடியில் - நீ
வாழ்வாங்கு வாழ்வாயம்மா - எம்
இறையாகவே நீ இருந்து - எமை
என்றென்றும் காத்திடம்மா

கு.தவராசா
115/2, ஆலடி வீதி,
தோணிக்கல் வவுனியா. (cs 399) (13.17)

என்றும் மீளாத்துயருடன்
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

**செல்வி மேரி அஞ்சலா (தேவி) செபஸ்ரியாம்பிள்ளை**



பிறப்பு 25.07.1961 இறப்பு 16.10.2018

பற்றிமாகிரி பண்டத்தரிப்பை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செல்வி மேரி அஞ்சலா (தேவி) செபஸ்ரியாம்பிள்ளை 16.10.2018 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னாரின் பூதவுடல் நல்லடக்க ஆராதனைக்காக நாளை (20.10.2018) சனிக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரது இல்லத்திலிருந்து பண்டத்தரிப்பு புனித அந்தோனியார் தேவாலயத்துக்கு எடுத்துச்செல்லப்பட்டு இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்ட பின்னர் அந்தோனியார் சேமக்காலைக்கு நல்லடக்கத்துக்காக எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பற்றிமா கிரி
பண்டத்தரிப்பு. (c7956)

தகவல்: திரு.திருமதி செபஸ்ரியாம்பிள்ளை
மரியநாயகி குடும்பத்தினர்.

# மைத்திரியின் கருத்து திரிபுபடுத்தப்பட்டுள்ளது

## இந்திய அயலுறவு அமைச்சு தெரிவிப்பு

கொழும்பு, ஒக். 19

**அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன, கடந்த அமைச்சரவைக் கூட்டத்தில் வெளியிட்ட கருத்து திரிபுபடுத்தப்பட்டுள்ளமை உறுதி செய்யப்பட்டுள்ளதாக இந்திய அயலுறவு அமைச்சின் பேச்சாளர் ரவீஷ் குமார் தெரிவித்தார்.**

அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவுக்கும், இந்திய தலைமை அமைச்சர் நரேந்திர மோடிக்கும் இடையில் இதுதொடர்பில் நேற்று முன்தினம் அலைபேசி உரையாடல் இடம்பெற்றது. இதன்போது இந்த விடயம் தொடர்பில் இருவரும் தெளிவுபடுத்திக் கொண்டதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பில் இந்தியத் தலைமை அமைச்சர் நரேந்திரமோடியின் அலுவலகத்தினால் ஊடக அறிக்கை ஒன்று வெளியிடப்பட்டுள்ளது.

இலங்கை அரச தலைவர் மற்றும் இந்தியத் தலைமை அமைச்சர் ஆகியோருக்கு இடையில் முரண்பாட்டைத் தோற்றுவிக்கும் வகையிலும், இரு நாடுகளுக்கும் இடையிலான நல்லுறவைப் பாதிக்கும் நோக்கிலும் இந்தச் செய்தி வெளியிடப்பட்டுள்ளது என்று அந்த அறிக்கையில் சுட்டிக் காட்டப்பட்டது.

அந்தச் செய்தி முற்றிலும் உண்மைக்குப் புறம்பானது என்றும் இந்தியத் தலைமை அமைச்சர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

தனது கொலை முயற்சியில் 'றோ' தொடர்புபட்டுள்ளது என்கிற கருத்தை கடந்த செவ்வாய்க் கிழமை நடந்த அமைச்சரவைக் கூட்டத்தில் அரச தலைவர் கூறினார் என்று இந்தியாவில் இருந்து வெளியாகும் நாளிதழான 'த ஹிண்டு' நேற்றுமுன்தினம் செய்தி வெளியிட்டிருந்தது.

இந்தச் செய்தி நேற்றுமுன்தினம் காலை வெளியானதைத் தொடர்ந்து கொழும்பு அரசியல் வட்டாரங்களில் பெரும் பரபரப்பு ஏற்பட்டது. அரச தலைவரின் ஊடகப் பிரிவு அவசரமாக மறுப்புச் செய்தி ஒன்றை வெளியிட்டது.

"அரச தலைவரைப் படுகொலை செய்ய மேற்கொள்ளப்பட்டதாகக் கூறப்படும் சதி முயற்சியில் இந்திய உளவுத்துறையின் எந்தவொரு ஈடுபாடு குறித்தும் அரச தலைவர் கருத்துத் தெரிவிக்கவில்லை என்பதை அரச தலைவர் ஊடகப் பிரிவு தெளிவுபடுத்த விரும்புகின்றது" என்று அந்த மறுப்பில் தெரிவிக்கப்பட்டது.

# மகாத்மா காந்தியின் கனவை ஈழத்தில் கண்ணுற்றேன்

## கூறுகின்றார் இயக்குநர் பாரதிராஜா

கொழும்பு, ஒக் 19

தமிழ் என்ற ஒரு மொழியும் தமிழன் என்ற ஓர் இனமும் ஒரு வீரம் கொண்ட கறுப்பு முகம் தான் என்பதை உலக்கத்துக்கு எடுத்துக்காட்டியது ஈழமண் தான். பெண்கள் கழுத்து முழுக்க நகை அணிந்து இரவு 12 மணிக்கு வீதியிலே சென்று பாதுகாப்பாக வீடு திரும்புகிறார்களோ அன்றுதான் இந்த நாட்டுக்கு சுதந்திரம் உண்டு என்று மகாத்மா காந்தி சொன்னார். இது இந்தியாவில் நடக்கவில்லை. ஆனால் அவரது கனவை ஈழ மண்ணில் வன்னிப் பிரதேசத்தில் நேரடியாகப் பார்த்தேன் என்று தென்னிந்திய திரைப்பட இயக்குநர் பத்மசிறி பாரதிராஜா தெரிவித்தார்.



அகிலன் மாற்றுத்திறன் குழந்தைகளின் கலை நிகழ்வு மற்றும் கலைஞர்கள் மதிப்பளிப்பு மட்டக்களப்பு செங்கலடி செளபாக்கியா மண்டபத்தில் நேற்றுமுன்தினம் மாலை நடைபெற்றது. நிகழ்வில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஈழம் மற்றும் மலேசியா இரண்டுமே தமிழே எங்கள் இனத்தின் மொழி என்பதைப் பொத்திப் பொத்திக் காப்பாற்றிக் கொண்டிருக்கின்றன. நானும் ஆங்கிலம் கலந்து உரையாடுவேன். ஆனால் இந்த ஈழமண்ணில் விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் ஆண்ட காலத்தில் அனைத்துமே தமிழிலே இருந்தன.

வள்ளுவர் பிறப்பு மற்றும் பெரிய பெரிய இலக்கிய மேதைகள் கம்பராமாயணம் படைத்த தமிழகம் அற்புதமானதுதான். ஆனால் தமிழ் என்ற ஒரு மொழியும் தமிழன் என்ற ஒரு இனமும் ஒரு வீரம் கொண்ட கறுப்பு முகம்தான் தமிழன் என்று உலகுக்கு எடுத்துக்காட்டியது ஈழமண்ணிலேயே.

மனிதன் மறைந்து போனாலும் தமது தடயங்களைப் பதிவுசெய்துவிட்டு செல்ல வேண்டும். இது இந்த பூமிக்கு நாம் செலுத்த வேண்டிய வாடகை. எமது பிறப்பில் எமது கலைகளைக் காப்பாற்ற வேண்டும். இந்த மேடையில் மதிக்களிக்கப்பட்ட கலைஞர்கள் உங்கள் தடங்களைப் பதிவு செய்துள்ளீர்கள்.

ஈழ மண்ணில் அற்புதமான கலைஞர்கள் உள்ளார்கள் பெரிய இலக்கியவாதிகள் உருவாகியுள்ளனர். இயக்குநர் பாலு மகேந்திரா இந்த மண்ணிலிருந்துதான் வந்திருந்தார் இங்குள்ளவர்களுக்கும் சரியான வாய்ப்புகள் கிடைத்திருந்தால் மிகச்சிறந்த கலைஞர்கள் உருவாகுவார்கள் - என்றார்.

# ஐ.தே.வினரின் அமைச்சுக்குட்பட்ட நிறுவனங்களில் கை வைத்த மைத்திரி

கொழும்பு, ஒக். 19

ஐ.தே.கவின் எதிர்ப்புகளுக்கு மத்தியில் இலங்கை வங்கி, மக்கள் வங்கி, முதலீட்டுச் சபை ஆகியவற்றின் பணிப்பாளர் சபைகளைக் கலைக்க அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன முடிவெடுத்துள்ளார்.

இதற்கான காரணம் என்ன என்பதை அவர் பகிரங்கமாக வெளியிடவில்லை. அது சம்பந்தமாக அமைச்சர்களுக்கும் அறிவித்தல் ஒன்றை அரச தலைவர் விடுக்கவில்லை என்று அறிய முடிகிறது.

அரசதலைவரின் இந்த முடிவை எதிர்த்துள்ள ஐ.தே.க. அதன் பணிப்பாளர்கள் எவரையும் விலக வேண்டாம் என்று அறிவித்துள்ளது.

இவை அனைத்தும் ஐ.தே.கவின் கட்டுப்பாட்டு அமைச்சுகளாக, இயங்குவதால் , இதை முன்னுதாரணமாகக் கொண்டு அரச தலைவர் எதிர்காலத்தில் ஏனைய அமைச்சுகளிலும் கைவைக்கக் கூடும் எனும் பேச்சுகள் தோன்றியுள்ளன.

நிகழ்வொன்றின்போது இது தொடர்பில் அறிவித்தலை திடீரென அரசதலைவர் வெளியிட்டுள்ளார்.

அதுவரை யாருமே இது தொடர்பில் அறிந்திருக்கவில்லை எனத் தமது அதிர்ச்சியை பலர் வெளியிட்டுள்ளனர்.



வட மேல் மாகாணத்தின் முன்னாள் எதிர்க்கட்சி தலைவர் சமல் செனரத் ஐக்கிய தேசியக் கட்சியின் புதிய முதன்மை நிறைவேற்று அதிகாரியாக நேற்று நியமிக்கப்பட்டார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலரும் கல்வி அமைச்சருமான அகிலவிராஜ் காரியவசம் நியமனக் கடிதத்தை வழங்கினார்.




# ஆடைக் கட்டுப்பாட்டால் கிளம்பியது சர்ச்சை

கொழும்பு, ஒக். 19

ஆடைக் கட்டுப்பாடு தொடர்பில் காலியில் சமூக பொலிஸ் பிரிவினால் காட்சிப்படுத்தப்பட்டுள்ள பெயர்ப்பலகை தொடர்பில் சர்ச்சை எழுந்துள்ளது.

சுற்றுலாப் பயணிகளின் ஆடைக் கட்டுப்பாடு தொடர்பில் காட்சிப்படுத்தப்பட்டுள்ள விளம்பரப்பலகை தொடர்பாக இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை கவனம் செலுத்தியுள்ளது.

"சரியான முறையில் ஆடை அணிந்து, இலங்கை கலாசாரத்தை மதிக்க வேண்டும்" என விளம்பர பலகையில் குறிப்பிடப்பட்டுள்ளது. எனினும் அதில் பெண்கள் இருவர் பிகினி ஆடை அணிந்திருப்பதைப் போன்று காட்சிப்படுத்தப்பட்டுள்ளது.

பிகினி அணிந்து அந்தப் பகுதி கடற்கரையில் நடப்பதற்கு அனுமதிப்பதில்லை என்பதனையே அந்த ஒளிப்படம் சுட்டிக்காட்டியுள்ளது.

சுற்றுலாப் பயணிகள் ஆடைக் கட்டுப்பாடு தொடர்பில் இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை தற்போது தீவிர கவனம் செலுத்தியுள்ளது. இலங்கையின் அழகிய கடற்கரைகளை ரசிக்கும் சுற்றுலாப்பயணிகளுக்கு உடைக் கட்டுப்பாடு அவசியமில்லை என இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை குறிப்பிட்டுள்ளது.

# அழுவதா அல்லது சிரிப்பதா என்றே தெரியவில்லை!

## அமைச்சர் சுஜீவ சேனசிங்க தெரிவிப்பு

கொழும்பு, ஒக். 19

நாட்டில் அரசியல் செய்ய முடியாது. அரசியலை விட்டு விலகுமாறு தனது தாயார் பணிப்புரை விடுத்துள்ளதாக இராஜாங்க அமைச்சர் சுஜீவ சேனசிங்க தெரிவித்துள்ளார்.

இலங்கை முதலீட்டுச் சபையில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

இந்தச் செய்தியாளர் சந்திப்பில் அழுவதா அல்லது சிரிப்பதா என்பது தெரியவில்லை. எமது நாட்டுக்கு தொடருந்து, பேருந்து போன்ற பல்வேறு புதிய திட்டங்கள் கொண்டு வரப்படுகின்றன. அவற்றுக்கு உடனடியாக அனுமதி வழங்க முடியாது. இவ்வாறு அனுமதி கிடைக்காவிட்டால் உடனடியாக ஊடகங்களை அழைத்து சந்திப்பு நடத்துகின்றனர். ஊடகங்களும் உண்மை நிலைமையை அறிந்து கொள்ளாது செய்தி வெளியிடுகின்றன.

கடந்த 2017ஆம் ஆண்டு இந்த தொடருந்துத் திட்டம் தொடர்பில் அனுமதி கோரப்பட்டிருந்தது. இது தொடர்பான மதிப்பீடுகளின் பின்னர் அனுமதி மறுக்கப்பட்டது. ஐந்து பில்லியன் யூரோ பெறுமதியான இந்த முதலீட்டுக்கு உரிய ஆவணங்கள் சமர்ப்பிக்கப்படவில்லை. எவ்வளவு பெரிய திட்டம் என்றாலும் உரிய ஆவணங்கள் இன்றி அனுமதி வழங்கப்பட முடியாது. இந்த முதலீட்டுக்காக எண்ணக்கரு ஒன்றே சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. எண்ணக்கரு ஒன்றுக்காக அனுமதி வழங்கப்பட முடியாது. இந்தத் திட்டத்தைக் கொண்டு வரும் நபர்கள் வங்கிகளில் கடன் பெற்றுக் கொண்டு செலுத்த முடியாது. அவர்களுக்கு எதிராக வழக்குத் தொடரப்பட உள்ளது. இவ்வாறான ஒரு பின்னணியில் பெரிய திட்டமொன்றை அவர்களுக்கு வழங்குவது சாத்தியப்படாது என்ற காரணத்தினால் அனுமதி மறுக்கப்பட்டது.

ஊடகங்களில் வெளியிடப்படும் செய்திகள் எவ்வித உறுதிப்படுத்தலும் இன்றி வெளியிடப்படுகின்றன. செய்திகளைப் பார்த்த எனது தயாருக்கு குருதி அழுத்தம் ஏற்பட்டுள்ளது. எனக்கு எதிராக போலிச் செய்தி வெளியிட்ட ஒவ்வொரு ஊடகத்துக்குத் தனித் தனியாக ஐந்து மில்லியன் ரூபா இழப்பீடு கோரி வழக்குத் தொரடப்படும். மேன்முறையீட்டு நீதிமன்றம், உயர்நீதிமன்றம் உள்ளிட்ட முடிந்த அனைத்து வழிகளிலும் எனக்கு ஏற்பட்ட அநீதிக்கு எதிராக உச்ச அளவில் நடவடிக்கை எடுக்கப்படும் - என்றார்.

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## தமிழர்களின் வேதனை!

இந்தியாவின் உளவு அமைப்பான றோ எனப்படும் ஆராய்ச்சி மற்றும் பகுப்பாய்வுப் பிரிவு தன்னைக் கொல்வதற்கான சதியின் பின்னணியில் இருந்ததாகத் தனது அமைச்சரவைக் கூட்டத்தில் தெரிவிக்கப்போய், அது வெளியாகியதை அடுத்து சங்கடத்தில் மாட்டிக் கொண்டுள்ளார் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன.

அயல்நாடுகளுடனானஉறவைக்கடுமையாகப்பாதிக்கக் கூடியபாரதூரமானகுற்றச்சாட்டுக்களைமிக இலகுவாகக் கூறிவிடக்கூடியபொறுப்பற்றதன்மையைஅரசதலைவர் இதனூடாகவெளிப்படுத்தினார்என்பதுஒருபுறம்இருக்க, இந்த விவகாரம் வெளியாகியதன் பின்னணியில் தற்போதைய ஆட்சியின் உள்ளே வெடிக்கத் தயாராகக் கனன்று கொண்டிருக்கும் எரிமலை தன்னை முகம்காட்டியுள்ளது.

போருக்குப் பின்னரான சூழலில் இலங்கையைப் பங்கு போட்டுக்கொள்ளத் துடிக்கும் உலக மற்றும் பிராந்திய வல்லாதிக்க சக்திகளின் போட்டிக்குள் சிக்கிக்கொண்டு தற்போதைய ஆட்சியாளர்கள் எவ்வளவு தூரம் சின்னாபின்னமாகி இருக்கிறார்கள் என்பதும் இந்த வல்லாதிக்கச்சக்திகளின் தலையீட்டினால் ஆட்சியும் ஆட்சியாளர்களும்மிகமோசமானபாதிப்புகளைஎதிர்க்கொள்கிறார்கள் என்பதும்கூட இதன் ஊடாக வெளிப்பட்டிருக்கிறது.

அதிகாரத்தில் இருப்பது ஐக்கிய தேசியக் கட்சியும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியும் இணைந்த ஆட்சிதான் என்றாலும்,தன்மீதானகொலைமுயற்சிகுறித்தவிசாரணைகளை நீதியான முறையில் முன்னெடுப்பதற்கு அதற்குரிய அமைச்சுக்களைக் கைவசம் வைத்திருக்கும் ஐக்கிய தேசியக் கட்சி மேற்கொள்ளவில்லை என்கின்ற குறையை வெளிப்படுத்தும்நோக்குடனேயேஇந்தியவிவகாரத்தைக் கையிலெடுத்தார் அரச தலைவர் என்கின்றன அன்றைய அமைச்சரவையிலிருந்த வட்டாரங்கள்.

மைத்திரி மற்றும் கோத்தபாயவைக் கொல்வதற்கு பயங்கரவாதத் தடுப்புப் பொலிஸ் பிரிவைச் சேர்ந்த அதிகாரி ஒருவரின்துணையுடன்மேற்கொள்ளப்பட்டதாகச்சந்தேகிக்கப்படும் சதி பற்றிய செய்திகள் வெளியாகிய சமயத்தில்இந்தியக்குடிமகன்ஒருவரும்கைதுசெய்யப்பட்டார், சிறிசேனவைக் கொல்வதற்கான சதி குறித்துத் தான் அறிந்திருந்தார் என்று அந்த இந்தியக் குடிமகன் தெரிவித்திருந்தார்என்றுஊடகங்களில்செய்திகள்வெளியாகி இருந்தன, ஆனால் அது தவறான தகவல் என்று ஊடக அமைச்சு உடனடியாகவே மறுத்திருந்ததுடன்தவறானதகவல்பரப்புரை என்று ஊடக அமைச்சர் மங்கள சமரவீர அதனைக் கண்டித்துமிருந்தார். இத்தகைய பின்னணியிலேயே சிறிசேன இந்தியாவின் பங்கும் இருந்தபோதும் அது குறித்தெல்லாம் விசாரிக்கப்படவில்லை என்கிற தனது வருத்தத்தை வெளிப்படுத்தினார் என்கின்றன அமைச்சரவை வட்டாரங்கள்.


பிள்ளையார் பிடிக்கப்போய்க் குரங்கான கதையாக, சிறிசேன எதையோ சொல்லப்போக அது வெளியாகி வேறு விதமாகத் திரும்பி இரு நாடுகளுக்கும் இடையிலான உறவில்விரிசலைஏற்படுத்தும்ஆபத்தைஉருவாக்கிவிட்டது. ரணில் இந்தியாவுக்கு ஆதரவானவர், மைத்திரி இந்தியாவுக்கு எதிரானவர்என்பது போன்ற தோற்றப்பாட்டையும் கூட ஏற்படுத்திவிடுமளவுக்கு நிலமையை உருவாக்கி விட்டது.

மைத்திரிஅமைச்சரவையில்கூறியவிடயங்களைவெளிப்படுத்தி அவரைப்பலவீனப்படுத்துவதற்கானஇந்தமுயற்சியும் ரணிலையும் ஐக்கிய தேசியக் கட்சியையும் ஓரங்கட்டிவிட்டுமகிந்தவுடன்சேர்ந்துஇடைக்காலஆட்சியை அமைப்பதற்கு மைத்திரிமுற்பட்டார்என்கிறமுயற்சியும் இரு தரப்பினர் இடையேயும் ஆட்சிக்குள் குத்து வெட்டுப்பாடுகள்உக்கிரம்அடைந்துவிட்டதைவெளிப்படுத்தி நிற்கின்றன.

இப்படி ஒரு தரப்பை மறு தரப்பு மாறி மாறி கழுத்தறுக்க முயன்றுகொண்டிருக்கும் இந்த ஆட்சியின் ஊடாகப் புதிய அரசமைப்பு ஒன்றைக் கொண்டுவந்து, இனப் பிரச்சினைக்கான நிரந்தரத் தீர்வுக்கு ஓர் அடித்தளத்தை உருவாக்கிவிட முடியும் என்று நம்பிக் கொண்டிருக்க வேண்டியநிலையில்தான்தமிழர்கள்தவிக்கவேண்டியிருக்கிறது என்பதுதான் வேதனையிலும் வேதனை.

# விக்கினேஸ்வரனின் அரசியல் எதிர்காலமும் சம்பந்தனின் மௌனமும்

சேரலாதன்




தனது எதிர்கால அரசியல் தொடர்பான இறுதி முடிவை வடக்கு மாகாண முதலமைச்சர் விக்னேஸ்வரன் அறிவிக்கவுள்ளதாகத் தமிழ் மக்கள் பேரவையின் சார்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. வடக்கு மாகாண சபையின் ஆயுட்காலம் முடிவடையவுள்ள நிலையில் அவரது அறிவிப்பு வெளியாகவுள்ளமை குறிப்பிடத்தக்கது. அதுமட்டுமல்லாது தமிழ் மக்கள் பேரவையின் உண்மையான முகமும் தற்போது தெரிய வந்துள்ளது. அரசியல் கலப்பில்லாத ஓர் அமைப்பாகப் பேரவை இயங்குமென ஆரம்பத்தில் தெரிவிக்கப்பட்ட நிலையில் தற்போது விக்னேஸ்வரனின் அரசியல் எதிர்காலத்துக்கு அத்திபாரமிடுகின்ற ஓர் அமைப்பாக அது தன்னை மாற்றிக்கொண்டுள்ளது.

**சம்பந்தன் எடுத்த தவறான முடிவு**

கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தனால் அரசியலுக்குக் கொண்டு வரப்பட்டவர்தான் விக்னேஸ்வரன் என்ற கருத்துப் பரவலாக உண்டு. உயர்நீதிமன்ற நீதியரசர் பதவியிலிருந்து ஓய்வுபெற்றபின்னர் சமயம், இலக்கியம் சார்ந்த பணிகளில் ஓரளவு ஈடுபாடு காட்டி வந்த அவருக்கு அரசியல் என்றால் என்னவென்பது கடந்த வடக்கு மாகாண சபைத் தேர்தலுக்குப் பின்னர்தான் அவருக்குத் தெரியவந்திருக்கும். அப்போது மாகாணசபைத் தேர்தலில் கூட்டமைப்பின் வெற்றி ஏற்கனவே உறுதிப்படுத்தப்பட்ட நிலையில் காணப்பட்டது. விக்னேஸ்வ ரனை முன்னிறுத்தி வெற்றிபெற வேண்டிய எந்தத் தேவையும் கூட்டமைப்புக்கு எழவில்லை. இந்த நிலையில் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் தற்போதைய முதலமைச்சர் விக்னேஸ்வரனை ஏதற்காக இந்தப் பதவிக்குத் தெரிவு செய்தார் என்பது இன்னமும் புரியவில்லை. சம்பந்தன் தமது அரசியல் வாழ்க்கையில் எடுத்த தவறான முடிவாகவும் விக்னேஸ்வரனின் தெரிவு அமைந்து விட்டது.

**சம்பந்தனின் மௌனமே எல்லாவற்றுக்கும் காரணம்**

கூட்டமைப்பின் தலைவர் விட்ட தவறு இன்று அவருக்கு எதிராக அமைந்துவிட்டது. விக்னேஸ்வரன் தவறு செய்வதற்கு முற்படுகிறார் என்று தெரிந்தவுடனேயே சம்பந்தன் விழிப்புடன் செயற்பட்டு அவரைக் கூட்டமைப்பிலிருந்து அகற்றியிருக்க வேண்டும். பின்னரும் பல சந்தர்ப்பங்கள் வாய்த்திருந்தன. இருந்தபோதிலும் கூட்டமைப்பின் தலைமை அவற்றைக் கோட்டைவிட்டு விட்டது. சம்பந்தனின் மௌனமே எல்லாப் பிரச்சினைகளுக்கும் காரணமாகிவிட்டது. விக்னேஸ்வரன் முதலமைச்சராக இருந்து கடந்த ஐந்து ஆண்டுகளில் எதைச் சாதித்துவிட்டார் என்பதை அவரைத் தலையில் தாங்கி நிற்பவர்கள் ஒருகணம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். எதற்குமே உதவாத இனவாதம் கலந்த ஆவேசமான உரைகளை மாத்திரமே இவரால் ஆற்ற முடிந்துள்ளது. ஆனால், தமிழர்களிடையே குழப்பத்தை ஏற்படுத்தி பிரிவினையைத் தூண்டுவதில் அவருக்கு முழுவெற்றி கிடைத்துள்ளது.



**கூட்டமைப்பைப் பிளவு படுத்துவதில் குறி**

விக்னேஸ்வரனின் தலைமையை ஏற்கப் போவதாக ஈ.பி.ஆர்.எல்.எவ் கூறிவிட்டது. இது எதிர்பார்க்கப்பட்டதுதான். சிலர் விக்னேஸ்வரனைப் பயன்படுத்திக் கூட்டமைப்பை உடைத்து விடுவதிலேயே குறியாகச் செயற்படுகின்றனர். இதில் ஈ.பி.ஆர்.எல்.எவ் முதலிடத்தில் உள்ளது.

கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் தோற்றுப்போன அந்தக் கட்சியின் தலைவருக்குத் தேசியப் பட்டியல் மூலமாக நாடாளுமன்றத்தில் இடம் வழங்கப்படாததால் கூட்டமைப்பின் மீது அந்தக் கட்சி கடும் வெறுப்பில் உள்ளது. ஒரு கட்சியின் தலைவர் தேர்தலொன்றில் தோற்பது மக்களின் செல்வாக்கு அவருக்கு அறவே இல்லையென்பதையே எடுத்துக் காட்டுகின்றது. மக்களின் தீர்ப்புக்குத் தலைவணங்க வேண்டியது அவரது முக்கிய பொறுப்பாகும். இதைவிடுத்துப் பின் கதவால் பதவியைப் பெறுவதற்கு முயற்சி செய்வதும் அது சாத்தியமாகவில்லையென்றதும் மற்றவர்கள் மீது பழியைச் சுமத்துவதும் சரியான காரியங்களாகத் தென்படவில்லை. விக்னேஸ்வரனுக்கு ஆதரவு என்பதை விட கூட்டமைப்புக்குக் குழிதோண்டுவதே ஈ.பி.ஆர்.எல்.எவ்.இன் முக்கிய வேலையாகி விட்டது. இதில் ஒருபோதுமே அவர்களால் வெற்றிபெறவே முடியாது.

**மௌனம்தொடர்வது தீமையைத்தரும்**

விக்னேஸ்வரனுக்குப் பின்னால் வேறு சிலரும் அணி திரளுவார்கள் என்பதை மறுக்க முடியாது. ஆனால் இவர்களால் மக்களின் ஆதரவை ஒருபோதுமே பெற்றுக்கொள்ள முடியாது. ஏனென்றால் மக்கள் விக்னேஸ்வரனையும் அவருடன் உறவு கொண்டிருப்பவர்களையும் நன்கு புரிந்து வைத்திருக்கிறார்கள். இதே வேளை கூட்டமைப்பின் தலைமை தொடர்ந்தும் மௌனத்தைக் கடைப்பிடிப்பதும், மெத்தனமாக இருப்பதும் கூட்டமைப்பின் எதிகாலத்துக்குத் தீமையையே ஏற்படுத்தும். வடக்கிலும் கிழக்கிலும் கூட்டமைப்புக்கு எதிரான அணிகள் களமிறங்குகின்ற இந்த வேளையில் அவற்றை முறியடிப்பதற்கான வியூகங்கள் வகுக்கப்படுவது அவசியமானதாகும். வடக்கு மற்றும் கிழக்கு மாகாண சபைகளுக்கு ஆற்றலும் மக்கள் செல்வாக்கும் மிக்கவர்கள் கூட்டமைப்பின் சார்பில் முதலமைச்சர் வேட்பாளர்களாகக் களமிறக்கப்படவேண்டும். நாடாளுமன்றுக்கும் மாகாண சபைகளுக்குமான வேட்பாளர் தெரிவின்போதும் ஊழல்வாதிகளையும் நெறிபிறழ்ந்தவர்களையும் ஓரம்கட்டிவிட்டுத் தகுதியானவர்களுக்கே இடம் வழங்க வேண்டும்.

சுருக்கமாகக் கூறினால் கூட்டமைப்புக்குப் புதுமையான தோற்றம் ஏற்படுத்துவதுடன் இளைஞர்களுக்கு அதிக வாய்ப்புக்களும் வழங்கப்படவேண்டும்.

# தமிழீழத்தவர்களிடம் இந்தியா பகிரங்க மன்னிப்புக் கோர வேண்டும்

தமிழ்த்தலைவன் மு.கருணாநிதி-48

தேவநாயகம் தேவானந்த்





ஒரு பத்திரிகையாளராக ஈழத்தில் நடந்த அவலங்களைத் தினம் தினம் பார்த்தும், கேட்டும் தவியாய்த்தவித்த முத்துக்குமார் தனது கோரிக்கைகளுடன் இந்திய மத்திய அரசின் அலுவலகம் முன்னால் தனக்குத் தானே தீ மூட்டியதன் பின்னர், தமிழகத்தில் ஈழத் தமிழர்களுக்கு ஆதரவு தெரிவித்துப் பலர் தீக்குளித்தார்கள். 2009ஆம் ஆண்டு ஜனவரி தொடக்கம் ஏப்ரல் வரையான காலப்பகுதியில் தமிழகத்தில் ஈழத்தமிழருக்கு ஆதரவாகப் பதினைந்து பேர் தீக்குளித்து மாண்டு போனார்கள். முத்துக்குமாரின் உருக்கமான கோரிக்கைகளும், ஆழமான சிந்தனைகளும் தமிழகத்தில் மிகுந்த தாக்கம் செலுத்தின.

**புலிகளைத் தண்டிக்கும் அருகதை எவருக்கும் கிடையாது**

'அபாரிஜின்கள், மாயா, இன்கா இனங்கள் அழிக்கப்பட்டது போன்று, அந்த வரிசையில் நாங்களும் சேர்க்கப்படுவது உங்கள் நோக்கமென்றால்,' எங்கள் பழங்கதைகள் ஒன்றின்படி ஒவ்வொரு நாளும் ஏதேனும் ஒரு வீட்டிலிருந்து ஒருவர் வந்து உங்கள் முன்னால் உயிரை மாய்த்துக் கொள்கிறோம். எங்கள் சகோதரிகளையும், குழந்தைகளையும் விட்டுவிட்டுச் செல்லுங்கள். தாங்க முடியவில்லை. அவர்களெல்லாம் மனமாரச் சிரிப்பதை ஒருநாள் பார்ப்போம் என்ற நம்பிக்கையில்தான் நாங்கள் போராடிக் கொண்டிருப்பதே. ஒரு பேச்சுக்கு ஒத்துக்கொள்வதென்றாலும்கூட, விடுதலைப் புலிகள் தண்டிக்கப்பட வேண்டியவர்கள் என்றாலும் அப்படி ஒரு தண்டனையை வழங்கும் யோக்கியதை இந்தியாவுக்கோ, இலங்கைக்கோ கிடையாது.' என்று தனது இறுதிக் குறிப்பில் முத்துக்குமார் குறிப்பிட்டிருந்தமை இங்கு கூர்ந்து நோக்கத்தக்கது.

**முத்துக்குமார் முன்வைத்த கோரிக்கைகள்**

முத்துக்குமார் தனது சாவுக்கு முன்னர் பதினான்கு கோரிக்கைகளை முன்வைத்திருந்திருந்தார். இந்தக் கோரிக்கைகள் நிறைவேற்றப்பட வேண்டுமென்று மாணவர்கள்; போராட்டங்களைத்; தீவிரப்படுத்தினார்கள். கலைஞரின் அரசு போராட்டங்களை அணைப்பதற்காகப் பல திட்டங்களைத் தீட்டியிருந்தது. முத்துக்குமாரின் கோரிக்கைகளில் முக்கியமானவற்றை இங்கு பார்க்கலாம்,

• இந்தியா உடனடியாகத் தமிழீழத்தின் பகுதிகளிலிருந்து தன்னுடைய துருப்புகளைத் திரும்பப் பெற்றுக்கொள்வதோடு, மேற்கொண்டு செயற்கைக்கோள் உதவிகள், ராடார் போன்ற உதவிகளைச் செய்யக்கூடாதென்று பன்னாட்டுச் சமூகத்தால் கண்டிக்கப்பட வேண்டும். இலங்கையோடு இந்தியா அரசு நடத்தும் முக்கியத்துவமற்ற பேச்சுப்பரிமாற்றங்கள்கூட பன்னாட்டுச் சமூகம் மூலமாகவே நடக்க வேண்டும். தமிழக மக்களிடமும், உலகெங்கும் பரந்து வாழும் தமிழீழத்தவர்களிடமும் இந்தியா பகிரங்க மன்னிப்பு கோர வேண்டும்.

• இலங்கை அரசு எந்தெந்த நாடுகளிடமெல்லாம் கோரப்பட்டுப் புலிகள் மீது தடை விதிக்கப்பட்டதோ அந்தந்த நாடுகளில் புலிகள் மீதான தடை நீக்கப்பட்டு, தடை செய்யப்பட்ட அமைப்பின் உறுப்பினர் என்ற குற்றத்துக்காகச் சிறையிலிருக்கும் அதன் உறுப்பினர்கள் எதுவித நிபந்தனையுமற்று உடனடியாக விடுதலை செய்யப்பட வேண்டும்.

• அமைக்கப்படப்போகிற தமிழீழத்தை அங்கீகரிக்கின்ற உரிமையை மட்டும் பன்னாடுகள் மேற்கொள்ளலாமே தவிர, அது எவருடைய தலைமையில் அமையவேண்டும் என்பதைத் தமிழின மக்கள் தான் முடிவுசெய்வார்கள்.

• புலிகளின் கை பலவீனமான நேரத்தில், மலையக மக்கள் மீது நடந்து வந்த தாக்குதல், எதிர்காலத்தில் அந்தப் பகுதிகளில் மீண்டும் ஒரு பெரிய இன அழிவு ஏற்படுத்தப்படுமோ என்ற அச்சத்தை ஏற்படுத்தியிருப்பதால், மலையக மக்கள் தமிழீழத்தோடு இணைய விரும்புகிறார்களா என்பதை வாக்கெடுப்பு மூலம் அறிந்து அதன்படி செயல்படுதல் வேண்டும். இந்த விடயத்தில் மலையக மக்களின் முடிவே இறுதியானது.

> முத்துக்குமார் தனது சாவுக்கு முன்னர் பதினான்கு கோரிக்கைகளை முன்வைத்திருந்திருந்தார். இந்தக் கோரிக்கைகள் நிறைவேற்றப்பட வேண்டுமென்று மாணவர்கள்; போராட்டங்களைத்; தீவிரப்படுத்தினார்கள். கலைஞரின் அரசு போராட்டங்களை அணைப்பதற்காகப் பல திட்டங்களைத் தீட்டியிருந்தது.

மாணவர் எழுச்சியும் போராட்டமும் தீவிரம் அடைவதைக் கண்ட கலைஞர் தலைமையிலான தமிழக அரசு, உடனடியாகத் தமிழகமெங்கும் கல்லூரிகளையும் பல்கலைக்கழகங்களையும் மூடியது. மாணவர்களை விடுதிகளிலிருந்து வெளியேறுமாறு அறிவித்தது. கிட்டத்தட்டப் பத்து நாள்கள் கல்விக்கூடங்கள் மூடப்பட்டன. இதனால் மாணவர் போராட்டங்கள் வலுவிழந்தன. இருப்பினும் முத்துக்குமார் மூட்டிய தீ தமிழகமெங்கும் கொழுந்துவிட்டு எரிந்தது. இது தி.மு.க மற்றும் அ.தி.மு.க கட்சிகளை ஈழப்போராட்டத்துக்கு ஆதரவான நிலைப்பாட்டுக்கு வலுக்கட்டாயமாக இழுத்து வந்தது எனலாம்.

(தொடரும்)


## ஆசிரியருக்கான கடிதம்

# இது அரசின் குட்டை என்பது நுளம்புக்குத் தெரியுமா?

மழை ஆரம்பித்து விட்டது. மழை ஆரம்பித்து விட்ட கையுடன் வீடுகள் தோறும் 'விசிற்' பண்ணுவதற்கும், பொலிசார் சகிதம் வந்து 'எச்சரிக்கை' செய்வதற்கும் சுகாதாரத் தரப்பினர் ஆயத்தமாகிக் கொண்டிருப்பார்கள். இது வேண்டப்படுவதும், கட்டாயமானதுமான நடவடிக்கைதான். ஆனால், பொதுமக்களின் வீடுகளுக்குள் மாத்திரம் நுளம்பு பெருகுகின்றது, பொதுக்காணிகள்(அரச), பொதுமக்களால் கைவிடப்பட்ட காணிகள் ஆகியவற்றுக்குள் நுளம்பு பெருகாது என்பதாகவும், அப்படிப் பெருகினாலும் அவை மனிதர்களுக்குக் குத்தமாட்டாது, நோய்க் காவிகளாக இருக்காது, அவற்றால் மனிதர்களுக்குப் பாதிப்பில்லை என்பதாகவும் இந்த நடவடிக்கைகளுக்கு அத்திபாரமிட்ட அரச தரப்பினர் 'மத்தியில் இன்றுவரை இருந்து வரும் 'ஞானம்' தான் விமர்சனத்துக்குரியது. நுளம்பு பெருகுவதைத் தடுக்கும் நோக்கில் நகர்ப்புறங்களில் பல முன்னெடுப்புக்களைச் சுகாதாரத்துறையினர் செய்து வருகின்றனர். வீடுகள் தோறும் சென்று நுளம்பு பெருகுவதற்கான வாய்ப்புக்கள் இருந்தால் நீதிமன்றில் வழக்குத்தொடுத்து அதன் மூலம் குற்றப் பணமும் அறவிடுகிறார்கள். இந்த நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுப் பல வருடங்கள் ஆகின்றன. ஒவ்வொரு மழை காலத்திலும் அவர்கள் இதைத் தவறாது செய்கிறார்கள். ஆனால், பொதுமக்களின் காணிகள் தவிர்ந்த அரச காணிகள், பாவனை குறைந்த வீதிகள், மற்றும் வீதி ஓரங்களில் நுளம்பு பெருகுவதற்குச் சாதகமாக, உறங்கு நிலையில் கிடக்கின்ற குட்டைகள், ஊர்மனைகளில் பயன்பாடற்ற ஒதுக்குப்புறங்கள், கரையோரங்கள், குடியிருப்புகளுக்கு மத்தியில் கிடக்கின்ற சதுப்பு நிலங்கள், நீர் நிலைகள் பற்றியோ, இவ்வகை நீர் நிலைகளும் நுளம்புப் பெருக்கத்துக்கு வாய்ப்பாக அமையும் என்பது பற்றியோ அவர்கள் அலட்டிக் கொள்வதாகத் தெரியவில்லை. வருடம் தோறும் வீடு தவறாமல் வந்து பரிசோதனை செய்கின்ற கையோடு தங்களுக்குப் பொறுப்பான பகுதிகளில் நுளம்பு பெருகுவதற்கு வாய்ப்பாக இருக்கின்ற இந்த வகையான இடங்களை இனங்கண்டு, அதில் வருடத்துக்கு ஒன்றையேனும் தெரிவு செய்து, அவற்றில் நுளம்பு பெருகாமல் இருப்பதற்குரிய செயலைச் (நீர்தேங்காமல் இருக்குமாறு குட்டைகளை நிரவி விடுகின்ற) செய்து வருவார்களே ஆனால், இந்தத் திட்டம் ஆரம்பிக்கப்பட்ட காலத்தில் இருந்து இன்று வரைக்கும் பல பொதுக் காணிகள் தூய்மையடைந்திருக்கும். குன்றும் குழியுமாகக் கிடக்கின்ற வீதிகள், ஒழுங்கைகள், தரைவைகள், பள்ள நிலங்கள், பொதுக்காணிகள், பொதுமக்களின் பாவனையற்ற காணிகள் அனைத்தும் அதற்குப் பொறுப்பாக இருக்கின்ற உரியஅரச திணைக்களங்களுக்கு அழுத்தம் கொடுப்பனவாக அமைந்து சீரமைக்கப்பட்டிருக்கும். அதைவிடுத்து பொதுமக்களின் காணிகளுக்குள் மாத்திரம்தான் நுளம்பு பெருகும் என்பதாகவும் பொதுக்காணிகள், அரச காணிகளில் பெருகாது என்பதாகவும் தொடர்ந்தும் இவர்கள் செயற்பட்டு வருவது வேதனைக்குரியது. நுளம்புப் பெருக்கத்தைக் கட்டுப்படுத்துவதற்கு மக்களை வழிப்படுத்தும் சம நேரத்தில் நுளம்பு பெருகுவதற்குரிய இவ்வகை இடங்களையும் இனம் கண்டு சீர மைப்பதுவே நுளம்புப் பெருக்கத்தை முற்றாகத் தடுப்பதற்குரிய வழியாக அமையும். விடுத்து இது அரசின் குட்டை, இதற்குள் முட்டையிட்டுக் குஞ்சு பொரிக்கக் கூடாது என்பது நுளம்புக்குத் தெரியும் என்கின்ற வகையில் செயற்படுவது சிரிப்புக்குரியது.

*கணேசமூர்த்தி, வவுனியா*

# அமெரிக்காவுக்குப் பணம் அனுப்பியது சவூதி பத்திரிகைகள் கடும் விமர்சனம் செய்கின்றன



நியூயோர்க்.ஒக்.19
பத்திரிகையாளர் ஜமால் காணாமல்போன விவகாரத்தில் பெரும் எதிர்ப்பு எழுந்து வரும் நிலையில், அமெரிக்காவுக்கு, சவூதி அரேபியா 700 கோடி ரூபா(இந்திய மதிப்பில்) பணத்தை அனுப்பியிருப்பது புதிய சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.

ஜமால் விவாகாரம் தொடர்பாக சவூதியிடம் அமெரிக்க அதிபர் ட்ரம்ப் தொலைபேசியில் பேசியிருந்தார். மேலும், சவுதி மன்னரைச் சந்திப்பதற்கு அமெரிக்க அயலுறவு அமைச்சர் மைக் பாம்பியோ சென்று வந்தார். இந்த விடயத்தில் சவூதி அரேபியாவுக்கும், அமெரிக்காவுக்கும் இடையே மோதல் உருவாகும் சூழல் உருவாகியிருந்தது. அதேசமயத்தில் அமெரிக்காவின் கோபத்தைத் தணிக்கும் பொருட்டு சுமார் 700 கோடி ரூபாயை சவூதி அரேபியா உதவி நிதியாக அளித்துள்ளது. சிரியாவில் அமெரிக்கா மேற்கொண்டு வரும் நடவடிக்கைகளுக்காக இந்த நிதி வழங்கப்படுவதாக சவூதி அரேபியா தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆனால் பாம்பியோ ரியாத் வந்த நாளில் தான், சவூதி அரேபியாவால், அமெரிக்காவுக்கு இந்த பணம் செலுத்தப்பட்டுள்ளது. இதை நியூயோர்க் ரைம்ஸ் உள்ளிட்ட அமெரிக்கப் பத்திரிக்கைகள் கடுமையாக விமர்சித்துள்ளன. பத்திரிகையாளர் ஜமால் படுகொலையில் ட்ரம்ப் உறுதியாக இல்லாமல், சவூதியிடம் பணம் பெறும் நேரம் இது தானா? என அந்த பத்திரிக்கைகள் கேள்வி எழுப்பியுள்ளன.



# ஆப்கானில் வேட்பாளர் மீது குண்டுத் தாக்குதல்

## சாவு எண்ணிக்கை 4ஆக உயர்வு!

காபூல்.ஒக்.19
ஆப்கானிஸ்தானில் தலீபான் ஆயுததாரிகள் நிகழ்த்திய குண்டுவெடிப்பில் தேர்தலில் களமிறங்கவிருந்த அப்துல் ஜப்பார் காஹ்ரமன் என்கிற வேட்பாளர் உட்பட 4 பேர், உடல் சிதறிச் சாவடைந்திருக்கின்றனர்.

ஆப்கானிஸ்தானின் ஹெல்மாண்டு மாகாணத்தில் நாளை இடம்பெற உள்ள நாடாளுமன்றத் தேர்தலில் வேட்பாளராகக் களம் இறங்கியவர் அப்துல் ஜப்பார் காஹ்ரமன். இவர் நேற்று முன்தினம் காலை 10 மணியளவில் தனது தேர்தல் அலுவலகத்தில் தேர்தல் ஏற்பாடுகள் குறித்துத் தனது ஆதரவாளர்களுடன் ஆலோசனை நடத்திக்கொண்டிருந்தார். அப்போது அங்கு திடீரென பலத்த சத்தத்துடன் குண்டு வெடித்தது. இந்தக் குண்டுவெடிப்பில் அப்துல் ஜப்பார் காஹ்ரமன் உள்பட 4 பேர், உடல் சிதறிச் சாவடைந்தனர். அவரது அலுவலகத்தில் இருக்கைக்கு அடியில் மறைத்து வைக்கப்பட்டிருந்த குண்டுதான் வெடித்ததாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்தக் குண்டு வெடிப்புக்குத் தலீபான் அமைப்பினர் பொறுப்பேற்றுள்ளனர். ஆப்கானிஸ்தான் அதிபர் அஷரப் கனி இந்தக் குண்டுவெடிப்புக்குக் கடும் கண்டனம் தெரிவித்துள்ளார்.

ஆப்கானில் தலீபான்கள் அமைப்பை முடிவுக்குக் கொண்டு வர முடியாமல் உள்நாட்டுப் படையினரும், அமெரிக்க கூட்டுப்படையினரும் திணறி வருவது குறிப்பிடத்தக்கது.

# விரல்களைத்

# ஜமால் மீது

## சவூதி அரேபியா மீது துரு

அங்காரா.ஒக்.19
**கா**ணாமல்போன பத்திரிகை
வைச் சேர்ந்தவர்கள் 7 நி
செய்து, விரலை துண்டித்து, கொலை




சவூதியைச் சேர்ந்த பத்திரிகையாளர் ஜமால் காணாமல்போன விவகாரத்தில் நாளுக்கு நாள் பல அதிர்ச்சியான செய்திகள் வெளிவந்தவண்ணம் உள்ளன.

"எங்களுக்குக் கிடைத்துள்ள ஒலிப்பதிவு ஆதாரங்கள்படி, சவூதி அரேபியாவின் தூதரகத்தின் உள்ளே ஜமால் விரல்கள் துண்டிக்கப்பட்டு சித்ரவதை செய்யப்பட்டுள்ளார்.

7 நிமிடங்கள் வரை இந்தச் சித்திரவதை நீண்டுள்ளது. பின்னர், அவரது தலை துண்டிக்கப்பட்டுள்ளது. இந்தக் கொடூரங்கள் சவுதி அரேபியாவின் தூதர் முன்னிலையில் நடந்துள்ளது. தூதரகத்தினுள் கொலை நடந்தால் தானும் சிக்கிக் கொள்வேன் என அஞ்சிய அவர் அதை வெளியே சென்று செய்யுமாறு கூறுகிறார்.

மற்றொரு நபர் அவரை மிரட்டுகிறார். நாங்கள் கைப்பற்றியுள்ள கானொலியில் இந்தக் காட்சிகள் அனைத்தும் உள்ளன" என்பதாகத் துருக்கி அரசு சார்பாக வெளிவந்திருக்கின்ற தகவலை மேற்கோள் காட்டித் துருக்கியின் அரச பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

'இங்கு வைத்து ஜமாலை எதுவும் செய்யாதீர்கள். அது எனக்குப் பிரச்சினையாகிவிடும்' எனச் சவூதித் தூதுவர் மெகமட் அல் ஒட்டாபி கூறியுள்ளார். சவூதித் தூதரின் காரியாலயத்திலிருந்து ஜமால் இழுத்துவரப்பட்டு பக்கத்து அறையிலுள்ள மேசை மேல் அவருடைய கையை வைத்து, அவருக்கு ஊசியைச் செலுத்தி ஜமால் துன்புறுத்தப்படும் ஜமாலின் அலறல் சத்தம் தூதரகம் முழுதும் கேட்டதாகக் கூறப்படுகின்றது. சவூதியின் முடிக்குரிய இளவரசருக்கு மிக நெருங்கிய நான்கு பேர்தான் இந்தப் படுகொலையைச் சவூதித் தூதரகத்துக்குள் வைத்து நிகழ்த்தியுள்ளனர். அவர்கள் சாதாரணமாக ஜமாலைக் கொலை செய்யவில்லை. அவரை அங்கம் அங்கமாக வெட்டி, துடி துடிக்க விட்டுக் கொடுமை

# 'மைக்கல்' புயலில் சிக்கிச் சாவடைந்



நியூயோர்க்.ஒக்.19
அமெரிக்காவின் புளோரிடா, விர்ஜினியா, வடக்குக் கரோலினா, ஜோர்ஜியா ஆகிய மாநிலங்களைத் தாக்கியிருந்த மைக்கல் புயல் காரணமாகச் சாவடைந்தவர்களின் தொகை 30ஆக உயர்ந்துள்ளது. அமெரிக்காவின் பல பகுதிகளில் அண்மை நாள்களாகப் புதுப்புதுப் புயல்கள் தாக்குவதும் பலத்த மழை பெய்து வருவதும் தொடர்கிறது. அந்த வகையில், கடந்த வாரம் உருவான 'மைக்கல்' புயல் மணிக்கு சுமார் 250 கிலோமீற்றர் வேகத்தில் புளோரிடா மாகாணத்தைக் கடந்தபோது கடுமையான சேதத்தை ஏற்படுத்தியது. அங்கிருந்து மெல்ல நகர்ந்து விர்ஜினியா மாநிலத்துக்குள் நுழைந்த 'மைக்கல்' அங்கும் பெரும் சேதம் உண்டாக்கியது.

பின்னர், வடக்குக் கரோலினா, ஜோர்ஜியா ஆகிய மாநிலங்களைத் தாக்கியது. இந்தப் புயலில் சிக்கிச் சாவடைந்தவர்களின் எண்ணிக்கை 30 ஆக உயர்ந்துள்ளது. இதில் அதிகப்படியாக புளோரிடாவில் 20 பேர் உயிரிழந்தனர். விர்ஜினியாவில் 6 பேரும், வடக்குக் கரோலினாவில் 3 பேரும், ஜோர்ஜியா மாநிலத்தில் ஒருவரும் உயிரிழந்ததாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# ...த் துண்டித்து
# ...து கடும் வதை

## ... துருக்கி பாய்ச்சல்

...த்திரிகையாளர் ஜமால் கஷோகிஜியை சவூதி அரேபியா
...கள் 7 நிமிடங்கள் வரைக்கும் கொடூரமாகச் சித்ரவதை
...து, கொலை செய்ததாகத் துருக்கி தெரிவித்துள்ளது.






...ரிய இள
...நான்கு
...லையைச்
...வைத்து
...தாரண
...செய்ய
...ங்கமாக
...காடுமை

யாகக் கொலை செய்துள்ளனர். முதலில் அவரது கைகளை ஒரு மேசை மேல் வைத்து அவரது விரல்களை ஒவ்வொன்றாக வெட்டியுள்ளனர். ஜமால் தன்னுடைய இறுதி நிமிடங்களை அவரது கைக் கடிகாரத்திலே பதிவு செய்துள்ளார். அந்தப் பதிவு எப்படியோ வெளியாகி உள்ளது. துருக்கிப் பொலிசார் சவூதித் தூதுவரின் பிரத்தியோக வாசஸ்தலத்தை ஆராய்ந்துள்ளனர் என்று பன்னாட்டு ஊடகங்கள் பலவும் இதுபற்றிச் செய்தி வெளியிட்டுள்ளன. அத்தோடு இந்தத் தகவல்கள் உத்தியோக பூர்வமற்றவை என்றும் அவை சுட்டிக்காட்டுகின்றன. இந்தக் கொலையில் ஈடுபட்டவர்கள் சவூதி இளவரசரின் மெய்ப்பாதுகாவலர்கள் என்றும் ஊடகங்கள் சுட்டிக்காட்டுகின்றன.

- காதுகளில் ஹெட்போனை மாட்டிக் கொள்ளுங்கள். பாட்டை இரசித்துக் கொண்டே, கொலையைத் தொடருங்கள்' என அதில் ஒருவர் கூறியுள்ளார் என்றும்ஜமாலைத்துண்டுதுண்டுகளாக வெட்டி அவற்றை அமிலத்தில் போட்டுக் கரைத்திருக்கிறார்கள் என்றும் இது சார்ந்த செய்திகள் தெரிவிக்கின்றன.

**பின்னணி**

கொலை செய்யப்பட்டதாகக் கருதப்படும் ஜமால் அமெரிக்காவிலுள்ள வோஷிங்டன் போஸ்டில் சவூதி அரசை விமர்சித்தும் குறிப்பாக அதன் இளவரசர் முகமது பின் சல்மானை விமர்சித்தும் கட்டுரைகளை எழுதி வந்தார். துருக்கியைச் சேர்ந்த பெண்ணை ஜமால் திருமணம் செய்ய விருந்த நிலையில், கடந்த வாரம் துருக்கியின் இஸ்தான்புல் நகரிலுள்ள சவூதித் தூதரக அலுவலகத்துக்குள் சென்ற பின்னர் காணாமல் போனார். இந்த வழக்கு தொடர்பாக, சவுதியைச் சேர்ந்த 15 பேரின் பெயரை ஜமாலை கொலை செய்த சவுதியர்கள் என்று துருக்கி உறுதியாகக் கூறியதுடன், இதற்கான காணொலி மற்றும் ஒலிப்பதிவு ஆதாரத்தைத் துருக்கி வெளியிட்டிருந்தது.

# கல்லூரியில் குண்டு வெடிப்பு
# கிரிமியாவில் 19 பேர் சாவு!



செவஸ்ரொபூல்.ஒக்.19

உக்ரைனில் இருந்து பிரிந்து ரஷ்யாவுடன் இணைந்த கிரிமியாவில் நிகழ்ந்த குண்டு வெடிப்பில் 19 பேர் சாவடைந்ததாகப் பன்னாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. கிரிமியாவில் கருங்கடலையொட்டியுள்ள கிழக்குப் பகுதியான கெர்ச் நகரில் உள்ள தொழில்நுட்பக் கல்லூரியில் இந்தத் தாக்குதல் நடந்திருக்கிறது. கிட்டத்தட்ட 40 பேர் வரையில் காயமடைந்திருக்கிறார்கள். குண்டுவீச்சுத் தாக்குதலில் இந்த உயிரிழப்புகள் ஏற்பட்டதாகவும், அதே கல்லூரியில் படிக்கும் ஒரு மாணவன் நடத்திய துப்பாக்கிச் சூடுதான் இதற்கு காரணம் எனவும் ரஷ்ய ஊடகங்கள் செய்தி வெளியிட்டு வருகின்றன.

1991ஆம் ஆண்டில் சோவியத் யூனியன் உடைந்து, சுமார் 13 ஆண்டுகளுக்குப் பிறகு 2014ஆம் ஆண்டில் உக்ரைன் நாட்டின் கிரிமியா பகுதியை ரஷியா தன்னுடன் இணைத்துக் கொண்டது.

உக்ரைன் விவகாரத்தில் கிரிமியா பகுதி மக்கள் அவர்களின் விருப்பத்தின்பேரிலேயே தங்கள் நாட்டுடன் இணைந்ததாக ரஷியா தரப்பில் தெரிவிக்கப்பட்டாலும், இந்த விவகாரத்தில் பன்னாடுகளின் எதிர்ப்பு அதிகமாகவே இருந்து வருகிறது. எனினும், ரஷ்யாவின் முக்கிய நகரங்களில் ஒன்றாகக் கிரிமியாவை ரஷ்ய மக்கள் கருதி வருகின்றனர்.




# 'சுப்பர்சொனிக்' ஏவுகணையைச் சோதித்தது சீனா!

பீஜிங்.ஒக்.19

'சுப்பர்சொனிக் எச்டி1' என்று பெயரிடப்பட்ட நவீன ரக ஏவுகணையை வெற்றிகரமாகச் சோதித்துள்ளது சீனா. சீனாவின் குவாங்டாங் மாகாணம் குவாங் சூவில் உள்ள ஹோங்க்டா என்ற சுரங்க நிறுவனம், இந்தச் சோதனையை நடத்தியது. அந்த நிறுவனமே தனது சொந்தச் செலவில் இந்த ஏவுகணையை உருவாக்கி உள்ளது. இது, இந்திய-ரஷ்ய கூட்டுத் தயாரிப்பில் உருவான 'பிரமோஸ்' ஏவுகணைக்கு இணையானதாகவும், அதையும் விஞ்சிய செயல்திறனுள்ளதாகவும் கருதப்படுகிறது. ஆனால், பிரமோஸ் ஏவுகணையை விட இதன் விலை மலிவானது என்றும், பாகிஸ்தான் மற்றும் மத்திய கிழக்கு நாடுகளுக்கு இந்த ஏவுகணை விற்கப்பட வாய்ப்பு உள்ளதாகவும் சீன இராணுவச் செய்திகள் தெரிவிக்கின்றன.

# ...வடைந்தோர் தொகை 30ஆக உயர்வு!




# மெலனியா சென்ற வானூர்தியில் திடீர்ப் புகை
# விமானம் அவசரமாகத் தரையிறக்கம்


வோசிங்டன்.ஒக்.19

அமெரிக்க அதிபர் ட்ரம்பின் மனைவி மெலனியா ட்ரம்ப் சென்ற வானூர்தியில் திடீரெனப் புகை ஏற்பட்டதால் அவசரமாக அந்த வானூர்தி தரையிறக்கப்பட்டது. அமெரிக்க அதிபராகப் பதவி வகித்து வருபவர் ட்ரம்ப். இவரது மனைவி மெலனியா ட்ரம்ப், அதிபர் மாளிகையில் வசிப்பவர்களுக்காக 'ஆன்ட்ரு எயார்பேஸ்' வானூர்தி பயன்படுத்தப்பட்டு வருகிறது. இந்த நிலையில், மெலனியா ட்ரம்ப் நேற்று முன்தினம் பிலடெல்பியா மாகாணத்துக்குச் செல்வதற்காக 'ஆன்ட்ரு எயார்பேஸ்' வானூர்தியில் ஏறினார். சிறிது நேரத்தில் விமானத்தின் ஓர் அறையில் இருந்து திடீரெனப் புகை வெளியானது. இதனால் அங்கு பரபரப்பு ஏற்பட்டது. இதையடுத்து, அந்த விமானம் மீண்டும் ஆன்ட்ரு ஏர்பேஸ் விமானத் தளத்தை வந்தடைந்தது. விமானத்தில் இருந்து மெலனியா பத்திரமாகத் தரையிறக்கப்பட்டார். இது தொடர்பாக, அமெரிக்க அதிபர் மாளிகை செய்தித் தொடர்பாளர் ஊடகங்களுக்குக் கூறுகையில், விமானத்தில் பயணித்தவர்கள் யாருக்கும் எந்த சேதமும் இல்லை. இயந்திரக் கோளாறால் புகை ஏற்பட்டது என்று தெரிவித்தார்.








# 'சீதக்காதி' படத்தின் இரண்டாவது சுவரொட்டி வெளியாகியது

தமிழ் சினிமாவில் முன்னணிக் கதாநாயகர்கள் பட்டியலில் இருப்பவர் நடிகர் விஜய் சேதுபதி.

இவர் பாலாஜி தரணிதரன் இயக்கத்தில் தனது 25ஆவது படமான 'சீதக்காதி' என்றபடத்தில்நடித்துவருகிறார். இதில்80வயதுமுதியவர் தோற்றத்தில் நடிக்கிறார். நகைச்சுவைக்காட்சிகளுக்கு அதிகம் முக்கியத்துவம் கொடுக்கும் இந்தப் படத்தில் நம்யா நம்பீசன் உள்ளிட்டமுக்கியகதாநாயகிகள்5பேர்நடிக்கஒப்பந்தமாகியுள்ளனர். ஆனால், அவர்கள் யாரும் விஜய் சேதுபதிக்கு ஜோடியாக நடிக்க வில்லை எனக் கூறப்படுகின்றது.

இந்த நிலையில், இந்தப் படத்தின் இரண்டாவது சுவரொட்டி வெளி யாகியுள்ளது. இதில் கையில் வில்லுடன் அரசர் காலத் தோற்றத்தில் விஜய் சேதுபதி இருக்கிறார்.



# இன்றைய நாள்

**மேடம்:** மனதில் இருந்த குழப்பம் நீங்கும். தொழில், வியாபாரம் வளர்ச் சிக்காக கூடுதல் பணி மேற்கொள்வீர் கள். பெண்கள் வீட்டுக்கு தேவை யான பொருட்கள் வாங்குவர். உறவி னர் வருகையால் மகிழ்ச்சி கூடும்.

**இடபம்:** மாறுபட்ட கருத்து கொண்டவரை சந்திக்க நேரிடலாம். பொறுமை காப்பது நல்லது. தொழில், வியாபாரத்தில் லாபம் சுமாராக இருக்கும். பணியாளர்கள் பணிச்சுமைக்கு ஆளாவர்.

**மிதுனம்:** பெற்றோரின் அறிவுரையை ஏற்பது நல்லது. பணியில் பொறுப்பு அதிகரிக்கும். தொழில், வியாபாரத்தில் இருக்கிற அனுகூலம் பாதுகாப்பது நல்லது.

**கடகம்:** பெருந்தன்மை மிக்கவராக விளங்குவீர்கள். நற்செயலில் ஈடுபட்டு சமூகத்தில் வரவேற்பு பெறுவீர்கள். தொழில் வியாபாரத்தில் சீரான வளர்ச்சி உண்டாகும். பெண்கள் வீட்டு உப யோகப் பொருள் வாங்குவர்.

**சிங்கம்:** செயலில் திறமை வெளிப் படும். அலைச்சல் தந்த வேலை ஆதாயம் தருவதாக மாறும். தொழில் வியாபாரத்தில் திட்டமிட்ட வளர்ச்சி இலக்கு நிறைவேறும்.

**கன்னி:** மாறுபட்ட சூழ்நிலையை சந்திக்க நேரிடலாம். நிதானத்தை கடைபிடிப்பது நல்லது. தொழில், வியாபாரத்தில் சுமாரான லாபம் கிடைக்கும். இஷ்ட தெய்வ வழிபாடு மன அமைதிக்கு வழி வகுக்கும்.

**துலாம்:** செயல் நிறைவேற தாமதம் ஆகலாம். சிறிய பணி கூட சுமையாக இருக்கலாம். தொழில், வியாபாரம் சிறக்க விடாமுயற்சி அவசியம். லாபம் சுமாராக இருக்கும். பெண்கள் நகை இரவல் கொடுக்க வாங்க வேண்டாம்.

**விருச்சிகம்:** செயல்களில் அதிக நேர்த்தி நிறைந்திருக்கும். அரசு தொடர் பான உதவி கிடைக்கும். தொழில், வியாபாரத்தில் திட்டமிட்ட வளர்ச்சி இலக்கு நிறைவேறும்.

**தனுசு:** சிலர் சுயநலத்துடன் அணுக லாம். விழிப்புடன் விலகுவது நல் லது. தொழில் வியாபாரத்தில் உழைப்பிற்கேற்ப ஆதாயம் கிடைக் கும்.

**மகரம்:** இஷ்ட தெய்வ அருளால் நன்மை உருவாகும். அன்றாட வாழ் வில் புத்துணர்வுடன் ஈடுபடுவீர்கள். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சி வியப்பூட்டும் விதத்தில் இருக்கும்.

**கும்பம்:** நண்பர்களிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். தொழில் வியாபா ரத் தில் நிலுவைப் பணியை நிறைவேற்று வீர்கள். இலாபம் உயரும்.

**மீனம்:** சமூகத்தில் உங்கள் மீதான நன்மதிப்பு அதிகரிக்கும். நீண்டநாள் . இலட்சியம் நிறைவேறும். தொழில் வியாபாரத்தில் வளர்ச்சி நிலை திருப்தி கரமாக இருக்கும்.

# twitter



**சப்பாணி@manipmp**
அகப்படாத வாயப்புகள் இன்னும் நீளமாக்குகிறது வாழ்க்கைப் பயணத்தை.!



**பர்வீன் யூனுஸ்@parveenyunus**
டச்போன் வந்த போதே துவங்கி விட்டது..'ஒரு விரல் புரட்சி'




**பர்வீன் யூனுஸ்@parveenyunus**
முற்பகல் செயின் பிற்பகல் 'MeToo' விளையும்.

வைரமுத்துவின் வாழ்வு தன்னை 'Me too' கவ்வும்.



**செல்லக்குழந்தை**
சந்திக்கும் போது பேசும் உறவுகளை விட, நாம் சண்டையிட்டாலும் பேசும் உறவுகள் கிடைப்பதே வரம்...

## பட்டம் இன்று காகித திருவேடு!




இப்போதெல்லாம் கல்விச்சாலைகள்..
மூளையில் உள்ள தகவல்களை அதற்குத் தெரியாமல்
வெள்ளைத்தாள்களுக்குத் திருடிக்கொடுக்கும்
பணியைத்தானே செய்துகொண்டிருக்கின்றன!

கல்வி, சந்தையாகிப்போனதால்
அங்கு சென்றவர்களெல்லாம் வியாபாரிகளாகிவிடுகிறார்கள்!

அன்று ஒரு பட்டம் பெற்றாலே வேலை கிடைத்தது
இன்று பல பட்டம் பெற்றவர்கள் பட்டியலில் காத்திருக்கின்றனர்.

அதனால் பட்டதாரிகளுக்கும் கூலித்தொழிளாளர்களுக்கும்
அதிகம் வேறுபாடு தெரிவதில்லை.

சில நேரங்களில் குழப்பமாகத்தான் இருக்கிறது..
கையில் உள்ளது, பட்டச் சான்றிதழா? காகிதத் திருவோடா? என்று..

## சுடோக்கு
எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 4 | | 2 | | | 1 | 9 | | |
| | 5 | 1 | | 9 | | | 7 | 4 |
| | | | | 6 | | | | 8 |
| | 7 | 6 | | | 3 | | 1 | |
| 1 | | | 5 | 4 | | | 3 | |
| 2 | | | 1 | | | | | 5 |
| | | | | 8 | 2 | 7 | | |
| 3 | | 4 | | 5 | | 6 | | |
| | | 7 | 3 | | | | | |

நேற்றைய விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 6 | 2 | 7 | 8 | 3 | 9 | 1 | 4 | 5 |
| 3 | 5 | 9 | 2 | 4 | 1 | 7 | 8 | 6 |
| 8 | 4 | 1 | 6 | 5 | 7 | 2 | 3 | 9 |
| 9 | 6 | 5 | 7 | 1 | 8 | 4 | 2 | 3 |
| 7 | 3 | 8 | 5 | 2 | 4 | 6 | 9 | 1 |
| 2 | 1 | 4 | 3 | 9 | 6 | 8 | 5 | 7 |
| 1 | 9 | 2 | 4 | 6 | 5 | 3 | 7 | 8 |
| 5 | 8 | 3 | 1 | 7 | 2 | 9 | 6 | 4 |
| 4 | 7 | 6 | 9 | 8 | 3 | 5 | 1 | 2 |

## நல்ல பேச்சு என்பது...

**சிறந்த வார்த்தைகளைத் தேர்ந்தெடுத்துப் பேசுவது மட்டுமல்ல! எந்த வார்த்தை பேசக்கூடாது என்று உணர்ந்து பேசுவதே!**



# உயர்ந்தது

பச்சைப்பசேல் எனச் செழித்து வளர்ந்த வயல்களுக்கிடையே ஒரு வரப்பு மேட்டில் நெடிதுயர்ந்து தலை நிமிர்ந்து நின்றது பனை மரம் ஒன்று. சற்றுத் தூரத்துக்கு அப்பால் ஒரு தென்னந்தோப்பும் இருந்தது. அங்கிருந்த கோணலான தென்னைமரம் ஒன்று அந்தப் பனை மரத்தைப் பார்த்து "ஏ... பனையே என்ன இப்படி கொஞ்சமும் பணிவில்லாமல் விறைப்பாக நிற்கிறாயே. இருந்தாலும் உனக்குத் தலைக்கனம் அதிகந்தான்" என்றது.

"எனக்குத் தலைக்கனம் எதுவும் கிடையாது. இயற்கையே அப்படித்தான்" என்றது அடக்கத்துடன் பனை. "சரி நீ இப்படி கன்னங்கரியாக இருப்பது உனக்கு அசிங்கமாக இல்லையா?" மட்டம் தட்டிப் பேசியது தென்னை.

"நீ வீண்வம்பு பேசுகிறாய் என்றாலும் பதில் கூறுகிறேன்"

கறுப்பு என்பது நிறங்களில் ஒன்றே தவிர, தாழ்ந்தது இல்லை. மனிதரிடத்தில் இவ்வாறு சாதி, நிற மத பேதங்கள் காட்டப்படுவதால்தான் அடிதடி, குத்துவெட்டு என அவர்கள் அமைதி இழந்து தவிக்கிறார்கள். எம்மை வெட்டி வீழ்த்துபவர்களுக்கும் கூடப் பயன் தருவதே எம் கடமை என நினைப்போர் நாம். இன்னல் புரிவோருக்கும் இனியது செய்யும் இனம் நாம். ஒரு மரமே இன்னொரு மரத்தைப் பழித்தால் மற்றவர்கள் என்னதான் செய்யமாட்டார்கள்.. கொஞ்சம் எண்ணிப்பார்"

மேலும் நிலக்கரிக்கு 'கருப்பு வைரம்' என்றொரு பெயரும் உண்டு. கறுத்த மேகம் தானே கனமழை பெய்கிறது. மழை பெய்தால்தானே உனக்கும் எனக்கும் ஏன் இந்த உலகுக்கே வாழ்வு? இல்லையென்றால் எல்லோரும் உயிரைவிட வேண்டியவர்கள்தான்.

"கறுப்பு களங்கமானதோ மதிப்புக்குறைவானதோ இல்லை" என்றது பனை.

"வேலி கட்டி, நீர் பாய்ச்சி, எருபோட்டு, மருந்து தெளித்துத் தென்னம்பிள்ளையென ஒரு குழந்தையைப் போற்றிப் பாதுகாப்பது போல என்னை மனிதர் வளர்ப்பார்களே... இப்படி உனக்கென ஓர் உயர்வு ஏதேனும் உண்டா பெத்த பிள்ளை கவனிக்காவிடிலும் வைத்த பிள்ளை கவனிக்கும் காப்பாற்றும் என்று எம்மை உயர்த்திப் பேசுபவர்களும் உண்டு. உனக்குத் தெரியாதா?" என்று சுயதம்பட்டம் அடித்தது தென்னை.

"உண்மைதான். உன்னை வளர்ப்பதற்குள் உயிர் போய்போதும் போதும் ஏன்றாகிவிடும். என்னைப் பொறுத்தவரை ஒரு சொட்டு நீருக்குக் கூடப் பிறர் கையை எதிர்பார்க்காமல் என் சொந்தக் காலில் நின்று பலருக்கும் பயன்படுவேன் நான்" என்று பண்புடன் கூறியது பனை.

அவ்வளவுதான் தென்னை மரத்துக்கு தேள் கொட்டியது போல போகம் உச்சந்தலைக்கு ஏறியது. "நான் இளநீர், தேங்காய் எல்லாம் தரவில்லையா?" என்றது எரிச்சலுடன்.

"நானுந்தான் நுங்கு, பனங்கிழங்கு முதலியன தருகிறேன். பசிக்குப் பனம்பழம் என்பது பழமொழி... இப்படி ஒரு பெரிய பட்டியலையே போட்டுக் காட்டியது பனை.

"அதிகப்படியாக அளக்காதே! என் கீற்று இல்லையெனில் கூரையை மாற்று வழிதான் எது? ஏழைக்கு இருப்பிடம் அளிப்பதே நான்தான். பதட்டப்பட்டது தென்னை. "பரம ஏழைக்கும் வீட்டுக்கு வளையாக அமைவது எனது உடலில் சீவப்பட்ட சட்டங்களும் மரங்களும் தானே.

எதிரியை எப்போதும் இளிவாக எண்ணாதே" என்று கூறியது பனை.


தென்னை "ஆயிரந்தான் நீ அடுக்கடுக்காய்ச் சொன்னாலும் தலைகீழாய் நின்றாலும் என் உயர்வை ஒருபோதும் உன்னால் எட்ட இயலாது " என ஆர்ப்பரித்தது. "வலிய சண்டைக்குப் போகக் கூடாது. வந்த வம்பை விடக் கூடாது" என்று எண்ணியது பனை.

"உலகப் பொதுமறையாகிய திருக்குறளை வள்ளுவர் பனையோலைச் சுவடியில்தானே எழுதினார். குறளோவியம் படைக்க நான் ஒரு சிறு கருவியாக இருந்திருக்கிறேனே. இதை விடவா எனக்கு இன்னொரு பெருமை வேண்டும்?" என்றது பெருமையுடன் பனை.

இனி வாய்திறக்க வழியில்லாத நிலையை உணர்ந்து மனப்புழுக்கத்துடன் ஆடாமல் அசையாமல் அப்படியே நின்றது தென்னை.

## உருவத்தை வைத்து எடைபோடக் கூடாது




வட்டத்தினுள் உள்ள எழுத்துக்களை வைத்து சில நீர் நிலைகளின் பெயர்களை உருவாக்குவோம்

01 ..............................

02. ..............................

03. ..............................

04. ..............................

05. ..............................

## சந்திரகிரகணம்



சூரியன், பூமி, சந்திரன் அனைத்தும் ஒரே நேர்கோட்டில் வரும்போது சந்திரகிரகணம் ஏற்படும்.

பூமியின் நிழல் சந்திரனில் விழுவதால் சந்திரன் பிரகாசம் குறைந்து கருஞ்சிவப்பாகக் காட்சியளிக்கும். அதாவது சூரியன் மாலை மறைந்த பிறகு அடிவானம் எந்த நிறத்தில் இருக்குமோ அது போன்று சந்திரன் காட்சியளிக்கும்.

பௌர்ணமி தினத்தன்று சந்திரகிரகணமும் அமாவாசை தினத்தன்று சூரிய கிரகணமும் தோன்றும். சந்திர கிரகணம் என்பது நீலாபூமியின் பின்னால் கடந்த செல்லும்போது பூமியானது சூரியனின் கதிர்களை நிலவின் மீது படுவதிலிருந்து மறைத்து விடுவதால் ஏற்படுவது ஆகும்.

சந்திரகிரகணம் முழுமையாக ஏற்பட்டால் பூரண சந்திரகிரணம் என்றும் அரைகுறையாக ஏற்பட்டால் பார்சுவ சந்திரகிரணம் என்றும் அழைக்கப்படுகிறது.

## வித்தியாசங்களை கண்டுபிடிப்போம்



## இழப்பு



இழப்பு என்பது எல்லோருக்குமே பொதுவான ஒன்றுதான். ஒன்றையும் இழக்காதவர் என்று எவருமே இல்லை. ஆனால் இழப்புக்களின் அளவுதான் ஆளுக்கால் வித்தியாசப்படும். இழப்புக்களின் வடிவமும் வேறுபடும்.

ஒரு சிலவற்றை இழப்பதில் நிம்மதி தொலையலாம். வாழ்க்கை அஸ்தமிக்கலாம். தன்னையே மறந்துவாழும் நிலைகூட ஏற்படலாம். இன்னும் சில இழப்புக்களினால் புதியவற்றைப் பெறலாம். புதிதான வாழ்வு தொடங்கலாம். ஏதாவது ஒன்றை நாம் இழந்தாலும் அதையே எப்போதும் நினைத்துக் கொண்டிராமல் அடுத்து எமக்கு என்ன கிடைக்கப் போகின்றது என்று ஆவலோடு எதிர்பார்க்கத் தொடங்கிவிட்டோமானால் நாம் மிகவும் பக்குவப்பட்டவராகின்றோம்.

# கேதார கௌளரி விரதம்



## சர்வ மங்களங்களையும் தரும் திருத்தொண்டு

சி.அபிராமி

கேதார கௌளரி விரதம் சர்வ மங்களங்களையும் தரும் திருத்தொண்டு. புரட்டாதி மாதம் சுக்கில பட்ச தசமி முதல் நாளில் ஆரம்பமாகி ஐப்பசி அமாவாசை தினத்துடன் நிறைவு பெறும். ஆரம்ப நாளன்று விரதத்தை சங்கற்பித்து ஆரம்பிப்பது வழக்கமாகக் காணப்படுகிறது.

**வழிபாடு**

தினமும் வீட்டில் பூசை வழிபாடு செய்து மாலை வேளையில் விசேடமாக ஆலய தரிசனம் காண்பது விரத காலவழிபாட்டு முறையாகும். இக்காலத்தில் ஸ்ரீ பஞ்சாக்ஷர மந்திர ஜபம், திருமுறைப்பாராயணஞ் செய்தல் வேண்டும். நோயாளிகள் விரத காலத்தில் மதிய போசனஞ் செய்து இரவு வேளையில் ஆலய தரிசனம் கண்டு பின் பால், பழம் அருந்தலாம். ஏனையவர்கள் மாலைப் பூசை வேளையின் பின் தானியம், பழம் அருந்தி விரதத்தைக் கடைப்பிடிக்கலாம். முடிவற்று உபவாசம் இருந்து பாறணை செய்தும் தான தர்மங்களைச் செய்தும் கேதார கௌளரி விரதத்தை மங்களகரமாக இனிதே நிறைவு செய்து கொள்ளலாம்.
கேதார கௌளரி விரதத்தை ஆண், பெண் இருபாலாரும் கடைப்பிடிக்கின்றனர். குறிப்பாக, மணமாகிய பெண்கள் தங்கள் மாங்கல்யம் தொடர்ந்தும் மங்களமாக இருக்க வேண்டியும், மணமாகாத கன்னிப் பெண்கள் நல்ல மாங்கல்ய வாழ்வை வேண்டியும் இந்த விரதத்தை கடைப்பிடிப்பர். விரதம் ஆரம்பமான நாளிலிருந்து இருபத்தொரு இழைகளைக் கொண்ட நூலில் நாள்தோறும் ஒவ்வொரு முடிச்சுகளாக இடப்பட்டு, இறுதி நாளன்று அந்த நூலை அம்பிகையின் அருளாசியோடு ஆண்கள் தமது வலது கையிலும், பெண்கள் தமது இடதுகையிலும் அணிந்து கொள்வர்.

**சிவ பக்தியின் வெளிப்பாடு**

சக்திரூபமான பார்வதி தேவி சிவனை நினைந்து விரதமிருந்து, வழிபட்டு அதன் பலனாக சிவப்பரம்பொருளின் (இடது பக்கம்) பாதியுடம்பைப் பெற்றார் என்பது வரலாறு. சிவமும் சக்தியும் இணைந்து அர்த்தநாரிஸ்வரியாகவும், அர்த்த நாரீஸ்வரராகவும் திருப்பொலிவு கண்ட விரதமே கேதார கௌளரி விரதமாகக் கடைப்பிடிக்கப் படுகிறது. 'கேதாரம்' என்பது இமயமலைச் சாரலில் உள்ள ஒரு சிவதலம். இந்தத் தலத்தில் எழுந்தருளி இருக்கும் சிவனை நினைந்து பார்வதி தேவியாகிய 'கௌளரி' மனம், வாக்கு, மெய்யால் ஒன்றித்துத் திருத்தொண்டாற்றி யதால் இப் பெயர் கூறல் உண்டாயிற்று. சிவனுக்குச் சமமான நிலையில் சக்தி அமையும் போது அந்தத் திருவுருவம் பராசக்தி எனப் போற்றப்படுகின்றது. தென்நாட்டுச் சைவம் எனப் போற்றப்படும் சைவ சித்தாந்தம் கூறும் பரம்பொருள் சிவம். சிவனின் அருள் வேண்டி கடைப்பிடிக்கப்படும் விரதங்கள் பல இருந்த போதிலும், கேதார கௌளரி விரதம் பலவகையிலும் முதன்மைச் சிறப்புடைய திருத்தொண்டாக நோக்கப்படுகின்றது. இதைவிட சர்வலோக மாதாவாகிய பார்வதி தேவியே இந்த நோன்பை முதன் முதலில் கடைப்பிடித்தார் என்பதும், பரம்பொருளின் கிருபையோடு இடப்பாகத்தைப் பெற்று அவன் அருகாகவே அமர்ந்து கொண்டார் என்பதும் இவ் விரதத்துக்கு கொடுக்கப்படும் தனிச்சிறப்பாகும்.

**புராண வரலாறு**

கைலயங்கிரியின் சிகரத்தில் நவரத்தினங்களால் இழைக்கப்பட்ட சிம்மாசனத்தில் உமாதேவி சமேதராய் விளங்கும் பரமசிவன் பக்த கோடிகள் தரிசிக்கும் பொருட்டு தேவசபையில் வீற்றிருக்கின்றார். அங்கே தேவவாத்தியங்கள் முழங்க கிருதாசி, மேனகை முதலிய தேவமாதர்கள் நாட்டியம் செய்கின்றனர். அதிலே நடன ஸ்திரீகளில் சௌந்தர்யம் மிக்கவளாகிய அரம்பையானவள் அற்புதமான நடன விசேடங்களை நடித்துக்காட்டுகிறாள்.

**பிருங்கி மகரிஷியின் விகட நாட்டியம்**

அப்போது அந்தரங்க பக்தராகிய 'பிருங்கி மகரிஷி' பக்தியோடு விசித்திரமான விகட நாட்டியம் ஒன்றை ஆடிக் காட்டுகிறார். பார்வதியும் அங்கே இருக்கின்றாள். தேவர்கள் ஆனந்தத்தால் சிரித்து மகிழ்கின்றனர். பார்வதக்குகையெங்கும் அந்தச் சிரிப்பொலி கலகலவென எதிரொலிக்கின்றது. பரமசிவனும் பிருங்கியின் நாட்டியத்தில் மூழ்கித் திளைத்து மகிழ்கிறார். பரமசிவன் அனுக்கிரகமும் பிருங்கி மகரிஷிக்குக் கிடைக்கிறது. அதைக் கண்டு சபையிலுள்ளோர் பிருங்கி மகரிஷியைக் கௌரவித்துப் பாராட்டுகிறார்கள். இவ்வேளை பிரம்மா, விஷ்ணு, தெய்வேந்திரன் முதலான முப்பத்து முக்கோடி தேவர்களும், அட்டதிக்குப்பாலகர்களும், முனிவர்களும், பதினெண்ணாயிரம் ரிஷிகள் என்போரும் இருவரையும் மூன்று தடவை பிரதர்சனம் செய்து வணங்கிச் சென்றனர்.

**பிருங்கி மகரிஷி வண்டின் உருவம் கொள்ளல்**

அந்த நேரத்தில் பிருங்கி மகரிஷி வண்டின் உருவம் பெற்று பரமேஸ்வரனுக்கும், பார்வதி தேவிக்கும் இடையில் சென்று பரமேஸ்வரனை மட்டுமே 3 தடவைகள் வலம் வந்து பயபக்தியோடு வணங்கினார். பிருங்கி ரிஷியின் செய்கையைக் கண்டு கோபமுற்ற பார்வதிதேவி, பரமேஸ்வரனிடம் காரணம் கேட்க பரமேஸ்வரனும் அர்த்தபுஷ்டியான ஒரு புன்முறுவலுடன் பின்வருமாறு பதில் கூறினார். "தேவி...! பிருங்கி முனிவர் உலக இன்பத்தை நாடுபவர் அல்ல. மாறாக மோட்சத்தை நாடுபவர். மோட்சத்தை நாடும் அவர் உலக இன்பங்களை நல்கும் உன்னை வணங்காது மோட்சத்தை நல்கும் என்னை வணங்கியதில் ஆச்சரியம் ஒன்றும் இல்லையே தேவி"- என்றார்.

**பார்வதிதேவியின் சாபம்**

இதனைக் கேட்டிருந்த லோகமாதா பார்வதிதேவி, "எனது சக்தி இல்லாமல் மோட்சத்தை நாடும் உங்கள் பக்தர் பிருங்கி முனிவர் மோட்சத்தை அடைய முடியாது. இங்கிருந்து ஒரு அடி கூட எடுத்து வைத்து தனது இருப்பிடத்தை அண்ட முடியாது. அவ்வாறான சக்தியைக் கொடுக்கும் என்னையே ஏளனம் செய்தாய்" எனக் கோபமுற்றாள். 'நிற்க முடியாமல் போகக் கடவாய்' எனப் பிருங்கி முனிவருக்குச் சாபம் கொடுத்தார். நிற்க முடியாது சக்தி அனைத்தையும் இழந்த முனிவர் தள்ளாடியவாறே நிலத்தில் சாய்ந்தார். இந்தநிலையில் "என் பக்தனைக் காப்பாற்றுதல் என் தர்மம்" எனக் கூறிய சிவப் பரம்பொருள் பிருங்கி முனிவரின் கையில் தண்டு (ஊன்று கோல்) ஒன்றைக் கொடுத்து உதவினார். ஊன்றுகோலைப் பெற்றுக் கொண்ட முனிவர் சக்தியைப் பெற்றவராக மீண்டும் பரமேஸ்வரனை மட்டும் வணங்கித் தனது ஆச்சிரமத்தை அடைந்தார்.
இதைக் கண்ணுற்ற லோகமாதாவுக்கு மேலும் கோபம் உண்டாகியது. பிருங்கி முனிவர் மட்டுமன்றி தனது கணவரான பரமேஸ்வரனும் தன்னை அவமதித்து விட்டாரே என்ற எண்ண மேலீடு கொண்டார். ஏனையவர்கள் முன்பு என்னை அவமதித்த உங்களுடன் இனி நான் வாழப் போவதில்லை எனக் கூறியபடி கைலையை விட்டு நீங்கினார். பூலோகத்துக்கு வருகை தந்து வால்மீகி மகரிஷி சஞ்சரிக்கின்ற பூங்காவனத்தில் உள்ள ஓர் விருட்சத்தின் அடியில் அமர்ந்து கொண்டார்.

**பூலோகத்தில் ஆதி பராசக்தியின் எழுந்தருளல்**

ஆதிபராசக்தியின் அம்சமான பார்வதி தேவியின் திருப்பாதங்கள் அவ்வனத்தில் பட்டதும் மரஞ் செடி, கொடிகள் எல்லாமும் புத்துயிர் பெற்றுத் தளிர்த்தன. மல்லிகை, முல்லை, மந்தாரை, பாரிஜாதம் போன்ற பூச் செடிகள் பூத்துக் குலுங்கின. நறுமணம் வீசி வனத்தின் நாற்றிசையையும் மகத்துவம் செய்தன. இதனை அவதானித்துக் கொண்ட வால்மீகி மகரிஷி தனது ஞானக் கண்ணால் பார்வதி தேவி தன்னிருப்பிடம் வந்திருப்பதை உணர்ந்து கொண்டார். ஆச்சிரமம் அமைந்துள்ள வனத்தில் பரமேஸ்வரி எழுந்தருளி இருப்பதைக் கண்டார். பார்வதி தேவி எழுந்தருளியுள்ள வில்வமரத்தடிக்கு வருகை தந்த முனிவர், "தாங்கள் பூலோகம் வந்து சிறியோனின் பன்னசாலை அமைந்துள்ள வனத்தில் எழுந்தருளி இருப்பதற்கு யான் என்ன தவம் செய்தேனோ" எனக் கூறினார். அன்னையை மெய்சிலிர்க்க வணங்கினார். பிருங்கி முனிவரின் அலட்சியத்தால் எம்பெருமானோடு கோபமுற்ற தேவியானவள் பூலோகம் வந்த கதையை அறிந்து கொண்டார்.

**ஆதி பராசக்தி அர்த்தநாரீஸ்வர மூர்த்தம் பெறல்**

இந்த சந்தர்ப்பத்திலே பார்வதி தேவியானவள் இறைவனை மீண்டும் அடைந்து ஆறுதல் அடைய விரும்பினாள். விரதம் என்கிற அற்புதமான திருத்தொண்டை மேற்கொள்ள வால்மீகியின் அறிவுரையைக் கேட்டாள். அதற்கு வால்மீகி,
"தாயே..! இவ்வுலகில் இதுவரை யாரும் கடைப்பிடிக்காத விரதம் ஒன்று உள்ளது. அது 'கேதார கௌளரி விரதம்' எனச் சிறப்பிக்கப்படுகின்றது. அதை மெய்யன்புடனும் பயபக்தியுடனும் கடைப்பிடித்தால் விரத முடிவில் பரமேஸ்வரனின் அருள் பூரணமாகக் கிடைக்கப் பெறுவீர்கள்" எனக் கூறினார். அதன்படியே 21 நாள்கள் அம்பிகை விரதமிருந்தாள். விரதத்தில் மகிழ்ந்து 21 ஆவது நாள் அம்பாளின் முன் தேவ கணங்கள் புடைசூழ ரிஷப வாகனத்தில் பூலோகத்தில் அம்பிகையின் முன் காட்சி கொடுத்த எம்பெருமான் தனது இடது பாகத்தைக் கொடுத்து அர்த்தநாரீஸ்வர மூர்த்தம் பெற்றுக் கைலாயம் சென்றார்.
ஆகவே, நாமும் இத்தகு அருட்சிறப்புக்களை உடைய விரதத்தை நோற்றுப் பரம்பொருளின் பூரணத்துவமான திருவருளைப் பெற்று வையத்துள் வாழ்வாங்கு வாழ்வோமாக.

# வித்தைகளை ஆரம்பிக்க உகந்த நாள் விஜயதசமி

காரை எம்.பி.அருளானந்தன்

நவராத்தியை அடுத்துவரும் பத்தாவது நா்ள் விஜயதசமியாகக் கொண்டா்டப்படுகிறது. இந்த விழாவை இந்தியாவிலே 'தசரா' எனக் கொண்டாடுவர். இந்து ஆலங்களிலே நடைபெற்றுவரும் ஒரு முக்கியமான பூசை 'மானம்பூ' (மகாநோன்பு) என அழைக்கப்படும்.
இது மகிடாசுர சங்காரமாகும். கன்னி விக்கிரமன் என்னும் மகிடாசுரனைச் சங்கரித்தமையால் அம்பிகைக்கு மகிடாசுரவர்த்தினி என்னும் ஒரு திருநாமமும் உண்டு. இந்தச் சங்காரத்தை நோக்காகக் கொண்டு ஆலயங்களில் வன்னிமரம் அல்லது வாழைமரத்தை நாட்டி மகிடாசுரனைத் தேவியானவன் சங்காரம் செய்வதாகப் பாவனை பண்ணி அந்த மரத்தை வெட்டி விழா கொண்டாடுவர். மகிடாசுரன் என்பவன் கொழுத்த எருமைக் கடாபோல மாட்டுத் தலையுடன் காட்சி கொடுப்பான். மகிடாசுர சங்காரம் என்பது உண்மையில் ஆன்மாக்களைப் பிடித்து ஆணவமலத்தை அழித்தல் எனப் பொருள்படும். நவராத்திரியில் ஒன்பது தினங்களும் மெய்யன்போடு தேவியை வழிபட்டுப்பெற்ற சக்தியால் ஆணவமலத்தை ஒழித்துவிட முடியும். இந்தநிலையில் ஞானம் கைவரப் பெற்றநிலை ஏற்படும். பாண்டவர்கள் அஞ்ஞானவாச காலத்தில் ஆயுதங்களை ஒரு வன்னிமரப் பொந்தில் ஒளித்து வைத்திருந்தனர். அஞ்ஞானவாசம் முடிந்ததும் தமது ஆயுதங்களை எடுத்து வன்னிமரத்தை வாளால் வெட்டி விட்டனர். இத்தினம் விஜயதசமியாகும். வித்தைகள் ஆரம்பிப்பதற்கு உகந்த தினம் இந்த விஜயதசமியாகும்.

**சுதேகன் இழந்த அரசுரிமையைப் பெற்றான்**

சுதேகன் என்னும் அரசன் தன் பகைவர்களால் நாடு நகரை இழந்து காட்டில் இருந்தான். கவலையுடன் இருந்த சுதேகன் ஆங்குரசு முனிவரைச் சந்தித்துத் தன் துயரத்தைக் கூறினான். முனிவர் நவராத்திரி விரதத்தின் பெருமையை எடுத்துரைத்து அந்த விரதத்தைக் கடைப்பிடிக்குமாறு கூறினார். சுகேதன் நவராத்திரி விரதத்தை முறையாகக் கடைப்பிடித்து அம்பிகை அருளால் இழந்த அரசுரிமையை மீண்டும் பெற்று நல்வாழ்வு பெற்றான்.

**இராமன் சீதையை சிறைமீட்டார்**

சீதாபிராட்டியை இழந்த இராமபிரான் கவலையுடன இருந்தார். அங்குவந்த நாரத மகரிஷி இராமபிரானிடம் நவராத்திரி மகிமையைப் பற்றிக் கூறினார். இராமபிரான் நாரதர் உதவியுடன் நவராத்திரி விரதம் நோற்றார். இதனால் அம்பிகையின் அருள்பெற்று இராவணனை வென்று சீதையை சிறைமீட்டார்.
உலகிலே நடைபெறும் தொழில்கள் யாவுமே அம்பிகையின் துணையுடன் அவளின் அருளால் நடைபெறுகின்றன. அம்பிகையை சரண்புகுந்தால் அதிக வரம் பெறலாம்.
எனவே நவராத்திரியின் பத்தாவது நாள் விஜயதசமியாக, வெற்றிக்குரிய திருநாளாகக் கொண்டாடப்படுகின்றது. ஆலயங்கள், பாடசாலைகள், வீடுகள் , வர்த்தக மற்றும் தொழில் நிறுவனங்கள் போன்ற இடங்களில் இந்த விழா ஆண்டுதோறும் சிறப்பாகக் கொண்டாடப்பட்டு வருகின்றது. இந்த நன்நாளிலே தேவியின் திருவருள் கிடைக்கப் பிரார்த்திப்போமாக!

# வாணியின் மழைக்கால கோலங்கள்



முற்றிலும் வாடிக்கையாளர்களின் நலன் கருதி அதிரடியான விலைக்கழிவுடன்

- மழைக் கவசங்கள்
- குளிர் அங்கிகள் (சுவற்றர்)
- யக்கட் வகைகள்
- குடை வகைகள்
- நுளம்பு வலைகள்
- சிறுவர்களுக்கான மழைக் கவசங்கள்

பொறிக்கப்பட்ட விலையில் இருந்து குறைத்து வழங்கப்படுகின்றது

## வாணி ரெக்ஸ்

இல. 81, பெரியகடை வீதி,
யாழ்ப்பாணம்.

T.P: 021 222 5578

# BRITISH COLLEGE OF HIGHER STUDIES

வழங்கும் சர்வதேச கற்கை நெறிகள்

Student Visa Migration visa மூலமாக U.K. செல்பவர்களுக்கு
**IELTS (Academic General)**

Settlement Visa மூலமாக U.K. செல்பவர்களுக்கு
**IELTS Life Skills**

மாணவர்கள், தொழில்புரிவோர், தொழில் தேடுபவர்கள், பல்கலைக் கழகம் செல்வோர், செல்லவுள்ளோர் அனைவருக்கும் அமைவான

Diploma in English 2 ½ Months
Spoken English With Grammar (Quick Learning)

விஜய தசமியை முன்னிட்டு புதிய பிரிவுகள்
இன்று 19.10.2018 காலை 11 மணிக்கு ஆரம்பம்
பதிவுகளுக்கு முந்துங்கள்

புதிய தொழில் நுட்பத்திற்கு அமைவாக Audio, Video Visuals மூலமாக Reading, Writing, Speaking, Listening எனப்பிரிக்கப்பட்டு

சிறந்த விரிவுரையாளர்கள் மூலமாகவும் Skype மூலமாகவும்

பயிற்சிகள் வழங்கப்படுகின்றன.
வடக்கு மாகாணத்தில் அதிகமான மாணவர்களை பயிற்றுவித்து 100% அனைவரையும் வெற்றி பெறச் செய்த ஒரே நிறுவனம்!

BCHS

British College of Higher Studies
No.15, Sirambiyady Lane off Stanley Road, Jaffna.
Tele: 021 222 4550
Hot Line: 076 138 0212

# யாழ். வீரசிங்கம் மண்டபத்தில்

திருமண பட்டுப் புடைவைகளின் பூங்காவனம்

# இந்தியன் செலக்ஷனின்

## தீபாவளி விசேட தள்ளுபடி

புத்தம் புதிய ஆடைத் தெரிவுகள்



| | | |
|---|---|---|
| கொட்டன் டொப் (Top) | - ~~1500/=~~ | 1000/= |
| டெனிம் டொப் (Top) | - ~~1500/=~~ | 1000/= |
| 2 in 1 சல்வார் துணி | - ~~1500/=~~ | 1000/= |
| 3 in 1 சல்வார் துணி | - ~~2000/=~~ | 1500/= |
| கொட்டன் சல்வார் | - ~~4000/=~~ | 2000/= |
| நெற் சல்வார் பெரியது | - ~~5000/=~~ | 2000/= |
| நெற் சல்வார் சிறியது | - ~~3500/=~~ | 1000/= |

**15% - 50% வரை விலைக்கழிவு**

15000/= இற்கு மேல் கொள்வனவு செய்யும் ஒவ்வொருவருக்கும் அழகிய சுவர் கடிகாரம் இலவசம்

லெகீன்ஸ் 3 இற்கு 1000/=

15000/= பெறுமதியான பட்டுச் சாறி
ஒன்றிற்கு 5000/= பெறுமதியான சாறி ஒன்று
**இலவசம்**

கொட்டன் **Top**. டெனிம் **Top**. மொடன் **Top**. சல்வார்கள். சல்வார் துணிகள். பட்டுச் சாறிகள். கொட்டன் சாறிகள். சில்க் சாறிகள். சேட். T-சேட். ரவுசர் வகைகள். பார்ட்டி புறொக்ஸ் என இன்னும் ஏராளமான ஆடைத் தெரிவுகள்



ஞாயிற்றுக்கிழமைகளிலும் திறந்திருக்கும்

**இடம் : யாழ் வீரசிங்கம் மண்டபம்**

**காலம்: 16.10.2018 - 06.11.2018 வரை**

British BUSINESS COLLEGE
Where Students Come First

விஜயதசமி அன்று வித்தியாரம்பம்

BBC பாடசாலையின் அனைத்து வளாகங்களிலும் விஜயதசமியன்று (19.10.2018 வெள்ளிக்கிழமை) காலை 8.00 மணிமுதல் ஏடுதொடக்கி வைக்கப்படும்

BBC Early Learning Schools

சர்வதேச தரத்திலான Canada கல்லூரியின் ஆசிரிய பயுற்றுவிப்பாளர்களினால்பயிற்றுவிக்கப்பட்ட ஆசிரியர்கள்

விஜயதசமி அன்று புதிய அனுமதிகள்

NO ADMISSION FEES
NO MONTHLY FEES

❖ சர்வதேச அங்கீகாரம் பெற்ற நவீன கல்வித்திட்டம் ❖ ஆங்கிலமொழி மூல கற்கை வகுப்புக்கள் ❖ தமிழ் கட்டாய பாடம் ❖ மாதந்தோறும் செயற்பாட்டு திறனையும் அறிவையும் வெளிக்கொணரும் விஷேட சமூகம் சார் நிகழ்வுகள் ❖ விளையாட்டுடன் கூடிய கற்கைநெறிகள்

❖ 2 முதல் 5 வயது குழந்தைகளுக்கான கற்கைநெறிகள்

| பிரிவு | Play Group | Montessori | Pre School |
|---|---|---|---|
| வயது | 2+ முதல் 3 வரை | 3+ முதல் 4 வரை | 4+ முதல் 5 வரை |
| காலம் | 1 வருடம் | 1 வருடம் | 1 வருடம் |



❖ வருடத்தின் எந்த மாதத்திலும் குழந்தைகளை சேர்க்கமுடியும்
❖ கற்கை முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்

வளாகங்கள்
நல்லூர் | யாழ்ப்பாணம் | மானிப்பாய் 1 | மானிப்பாய் 2 | சங்கானை | அளவெட்டி | மல்லாகம் | கோப்பாய் | புத்தூர் | பருத்தித்துறை | சாவகச்சேரி

தலைமையகம் : British Business College
இல.653, நாவலர் வீதி நல்லூர், யாழ்ப்பாணம். தொ.இல : 077 408 3656 / 077 468 2951

ஆங்கிலத்திற்கு No.1 பயிற்சி மையம்



DMI COMPUTER EDUCATION

DIPLOMA IN ENGLISH
Spoken English

ஆங்கிலப் பேச்சுக்கு உத்தரவாதம்
Reading Writing Speaking Listening

நவராத்திரி வார புதிய பிரிவுகள் ஆரம்பம்

யாழ்ப்பாணம்
Mon,Wed,Fri 8:00 a.m
Mon,Wed,Fri 3:30 p.m
Sat, Sun 3.30 p.m.

நெல்லியடி
Tue, Thu 3.30 p.m.
Sat, Sun 3:30 p.m.

சாவகச்சேரி
Tue, Thu 08.30 a.m.
Tue, Thu 03.30 p.m.

சுன்னாகம் Mon,Wed,Fri 11:30 a.m
சண்டிலிப்பாய் Mon,Wed,Fri 1:30 p.m
கிளிநொச்சி Sat, Sun 10.30 a.m

DMI, British Council இன் அங்கீகரிக்கப்பட்ட IELTS பரீட்சை பதிவு மையமாகும்.

IELTS •Unique Test Tips •Latest course Materials

IELTS Life Skills (A1,B1)
திருமணம் செய்து UK செல்பவர்களுக்கு

மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற் கல்வி ஆணைக்குழு (TVEC) ஆலும் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம். (Reg No. P25/0056)

DMI COMPUTER EDUCATION

No.113, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் Tel.: 021-222 4403 | M.M.V.வீதி நெல்லியடி Tel.: 021-226 2470 | No. 174 கண்டி வீதி, HNB வங்கி அருகில் சாவகச்சேரி Tel.: 021-227 0775 | No. 130 K. K. S வீதி, NSB வங்கி அருகில் சுன்னாகம் Tel.: 021-224 1970 | சீரணிச் சந்தி சண்டிலிப்பாய் Tel.: 021 225 6665 | No.19,A9 வீதி, கிளிநொச்சி Tel.: 021-228 5655



YOGIS
INSTITUTE OF BEAUTY THERAPY
HAIR DRESSING & HOME SCIENCE (pvt)Ltd

பண்டிகைக்கால மனையியல் செய்முறை விளக்க வகுப்புக்கள் 3 நாள்கள் மட்டும்.
2018.10.20th, 21st மற்றும் 24th திகதிகளில் காலை 10 மணி முதல் ஆரம்பம்.
இலகுவாகவும், வித்தியாசமாகவும் விரைவாகவும் செய்யக் கூடிய 5 கேக் வகைகள், 5 பேஸ்ரி வகைகள் (Pastries), 5 Sweets வகைகள்



வகுப்புக்களில் சேர விரும்புவோர் உடன் தொடர்பு கொண்டு பதிவு செய்து கொள்ளவும்

077 716 4923
021 222 2796
75, அம்மன் றோட், நல்லூர், யாழ்ப்பாணம்.

BCAS CAMPUS
BRITISH COLLEGE OF APPLIED STUDIES

After A/L's

PLATINUM PARTNER No.1 BTEC Centre in Sri Lanka



BTEC HND
Civil Engineering
WITH STRUCTURAL DESIGN
Leading to BEng (Hons)

20 வருடகால தொழிற்துறை சார்ந்த உயர்கல்வித்துறையில் நம்பகமும், சிறப்புமிக்கதுமான BCAS Campus உடன் இணைந்து UGC அங்கீகாரம் கொண்ட UK பட்டப்படிப்புகளை தொடருங்கள்...

- நவீன கற்கை வசதிகளுடன் கூடிய பிரத்தியேக Civil Engineerig கற்கை நிலையத்தில் வழங்கப்படும் பாட நெறி.
- பல்கலைக்கழக விரிவுரையாளர்களையும் அனுபவமிக்க Civil Engineerig நிபுணர்களையும் கொண்ட முழுநேர விரிவுரையாளர்கள்.
- அங்கீகரிக்கப்பட்ட Laboratory களில் Material, Hydraulic, Soil நடை முறைப்பயிற்சிகள்.

Pearson
UEL University of East London

MADHU 0777 102131
SANCHU 0777 692318
INTAKE NOW ON

BCAS Jaffna Campus,
#. 16, Point Pedro Road, Jaffna.

20 YEARS
ISO 9001:2008 CERTIFIED

021 221 9910 | info@bcas.lk | www.bcas.lk | BCAS Ranked "Platinum Partner" No.1 once again

# பாராட்டி வாழ்த்துகின்றோம்



Congratulations

## யா/ உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலயம்

### 2018 இல் தரம் - 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்கள் விவரம்

01. ரமேஸ் அனுசாந் - 182
02. கௌதமன் அரோசன் - 179
03. ரமணா லயசர்மா - 178
04. தருமசீலன் மிதுஷன் - 177
05. ஜெயதீசன் ஜெஸ்சிகா - 168
06. பிரதீபன் ஜதுஷிகா - 167
07. ஜேம்ஸ்புஸ்பராசா இன்பமாறன் - 166

01. கமல்ராஜ் மதுஷனா - 163
02. இந்துநேசன் ஹஜீரா - 161
03. சுதாகரன் ஜஸ்மின் - 160

ஏனைய 100-159 இடைப்பட்ட புள்ளிகளை பெற்றவர்களையும் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்:
பாடசாலைச் சமூகம்
யா/ உரும்பிராய் சைவத் தமிழ் வித்தியாலயம்

(AVA/236)(11,17)

## தேவை

K.V. பிறின்டேசின் தலைமைக் காரியாலயத்தில் தங்கியிருந்து வேலை செய்வதற்கு ஆள்கள் தேவை. (தலைமைக்காரியாலயம் - இல.58, கிறின்லேன், கொட்டாஞ்சேனை, கொழும்பு - 13)

**077 729 1927**

## இப்பொழுது திரையில்

A Cinema Entertainments (Pvt) Ltd Release




### வடக்கு, கிழக்கு

| | |
|---|---|
| Majestic Jaffna | 10.30/1.30/4.15/7.00 pm |
| Raja Jaffna | 10.30/2.30/6.30 |
| Saru Cinema Point Pedro | 10.30/2.30/6.30 |
| Vijaya Batticaloa | 10.30/2.30/6.30 |
| Vasanthi Vavunia | 10.30/2.30/6.30 |
| Archana Akkaraipattu | 10.30/2.30/6.30 |
| SARASWATHY Trinco | 10.30/2.30/6.30 |

மற்றும் நாடெங்கிலும் உள்ள ஏனைய திரையரங்குகளிலும்

Distributed by:
Cinema Entertainments (Pvt) Ltd (CEL)

## கேள்விஅறிவித்தல்

### குறித்தொதுக்கப்பட்ட மாகாண அபிவிருத்தி நன்கொடை வேலைத்திட்டம் (PSDG) – 2018
### சாவகச்சேரி பிரதேச சபை

1. தலைவர், பெறுகைக்குழு, சாவகச்சேரி பிரதேசசபை, கொடிகாமம் அவர்கள் தகுதி வாய்ந்த ஒப்பந்தகாரர்களிடமிருந்து அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகளை கீழ்க்காட்டப்பட்ட அட்டவணையில் விபரிக்கப்பட்டவேலைக்காக கோருகின்றார்.

2. தேசியபோட்டி கேள்வி கோரல் நடைமுறைக்கு அமைவாகவே கேள்வி கோரப்படுகின்றது. ஆயினும் 30.06.2016 ஆந் திகதிய 04/2016 (i) ஆம் இலக்கபொது நிதிச் சுற்றறிக்கையின்படி வடமாகாண நிர்வாக எல்லைக்குள் பதிவு செய்யப்பட்ட கேள்விதாரர்களுக்கு மட்டும் மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. தகுதியான கேள்விகள் கிடைக்காத பட்சத்தில் கீழ் குறித்த அட்டவணையில் உள்ள CIDA தரத்திற்கு மேற்பட்ட கேள்விதாரரின் கேள்விகள் கருத்தில் கொள்ளப்படலாம்.

3. கேள்வி பெறத் தகுதியுடையவராவதற்கு, வெற்றிபெறும் கேள்விதாரர் கறுப்புப்பட்டியலில் (Black List) சேர்த்துக் கொள்ளப்படாதவராகவும், அட்டவணையிற் காட்டியபடி வீதி புனரமைப்புக்கு பொருத்தமான தரத்தில் நிர்மாண தொழில் அபிவிருத்தி அதிகாரசபையில் (CIDA) பதிவு மேற்கொள்ளப்பட்டிருத்தல் வேண்டும்.

4. தேவையானதகைமைகள், கேள்விஆவணம் பகுதி 4 இல் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலதிக தகவல்கள் தரவு அட்டவணை (Schedule) கேள்வி ஆவணம் பகுதி 5 இல் காட்டப்பட்டுள்ளது.

5. ஆர்வமுள்ளகேள்விதாரர்கள் தலைவர், பெறுகைக் குழு, சாவகச்சேரி பிரதேசசபை, கொடிகாமம் தொலைபேசி இல - 021 205 0356, தொலைநகல் - 021 205 0348 மின்னஞ்சல்: chavakachcherips1@yahoo.com இல் இருந்து மேலதிக தகவல்களை பெற்றுக்கொள்ளலாம். அத்துடன் மேற்கூறிய இடத்தில் வேலைநாட்களில் 19.10.2018 ஆம் திகதியிலிருந்து 02.11.2018 ஆம் திகதி வரை அலுவலகநாட்களில் மு.ப 9.00 மணிமுதல் 14.00 மணிவரை கேள்வி ஆவணங்களைப் பார்வையிடலாம்.

6. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் பூரணமான கேள்வி ஆவணமொன்றை ஆங்கிலமொழியில் தலைவர், பெறுகைக்குழு, சாவகச்சேரி பிரதேசசபை, கொடிகாமம் அவர்களிடமிருந்து 19.10.2018 ஆம் திகதியிலிருந்து 02.11.2018 ஆம் திகதி வரை மு.ப 9.00 மணிக்கும் 14.00 மணிக்குமிடையில் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா. 2,000/- (வரிநீங்கலாக) செலுத்தி பெற்றுக்கொள்ளலாம். இத்தொகைபணமாகச் செலுத்தப்படல் வேண்டும்.

7. கேள்வி இரு பிரதிகளில் தயாரிக்கப்பட்டு தலைவர், பெறுகைக் குழு, சாவகச்சேரி பிரதேசசபை, கொடிகாமம் எனும் முகவரிக்கு 02.11.2018 ஆம் திகதி பிற்பகல் 14.30 மணிக்கு முன்பதாக கிடைக்கக்கூடியதாக அனுப்பி வைக்கப்படல் வேண்டும். அல்லது அலுவலகத்தில் வைக்கப்பட்டிருக்கும் கேள்விப்பெட்டியில் இடப்படல் வேண்டும். பிந்தியகேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்வியானது கேள்விநேரம் முடிவடைந்த உடனேயே வருகைதரும் கேள்விதாரர் அல்லது அவரால் எழுத்து மூலம் அதிகாரம் வழங்கப்பட்ட பிரதிநிதி முன்னிலையில் திறக்கப்படும்.

8. கேள்வியானது கேள்வி சமர்ப்பிக்கப்படும் இறுதித்திகதியிலிருந்து 63 (அறுபத்து மூன்று 04.01.2019) நாள்கள் வரையும் செல்லுபடியாகும்.

9. கேள்விப் பிணைவைப்புத் தொகையானது கீழே அட்டவணையிற் காட்டப்பட்டவாறு அமையும்.

**கேள்வி அறிவித்தல் அட்டவணை**

| கேள்வி எண் | வேலைவிபரம் | மதிப்பீட்டுதொகை மில்லியனில் (Vat, நீங்கலாக) | ஒப்பந்த காலம் | வேண்டப்படும் தரம் | கேள்விபிணை வைப்பு(ரூபா) | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | பிணை வைப்பு | செல்லுபடியாகும் காலம் |
| NP/14/41(6)/2/ PSDG/2018/08 | ஐயனார் கோவில்வீதி, திருத்தம் நாவற்குழி | 4.344 | 45 நாட்கள் | C8 | 43,500.00 | 01.02.2019 |

10. கேள்விகோரல் பற்றியமுன் கூட்டிய கூட்டம் 26.10.2018 ஆம் திகதிபி.ப. 14.30 மணிக்கு சாவகச்சேரி பிரதேச-சபை தலைமை அலுவலகத்தில் நடைபெறும். ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் தமதுசொந்தசெலவில் கலந்து கொள்ளமுடியும்.

**தலைவர், பெறுகைக்குழு,**
**சாவகச்சேரி பிரதேசசபை, கொடிகாமம். 19.10.2018**

## ஜயோதா

உத்தியோகபூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு வாரம் 1510 | சீட்டிழுப்பு திகதி 18.10.2018

வெற்றி இலக்கங்கள்: 21 27 42 46 | ஆங்கில எழுத்து: F

அடுத்த திங்கட்கிழமை ஜக்பொட் ரூ 20, 000, 000/=

தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
SMS: DLB LOT JY என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்.
அல்லது துரித அழைப்பு - 0114 824 824, 0112 333 778

## அத கோடிபதி

சீட்டிழுப்பு வாரம்: 407
வர்ணம் : ஊதா
சீட்டிழுப்பு திகதி: 2018.10.18

இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 61,300,490/-

வெற்றி இலக்கங்கள்: 10 42 59 71 | ஆங்கில எழுத்து: B

தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
SMS: DLB LOT A Kotipathi டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்.
அல்லது துரித அழைப்பு - 0114 824 824, 0112 333 778

## සංවර්ධන වාසනාව

அபிவிருத்தி அதிர்ஷ்டம்

உத்தியோகபூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு வாரம் ▶ 187
சீட்டிழுப்பு திகதி ▶ 18.10.2018 | நீலம்

ஆங்கில எழுத்து: G | வெற்றி இலக்கங்கள்: 29 31 70 | விதி எண்: 09

எதிர்வரும் சுப்பர் பரிசுப்பொதி ரூ. 14, 390, 268/=

## ஸ்வர்ண திலின

| | |
|---|---|
| 3786766 | குருணாகல் |
| 7125730 | பதுளை |
| 2563169 | யாழ்ப்பாணம் |
| 5258551 | பொலன்னறுவை |
| 3166352 | கம்பஹா |

2018.10.20 ம் திகதி சனிக் கிழமை சிவப்பு நிற டிக்கட்டுகள் சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்.
வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

அபிவிருத்தி லொத்தர் சபை
356, கலாநிதி கொல்வின் ஆர் த சில்வா மாவத்தை, யூனியன் பிளேஸ், கொழும்பு 02.
தொலைபேசி: 011 333 546-47 துரித அழைப்பு: 0114 824 824 www.dlb.lk

## Toastmasters Awareness Program

**தலைமைத்துவம். தொடர்பாடல்** உங்கள் தொழில் மற்றும் வாழ்க்கையில் அதி பிரதான அங்கம் வகிக்கின்றது என்பதை நாம் எத்தனைபேர் உணர்கிறோம்?

**தலைமைத்துவம், தொடர்பாடல்** (Leadership, Communication) என்பவற்றில் உலகின் முதன்மை மற்றும் இலாப நோக்கற்ற நிறுவனம் Toastmasters International என்பது உங்களுக்கு தெரியுமா?

Toastmasters International உலகில் தற்போது 357, 000 அங்கத்தவர்களுடனும் 16, 600 கழகங்களுடனும் 143 நாடுகளில் இயங்கிவருகின்றது.

இக் கழகம் யாழ்ப்பாணத்திலும் இயங்குவது நம்மில் எத்தனை பேருக்கு தெரியும்?

இக் கழகத்தின் பயனை யாழ். மக்களும் பெற வேண்டும் என்பதற்காகவும் இதனுடைய சேவைகளை விவரிப்பதற்காகவும் யாழ். பொது நூலக கேட்போர் கூடத்தில் நாளை (20.10.2018) சனிக்கிழமை காலை 8.30 மணிமுதல் 12.00 மணிவரை Toastmasters Awareness Program ஒன்றை ஒழுங்கு செய்துள்ளோம்.

அனுமதி இலவசம்

**தொடர்பு - 077 489 6046**

**ஸ்ரீபாலறமணன் (உபதலைவர் - அங்கத்துவம்)**

Jaffna Toastmasters Club


## நான்காம் ஆண்டு நினைவஞ்சலி

**ஜனார்த்தனன் அச்சுதன்**

மனம்மகிழ 23.07.1993 — மனம்நெகிழ 03.10.2014



**திதி: புரட்டாதி தசமி**

நான்கு ஆண்டுகள் நாழியில் கலைந்ததுவோ
நாம் பெற்ற செல்வன் நடுவினில் ஒழிந்ததுவோ
அச்சுதா என்றழைத்து ஆற ஒரு வழி இல்லையே
ஆறாத்துயரில் நாம் என்றும் கலங்குகின்றோம்.

என்றும் உந்தன் நினைவோடு
அப்பா, அம்மா, குடும்பத்தினர்.

கோகிலமஹால் ரெக்ஸ் ஹால் உரிமையாளர்- யாழ்ப்பாணம்.

## மரண அறிவித்தல்

**Dr. திருமதி அனுஷம்மா இளையதம்பி**

**(பிரபல விஷக்கடி வைத்திய நிபுணர், வேலணை)**



வேலணை கிழக்கு, 2 ஆம் வட்டாரத்தை நிரந்தர வசிப்பிடமாகவும், இல. 23, சிவன்பண்ணை வீதியை வசித்தவரும் தற்பொழுது கனடாவில் வசித்தவருமான Dr. திருமதி அனுஷம்மா இளையதம்பி (பிரபல விஷக்கடி வைத்தியர்) நேற்று (18.10.2018) வியாழக்கிழமை கனடாவில் காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல் : இ. சற்குருநாதன் (விஷகடி வைத்தியர் அப்பு) 021 222 7775


## நாகபூஷணி திருமணசேவை

மிகப் பொருத்தமான மணமக்கள் ஜாதகங்கள் உடன் தெரிவு செய்து தரப்படும்.

**257, பலாலி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்.**

**021 222 9306, 077 138 7596**

(CS 18781/15/17)

## வேலை வாய்ப்பு

எமது நிறுவனத்துடன் இணைந்து பணிபுரிவதற்கு மேசன், கம்பி வேலை செய்பவர், சட்டறிங் வேலை செய்பவர் உடன் தேவை.

தெரிவு செய்யப்படுபவர்களுக்கு சம்பளத்துடன் எமது நிறுவன ஊழியர் நலன் புரிச்சங்கத்தினால் வழங்கப்படும் சலுகைகள் வழங்கப்படும்.

**தொடர்பு - 076 826 4859, 077 712 0945**


## தவறிவிட்டது

காளியாமூலை வீதி, நுணாவில் மேற்கு, சாவகச்சேரியைச் சேர்ந்த **கந்தசாமி லீலாவதி** என்பவரின் **தேசிய அ.அ.(517913324V)** மற்றும் **வயோதிபர் அட்டை, மூன்று வங்கிப் புத்தகங்கள் என்பன அடங்கிய பேர்ஸ் நுணாவில் நூலகத்துக்கும் சாவகச்சேரிக்கும் இடையில்** தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கீழ்வரும் முகவரியிலோ / தொ.பே. இலக்கத்துடன் தொடர்புகொள்ளவும்.

ஜெகா எலக்ரிக்கல்ஸ், தனங்கிளப்பு வீதி, சாவகச்சேரி.

**077 605 9839**

## வலிகாமம் வடக்கு பிரதேசசபை, காங்கேசன்துறை (கொல்லங்கலட்டி)

## பொதுச்சந்தைகள், இறைச்சிக்கடைகள், கருவாட்டுக்கடைகள் என்பன குத்தகைக்கு / வாடகைக்கு விடுவதற்கான

# கேள்வி அறிவித்தல் 2019

கேள்விப் பத்திரம் வழங்கும் இறுதித் திகதி : 02.11.2018 வியாழக்கிழமை பி.ப 12.00 மணிவரை

கேள்விப் பத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி : 02.11.2018 வியாழக்கிழமை நண்பகல் 01.00 மணிவரை

கேள்விகள் திறக்கப்படும் திகதி : 02.11.2018 வியாழக்கிழமை பி.ப 3.00 மணி

| இல | குத்தகை விபரம் | மாத வாடகை | ஆகக் குறைந்த கேள்வித்தொகை | கேள்விப் பிணைப்பணம் (மீளளிக்கக் கூடியது) | கேள்விப் பத்திரப் பணம் (மீளளிக்க முடியாதது) |
|---|---|---|---|---|---|
| | மல்லாகம் உப அலுவலகம் | | | | |
| 01 | அளவெட்டி மலைவேம்படிச் சந்தை | - | 45,100.00 | 1,000.00 | 1,000.00 |
| 02 | அளவெட்டி மலைவேம்படி கோழிக்கடை இல - 06 | 1,000.00 | 49,500.00 | 1,000.00 | 1,000.00 |
| 03 | அளவெட்டி மலைவேம்படி ஆட்டிறைச்சிக்கடை இல - 07 | 1,000.00 | 24,350.00 | 1,000.00 | 1,000.00 |
| 04 | அளவெட்டி மலைவேம்படி கருவாட்டுக்கடை | 1,000.00 | 8,870.00 | 1,000.00 | 1,000.00 |
| 05 | மல்லாகம் பொதுச்சந்தை | | 107,000.00 | 1,000.00 | 1,000.00 |
| 06 | மல்லாகம் பொதுச்சந்தை மாட்டிறைச்சிக்கடை | 2,250.00 | 533,900.00 | 10,000.00 | 1,000.00 |
| 07 | மல்லாகம் பொதுச்சந்தை ஆட்டிறைச்சிக்கடை | 2,250.00 | 39,750.00 | 1,000.00 | 1,000.00 |
| 08 | மல்லாகம் பொதுச்சந்தை கோழிக்கடை | 2,250.00 | 585,600.00 | 10,000.00 | 1,000.00 |
| 09 | இறால்மடம் சந்தை | | 1,100.00 | 250.00 | 250.00 |
| 10 | கும்பலை மாட்டிறைச்சிக்கடை | 1,250.00 | 661,300.00 | 10,000.00 | 1,000.00 |
| 11 | கும்பலைச்சந்தை | | 183,700.00 | 1,000.00 | 1,000.00 |
| | தெல்லிப்பளை உப அலுவலகம் | | | | |
| 01 | கூத்தன்சீமாச் சந்தை | -- | 11,000.00 | 1,000.00 | 1,000.00 |
| 02 | கூத்தன்சீமாச் சந்தை கோழிக்கடை | 1,050.00 | 49,000.00 | 1,000.00 | 1,000.00 |
| 03 | கூத்தன்சீமாச் சந்தை கருவாட்டுக்கடை | பிரதேசசபையால் தீர்மானிக்கும் தொகை | 8,000.00 | 1,000.00 | 1,000.00 |
| 04 | கீரிமலை மரக்கறிச்சந்தை | | 22,000.00 | 1,000.00 | 1,000.00 |
| | மயிலிட்டி உப அலுவலகம் | | | | |
| 01 | வீமன்காமம் பொதுச்சந்தை | - | 231,100.00 | 1000.00 | 1000.00 |
| 02 | வீமன்காமம் பொதுச்சந்தை கோழிக்கடை | 1,050.00 | 354,500.00 | 10,000.00 | 1,000.00 |
| 03 | வீமன்காமம் பொதுச்சந்தை மாட்டிறைச்சிக்கடை | 1,050.00 | 88,000.00 | 1,000.00 | 1,000.00 |
| 04 | வீமன்காமம் பொதுச்சந்தை ஆட்டிறைச்சிக்கடை | 1,050.00 | 20,000.00 | 1,000.00 | 1,000.00 |
| 05 | வீமன்காமம் பொதுச்சந்தை கருவாட்டுக்கடை | பிரதேசசபையால் தீர்மானிக்கும் தொகை | 8,000.00 | 1,000.00 | 1,000.00 |

**குறிப்பு :**

* மாத வாடகை யாவும் விலை மதிப்பீட்டுத் திணைக்கள மதிப்பீட்டின் பிரகாரம் மாற்றத்தை ஏற்படுத்தமுடியும்.
* கேள்விப்பத்திரம் கோருபவர்கள் ஆள் அடையாள அட்டையுடன் அதன் போட்டோப் பிரதியையும் கொண்டு வருதல் வேண்டும்.
* இறைச்சிக்கடை விண்ணப்பம் பெறுபவர்கள் முன்பு கடை நடாத்திய பிரதேச சபையிடமிருந்து எதுவித நிலுவையும் இல்லை என்பதை உறுதிப்படுத்திய கடிதம் சமர்பிக்க வேண்டும்.
* போதிய காரணங்களால் கேள்வியை ஏற்றுக் கொள்ளும் அல்லது நிராகரிக்கும் அதிகாரம் கேள்விச்சபைக்கு உண்டு.
* கேள்விப் படிவம் பூரணப்படுத்தப்பட்டு அரக்கு முத்திரையிட்ட கடித உறையில் குறித்த தினத்திற்கு முன்னர் எமக்குக் கிடைக்கக் கூடியதாக பதிவுத் தபாலிலோ அல்லது தலைமை அலுவலகத்திலுள்ள கேள்விப் பெட்டியிலோ சேர்ப்பதுடன் கேள்விப் படிவத்தின் ஒரு பிரதியை "பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம் யாழ்ப்பாணம்" அவர்களுக்கும் அனுப்புதல் வேண்டும்.
* ஏனைய மேலதிக விபரங்களை தலைமை அலுவலகத்திலும், மல்லாகம், தெல்லிப்பளை, மயிலிட்டி உப அலுவலகங்களிலும் அலுவலக நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம். விண்ணப்ப படிவங்களை மேற்படி உபஅலுவலகங்களில் பெற்றுக்கொள்ளலாம்.
* மல்லாகம் சந்தை, அளவெட்டி மலைவேம்படி சந்தை, கூத்தன்சீமா சந்தை, கும்பலைச் சந்தை, வீமன்காமம் சந்தை, கீரிமலை மரக்கறிச்சந்தைகளிலிருந்து 500M தூரத்திற்கு உட்பட்ட கடைகளிலோ அல்லது வேறு எவ்விடத்திலும் மரக்கறி விற்பனை தடைசெய்யப்பட்டுள்ளது.
* மல்லாகம் சந்தை, அளவெட்டி மலைவேம்படி சந்தை, கூத்தன்சீமா சந்தை, கும்பலைச் சந்தை, வீமன்காமம் சந்தைகளிலிருந்து 500M தூரத்திற்கு உட்பட்ட கடைகளிலோ அல்லது வேறு எவ்விடத்திலும் கோழிஇறைச்சி கடலுணவு விற்பனை தடைசெய்யப்பட்டுள்ளது.
* சந்தையை குத்தகைக்கு எடுப்பவரால் சந்தையில் மேற்கொள்ளப்படும் அறவீடுகளுக்கு பற்றுச்சீட்டு வழங்கப்படுதல் வேண்டும்.

**19.10.2018**

**திரு.சோமசுந்தரம் சுகிர்தன். தவிசாளர்,**
**வலிகாமம் வடக்கு பிரதேச சபை, காங்கேசன்துறை (கொல்லங்கலட்டி).**

## பாராட்டி வாழ்த்துகின்றோம்


யா/மானிப்பாய் சோதிவேம்படி வித்தியாசாலையில்



2018 ஆம் ஆண்டு நடைபெற்ற
தரம் - 5 புலமைப்பரிசில் பரீட்சையில்
தோற்றி 167 புள்ளிகளைப்
பெற்றுச்சித்தியடைந்த
**செல்வி ஜெயக்குமார்**
**தமிழ்வாணி**
அவர்களைப் பாராட்டி வாழ்த்துவதோடு
கல்வி கற்பித்த அதிபர்,
ஆசிரியர்களுக்கும்
நன்றிகளைத் தெரிவித்துக்கொள்வ
தோடு மேலும் கல்வியில் முன்னேற
வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்:- அம்மம்மா, மாமாமார்,
அத்தைமார், மச்சான்மார், மச்சாள்மார்.
சுதுமலை தெற்கு, மானிப்பாய்.

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



மன்/அந்தோனியார்புரம் அ.த.க. பாடசாலையில்
2018 தரம் ஐந்து (5) புலமைப் பரிசில் பரீட்சையில்
வெட்டுப்புள்ளிகளுக்குமேல் பெற்ற சித்தியடைந்த

**செல்வி உதயநாதன் மதிவிழி - 167 புள்ளிகள்**
**செல்வி சதீஸ்குமார் கனிவிழி - 165 புள்ளிகள்**

இம் மாணவிகளையும் மேலும் 100 புள்ளிகளுக்குமேல் பெற்ற


| | | | |
|---|---|---|---|
| ம.கயல்விழி | - 137 புள்ளிகள் | சி.நுதல்விழி | - 111 புள்ளிகள் |
| தி.திகழரசன் | - 133 புள்ளிகள் | ம.செழியன் | - 109 புள்ளிகள் |
| ரா.ஜோதியா | - 126 புள்ளிகள் | பு.இசையழகன் | - 106 புள்ளிகள் |
| சு.தனுஷிகா | - 124 புள்ளிகள் | சி. கலைவேந்தன் | - 102 புள்ளிகள் |
| ர. அக்ஷஜா | - 117 புள்ளிகள் | | |

ஆகிய மாணவர்களையும் அவர்களுக்கு வழிகாட்டிய
ஆசிரியை செல்வி து.வனஜா மற்றும் அதிபர் திரு.நி.யேசுநவநீதன்
ஆகியோரையும் பாராட்டி வாழ்த்துவதோடு இம் மாணவர்கள் மேலும் பல சாதனைகள்
புரிந்து சீரும், சிறப்புடன் வாழ உளமார வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்: பாடசாலைச் சமூகம்
மன்/ அந்தோனியார்புரம் அ.த.க. பாடசாலை
இலுப்பைக்கடவை

(cs.00621)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



யா/பாஷையூர் சென். அன்ரனிஸ்
றோ.க. மகளிர் பாடசாலையில்
கல்வி கற்று 2018 ஆம் ஆண்டு
தரம் - 5 புலமைபரிசில்
பரீட்சையில் 165 புள்ளிகளைப்
பெற்று பாடசாலைக்கு பெருமை
சேர்த்துத் தந்த மாணவி
**அன்ரனி அக்ஷயா**
என்பவரை பாராட்டி வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்:- பாடசாலை அபிவிருத்திச் சங்கம்
பழைய மாணவர் சங்கம்,
யா/பாஷையூர் சென். அன்ரனிஸ் றோ.க. மகளிர்
பாடசாலை.

(cs.20667)


கல்விச் சமூகத்தோடு ஒன்றிய நிறுவனம்



கரிகணனின்
விஜயதசமி
நல்வாழ்த்துக்கள்



Harikanan CARDS





Large format Digital Printing

Head Office:
#681, K.K.S. Road, Jaffna, Sri Lanka.
W www.harikanan.com
E print@harikanan.com
F harikananprinters S harikanan
T +94 21 222 2717 | 8

Harikanan
PRINTERS OF THE NORTH
Offset | Digital | Screen | Design

Why US??? Lowest Price | Best Quality | Fast Delivery | 100% Satisfaction

**அலுவலக கணினி உதவியாளர் தேவை**

திருநெல்வேலியில் அமைந்துள்ள கல்வி நிறுவனம் ஒன்றுக்கு கணினி அறிவுள்ள (பெண்) அலுவலக உதவியாளர் தேவை.

திருநெல்வேலி, சிமாட்கிட்ஸ் - 077 386 7458





## வனவளத்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

1938ஆம் ஆண்டு அரசிதழ் அறிவித்தலின் பிரகாரம் 18 ஆயிரம் ஏக்கர் நிலங்களை வைத்திருந்த வனஜீவராசிகள் திணைக்களம் போருக்குப் பின்பு மக்களுக்கோ,மாவட்டச் செயலருக்குக் கூட எந்தத் தகவலையும் வழங்காது இரகசியமான முறையில் 48 ஆயிரம் ஏக்கரை தமக்குச் சொந்தமான காணிகளாக அறிவித்துள்ளது.

வடமராட்சி கிழக்கு, வெற்றிலைக் கேணி, நிச்சியவெட்டை, போக்கறுப்பு, சுண்டிக்குளம் பகுதிகளில் உள்ள 6 ஆயிரம் ஏக்கர் வயல்நிலங்களில் மக்கள் நெற்பயிர்ச் செய்கை கடந்த காலங்களில் மேற்கொண்டு வந்தனர்.

வழமை போன்று இந்த ஆண்டும், விவசாயிகள் தமது வயல் நிலங்களில் நெல் விதைப்பிலும், நெல் விதைத்தவர்கள் வயல் வேலிகளையும் அடைத்துக் கொண்டிருந்த போது திடீரென, மூன்று தினங்களுக்கு முன்னர் அந்தப் பகுதிக்கு வந்த வனஜீவராசிகள் திணைக்கள அதிகரிகள், மக்களை உடனடியாக வெளியேறுமாறு பணித்துள்ளனர். இந்தத் திடீர் பணிப்புரை காரணமாக நெற்செய்கை மேற்கொள்ள முடியாத நிலமை ஏற்பட்டுள்ளது.

தமது தேவைகளுக்காக பனம் மட்டைகளைக்கூட தமது சொந்தக் காணிகளில் பொறுக்க முடியாதுள்ளது என்றும் மக்கள் தெரிவிக்கின்றனர். இதனைவிட, சுண்டிக்குளம் நன்னீர் ஏரியில் இறால் மற்றும்மீன்பிடிமேற்கொள்ளவும்தடைகள்விதிக்கப்பட்டுள்ளதாகவும் அவர்கள் குறிப்பிடு கின்றனர்.

மக்களின் குற்றச்சாட்டுத்தொடர்பில் மாவட்டச் செயலர் நா.வேதநாயகனிடம் கேட்டபோது

சுண்டிக்குளத்தை அண்டிய பகுதிகளில் உள்ள தனியார் காணிகளோடு இணைந்த நிலப்பரப்பையே வனஜீவராசிகள் திணைக்களம் அடையாளப்படுத்தியது. உடனடியாக பிரதேச செயலர் சம்பந்தப்பட்ட திணைக்களத்துடன் தொடர்பு கொண்டு நிலமையை ஆராய்ந்தார். அங்குள்ள உறுதிக் காணிகளிலும் இதுவரை காலமும் நீண்டகாலமாக விதைப்பு மேற்கொண்ட நிலங்களிலும் விவசாயம் மேற்கொள்ள முடியும் என்று இணக்கம் தெரிவித்துள்ளனர்.

இந்தப் பகுதியில் மேலதிகமாக சுவீகரித்து வெளியிடப்பட்ட அரசிதழை இல்லாமல் செய்து பழைய அளவில் அரசிதழை வெளியிடுவதற்கான ஏற்பாடுகள் இடம்பெறுகின்றன.

பழைய அளவிலான நிலத்தை மட்டும் உரிமைகோரி எஞ்சிய நிலத்தை விடுவிக்கும்போது அந்த மக்களுக்கான வாழ்விட நிலத்தையும் வாழ்வாதாரத்தையும் மேற்கொள்ள முடியும். அந்த மக்களின் நிலை கருதி அதற்கான முயற்சிகளை மக்கள் பிரதிநிதிகளுடன் இணைந்து மாவட்டச் செயலகமும் முன்னெடுத்து வருகின்றது - என்றார்.

(ற-5,105,160)

## மரண அறிவித்தல்



### திருமதி நல்லம்மா ஆறுமுகம்

சங்கானையைப் பிறப்பிடமாகவும் நல்லூரை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நல்லம்மா ஆறுமுகம் நேற்று (18.10.2018) வியாழக் கிழமை இறைபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்துரை - நாகமுத்து தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற கந்தையா ஆறுமுகத்தின் அன்பு மனைவியும், உதயகுமார் (ஜேர்மனி), சந்திரகுமார் (கனடா), சானுதேவி, வதனசோதி (ஓய்வுபெற்ற சங்கீத ஆசிரியை), காலஞ்சென்ற ஜெயக்குமார் ஆகியோரின் அன்புத் தாயும், செல்வநாயகம், சுந்தரேஸ்வரன் (ஓய்வுபெற்ற தபால் ஊழியர்), பபா, எவின்றிலின் ஆகியோரின் அன்புமாமியும், கஜானன், எரியன், கேற் ஆகியேரின் அன்புப் பேர்த்தியும், காலஞ்சென்றவர்களான சதாசிவம், குணரட்ணம், தங்கம்மா, சங்கரப்பிள்ளை ஆகியோரின் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.10.2018) வெள்ளிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக பிறபகல் 2 மணியளவில் செம்மணி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

706, பருத்தித்துறை வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.

தகவல்:
மருமக்கள்

(c 7956)


**நீரிழிவு (சலரோகம்), மூட்டுவாதம், முட்டு (வீசிங்) போன்ற நோய்களுக்கு நிரந்தர தீர்வு**

பிரபல ஹோமியோபதி நிபுணரின் சேவை மக்களுக்காக

**பரந்தனில் நாளை 20.10.2018.**
**யாழ்ப்பாணத்தில் 27.10.2018**

தொடர்பு - 077 444 1082


(CS 20677/15/18)

**விஜயதசமியை முன்னிட்டு**

வயலின், வாய்ப்பாட்டு வகுப்புக்கள் பிரபல ஆசிரியர்களால் இன்று (19.10.2018) வெள்ளிக்கிழமை விசேடமாக நடத்தப்படும்.

- 077 350 5466, 021 222 0076
36, செட்டித்தெரு, நல்லூர்.


## நீங்காத நினைவலையில் ஆண்டு இரண்டு...



மலர்வு 06 . 07 . 1944

உதிர்வு 11 . 10 . 2016

### அமரர் தம்பிஐயா வேலுப்பிள்ளை

(சமாதான நீதவான் J.P)

திதி: சிராத்த திதி விஜயதசமி

ஆண்டிரண்டு கடந்தாலும் ஆறிடுமோ
உங்கள் நினைவலைகள்
மாண்டீர் என்று சொல்ல
மனம் மறுக்குதையா
கலங்காத நெஞ்சுடன்
காலமெல்லாம் வாழ்ந்தீரோ!
கலங்கி விட்டு எமையெல்லாம்
பிரிந்து சென்றதேனோ?
நீங்கள் நடந்த இடமெல்லாம்

வெறுமையாகிப் போனதையா
காலமெல்லாம் எம்முடன்
வாழ்ந்திடுவீர் என்றிருந்தோம்
காலனவன் உம்மைப் பறித்தானே
எத்தனை ஜென்மம்
எடுத்தாலும் ஆறிடுமோ எம் துயரம்
ஆறிடாத் துயரோடு
உங்கள் நினைவலைகளுடன்
வாழ்கின்றோம்

4 ஆம் வட்டாரம்,
கோம்பாவில், புதுக்குடியிருப்பு.
077 740 2914

என்றும் உம் நினைவுகளுடன்
மனைவி, பிள்ளைகள், பேரப்பிள்ளைகள் மற்றும்
மருமக்கள், குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்



### திருமதி அன்னம்மா தம்பையா

யாழ்.புங்குடுதீவைப் பிறப்பிடமாகவும், கோண்டாவிலை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி அன்னம்மா தம்பையா நேற்று (18.10.2018 ) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வேலாயுதபிள்ளை - பொன்னாச்சி தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற நடராசா - தில்லைமுத்து தம்பதியரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற நடராசா தம்பையாவின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான செல்லையா, சிவக்கொழுந்து, அருணாச்சலம், மாணிக்கம், சின்னத்துரை, சின்னாச்சி, துரையப்பா, பொன்னம்மா, கந்தசாமி ஆகியோரின் அன்புச்சகோதரியும் திலகவதி (இலங்கை), செல்வராசா (இலங்கை), சண்முகராசா (இத்தாலி), தெய்வேந்திரராசா (கனடா), வசந்தகுமாரி (இத்தாலி), காலஞ்சென்ற ஆனந்தராசா (இலங்கை) ஆகியோரின் அன்புத்தாயும் மகாலிங்கம், சந்திரயோகா, மதிவதனி, சிவனேஸ்வரி,கருணதாஸ் ஆகியோரின் அன்பு மாமியும் குலேஸ்வரி, குலேஸ்வரன், குனேஸ்வரி, குலேந்திரன், தனுசா அனோஜா காலஞ்சென்ற அனித்தா மற்றும் தனஞ்செயன், லக்சிகா, அர்ஜின், பானுஜா, சிமோனா, பிரசாந் ஆகியோரின் அன்புப்பேர்த்தியும் றஜீவா, சஜீவன், மதுசன், ஜனார்த்தன், விதுரன், தரணியா, மயூரி, மதுசா, சஜிதா, சஜீஸ், திரான், கிரோனிகா, தமிழ்குமரன், தமிழ்குன்றன், தமிழ்நேசன், கபினயா ஆகியோரின் அன்புப்பூட்டியும் லர்மிகன், அபிநயன் ஆகியோரின் கொப்பாட்டியும் ஆவார்

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.10.2018) வெள்ளிக்கிழமை பி.ப.2 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோண்டாவில் கிழக்கு இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

077 043 5484,
039 347 163 5432

தகவல் :
குடும்பத்தினர்.

## கொலைச்...

தெரிவித்து விடயத்தை மலினப்படுத்தி, சிறுமைப்படுத்த பலர் முயற்சிக்கின்றார்கள். இந்த விவகாரத்தை மூடி மறைக்கவும் முயற்சிகள் எடுக்கப்படுகின்றன.

இவ்வாறு அரச தலைவர் மைத்திபாலவின் ஆலோசகர்கள் குற்றம் சுமத்தியுள்ளனர்.

தனது கொலைச் சதி முயற்சியின் பின்னால் இந்தியாவின் றோ அமைப்பு இருப்பதாக அரச தலைவர் மைத்திரிபால, அமைச்சரவைக் கூட்டத்தில் தெரிவித்திருந்தார் என்று செய்தி வெளியாகிப் பரபரப்பை ஏற்படுத்தியிருந்த நிலையில், அரச தலைவரின் ஆலோசகர்கள் இவ்வாறு கூறியுள்ளனர்.

அரச தலைவரின் ஆலோசகர்களான லக்திலக்க மற்றும் சரத் ஆகியோர் கொழும்பில் நேற்று செய்தியாளர் சந்திப்பு நடத்தினர்.

இந்தச் சந்திப்பில் லக்திலக்க தெரிவித்ததாவது உண்மைகள் மறக்கப்படும் சம்பவங்கள் எங்கள் நாட்டில் கடந்த காலங்களில் இடம்பெற்றிருக்கின்றன. மகாத்மா காந்தி, இந்திரா காந்தி, ராஜீவ் காந்தி ஆகியோர் இந்தியாவில் கொல்லப்பட்டுள்ளனர். தமிழீழ விடுதலைப் புலிகளால் இலங்கையிலும் அரசியல் தலைவர்கள் கொல்லப்பட்டுள்ளனர். அவற்றையெல்லாம் அரசியல் கொலைகள் என்று கூறமுடியாது.

அரச தலைவர் மைத்திரிபாலவுக்கு எதிரான கொலை முயற்சியை நாடகம் என்று கூறி நிராகரிக்கச் சிலர் முற்படுகின்றனர். மைத்திரிபாலவுக்கு எதிரான கொலைச் சதி தொடர்பில் தகவல் வெளியிட்டவர் முக்கியமல்ல. அவர் கூறிய விடயம்தான் முக்கியமானது. இந்தச் சதி முயற்சி உண்மையில்லை என்றால், இந்த விவகாரத்துடன் தொடர்புடைய பிரதிப் பொலிஸ்மா அதிபரை பதவி விலக்குவதற்கு சட்டம் ஒழுங்கு அமைச்சுக் கோரியது ஏன்? இந்தக் கொலை முயற்சி அரசியல் சூழ்ச்சியாகவும் இருக்கலாம். இந்தக் கொலைச் சதி விவகாரத்தை மூடிமறைப்ப தற்கு, இதனைக் குறைத்து மதிப்பிடுவதற்கு பலரும் தொடர்ந்தும் முயற்சிக்கின்றார்கள் - என்றார்.

அரச தலைவரின் மற்றொரு ஆலோசகரான சரத் தெரிவித்ததாவது;

தற்போது பதவிநீக்கப்பட்டுள்ள பிரதிப் பொலிஸ்மா அதிபர் தனது சட்டத்தரணியாக என்னைச் செயற்படக் கோரினார். அதற்கு நான் மறுத்து விட்டேன். தற்போது ஐக்கிய தேசியக் கட்சியில் சட்டத்தரணி ஒருவரின் சேவையைப் பெற்றுள்ளார்.

நாட்டின் தலைவராக இருந்த பண்டாரநாயக்க முதலில் கொல்லப்பட்டார். 1963ஆம் ஆண்டு சிறிமாவோவைக் கொல்லுவதற்குச் சதி செய்யப்பட்டது. ஆனால் அது கண்டுபிடிக்கப்பட்டது. ரணசிங்க பிரேமதாச 1993ஆம் ஆண்டு கொல்லப்பட்டார். 1999ஆம் ஆண்டு தேர்தல் பரப்புரையின்போது சந்திரிக்காவைக் கொல்ல முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. அரச தலைவராகத் தெரிவு செய்யப்பட்டு ஓராண்டுக்குள்ளேயே மகிந்த ராஜபக்சவைக் கொல்ல முயற்சிக்கப்பட்டது. சினைப்பர் துப்பாக்கியுடன் ஒருவர் கைதானார். கடந்த கால நிலமைகள் இதுவாக இருக்கையில் அரச தலைவர் கொலை முயற்சி குறித்து குறைத்து மதிப்பிடவேண்டாம். இதனைப் பொய் நாடகம் என்றும் கூறமுடியாது என்றார்.

அரச தலைவர் கொலைச் சதியுடன் தொடர்புடையதான சந்தேகத்தில் கைது செய்யப்பட்ட இந்தியர் மனநலம் குன்றியவர் என்றால் அவரின் மருத்துவ அறிக்கை ஏன் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவில்லை. இந்தக் கொலை முயற்சியுடன் தொடர்புடையதாக கிழக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் ஒருவரின் பெயர் அடிபட்டது. அவர் தற்போது மேற்குல நாட்டுக்குச் செல்வதற்கு நுழைவிசைவுக்கு விண்ணப்பித்துள்ளார். ஏன் அவர் தற்போது வெளிநாடு செல்ல முற்படுகின்றார்?. இந்தக் கொலைச் சதியில் இந்தியாவின் உளவு அமைப்பான றோ சம்பந்தப்பட்டுள்ளதாக ஹிண்டு பத்திரிகை செய்தி வெளியிட்டது. அது தொடர்பில் ஊடகப் பிரிவு விளக்கமளித்து விட்டது. ஆனாலும் வீட்டில் உள்ள நெருப்பை வெளியே கூறியது தவறாகும் - என்றார் லக்திலக. (ந-5,61)

## நாளை...

தலைமை அமைச்சர் நரேந்திர மோடியைச் சந்தித்துக் கலந்துரையாடவுள்ளார்.

தலைமை அமைச்சர் தனது பயணத்தில் இந்திய அயலுறவுத்துறை அமைச்சர் சுஸ்மா சுவராஜ், உள்துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் ஆகியோரையும் சந்திக்கவுள்ளார். அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவைக் கொலை செய்யும் சதித்திட்டம் தொடர்பாக வெளியான தகவல்கள் தொடர்பாகவும் இந்திய அதிகாரிகளுடன் தலைமை அமைச்சர் பேச்சு நடத்தவுள்ளார் என்று அவரது செயலகப் பேச்சாளரை மேற்கோள்காட்டித் தகவல் வெளியாகியுள்ளது.

இந்த சதித் திட்டத்தில் இந்திய புலனாய்வுப் பிரிவு தொடர்புபட்டுள்ளது என்று இந்திய ஊடகம் ஒன்றில் செய்தி வெளியான நிலையிலேயே, இந்திய பாதுகாப்பு அதிகாரிகளுடன் தலைமை அமைச்சர் பேச்சு நடத்தவுள்ளார். அதற்காக இந்திய பாதுகாப்பு அதிகாரிகளைச் சந்திக்க நேரம் ஒதுக்கித் தரக் கேட்கப்பட்டுள்ளது என்று தலைமை அமைச்சரின் செயலக பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

புதுடில்லி சென்றடைந்த தலைமை அமைச்சரை இலங்கைக்கான இந்தியத் தூதுவர் தரன்ஜித் சிங் சந்து, புதுடில்லியில் உள்ள இலங்கைத் தூதுவர் சித்ராங்கனி வகீஸ்வரா, இந்திய அயலுறவு அமைச்சின் அதிகாரிகள் வரவேற்றனர். 2015ஆம் ஆண்டுக்குப் பின்னர் தலைமை அமைச்சர் புதுடில்லிக்கு மேற்கொள்ளும் 5ஆவது அதிகாரபூர்வ பயணம் இதுவாகும். (ற)

## டெங்கு...

காணப்படும் கிராம அலுவலர் பிரிவுகளை இனங்கண்டு நவம்பர் முதலாம், இரண்டாம் திகதிகளில் சிறப்பு டெங்குக் கட்டுப்பாட்டுச் செயற்பாடுகளை மேற்கொள்ளுமாறும் அறிவித்துள்ளனர்.

ஏற்கனவே செயற்படுவது போல பிரதேச செயலகம், பொலிஸார், படையினர், உள்ளூராட்சி சபையினர், கிராம டெங்கு கட்டுப்பாட்டுக் குழுவினர் மற்றும் பொது அமைப்புகளின் பங்களிப்புடன் இதனை முன்னெடுக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (5,9)

## பயங்கர...

ஆயுதங்களுடன் நேற்றுக் காலை கைது செய்யப்பட்டுள்ளார்.

பொலிஸ்மா அதிபருக்கு கிடைத்த தகவலுக்கு அமைவாக மேற்கொள்ளப்பட்ட திடீர் சுற்றிவளைப்பு தேடுதல் நடவடிக்கையின்போதே இந்த ஆயுதங்கள் மீட்கப்பட்டுள்ளன. இந்தச் சுற்றிவளைப்பு நடவடிக்கையை கொழும்பிலிருந்து சென்ற சிறப்பு அணி மேற்கொண்டுள்ளது.

பயங்கர ஆயுதங்களை தனது வீட்டில் அவர் என்ன நோக்கத்துக்கு வைத்திருந்தார் என்பது தொடர்பான தீவிர விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

அவரது வீட்டிலிருந்து ரி56 ரகத் துப்பாக்கி, அதற்குப் பயன்படுத்தும் தோட்டாக்கள், எம்.டி.ரக துப்பாக்கி, அதற்குப் பயன்படுத்தும் தோட்டாக்கள், 9 எம். ரக துப்பாக்கி அதன் 75 தோட்டாக்கள் என்பனவும் மீட்கப்பட்டுள்ளன.

அரச தலைவர் மைத்திரிபால கொலைச் சதி முயற்சி தொடர்பாகப் பரபரப்பாக பேசப்பட்டு வரும் நிலையில், சுதந்திரக் கட்சியின் அமைப்பாளர் வீட்டிலிருந்து ஆயுதங்கள் மீட்கப்பட்டுள்ளன. (ந-5,71)

## அரசியல்...

மூலம் அரச தலைவரை ஓரம்கட்ட ரணில் துடிக்கின்றார் என்று சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் 16 பேர் கொண்ட அணி குற்றஞ் சாட்டியுள்ளது. கொழும்பில் நேற்று நடத்திய செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்தாவது

அரச தலைவர் மைத்திரிபால மற்றும் முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் ஆகியோரைக் கொலை செய்வதற்கான சதி முயற்சியின் புதிய அத்தியாயம் நேற்று (நேற்றுமுன்தினம்) ரணில் விக்கிரமசிங்கவின் ஆலோசனையின் படி ஐக்கிய தேசியக் கட்சி அமைச்சர்களால் அரங்கேற்றப்பட்டது என்றே நான் கருதுகின்றேன். அமைச்சரவைக் கூட்டத்தின் பின்னர் வெளியே வந்த சில அமைச்சர்கள் தன்னைக் கொலை செய்ய இந்தியாவின் றோ பிரிவு முயற்சித்தது என்று அரச தலைவர் கூறினார் என்கிறார்கள். அந்தத் தகவலை அறிந்த அரச தலைவர் உடனடியாக மறுக்கின்றார். அமைச்சரவைப் பேச்சாளர் ராஜிதவும் அரச தலைவர் அப்படிக் கூறவில்லை என்கிறார். ஆனால் தலைமை அமைச்சர் ரணில் அதிசயிக்கும் விதத்தில் இந்தியாவிடம் இது தொடர்பாகப் பேச நேரம் தேவை என்கிறார். இவற்றால் குழப்பமடைந்த இந்தியத் தலைமை அமைச்சர் மோடி அரச தலைவருடன் தொலைபேசியில் கலந்துரையாடியுள்ளார். ஆனாலும் தலைமை அமைச்சர் இது தொடர்பாகப் பேச வேண்டும் என்று விடாப்பிடியாக இருக்கின்றார். அவரது இந்தியப் பயணத்திலும் றோ தொடர்பில் கலந்துரையாடவும் நேரம் ஒதுக்கியுள்ளார்.

இந்தியாவில் இருக்கின்ற அனைத்துத் தொடர்புகள், நம்பிக்கை, நட்பு என்ற வட்டத்தில் இருந்து அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவை ஒதுக்கவே ரணில் விக்கிரமசிங்க இப்படிச் செய்கின்றார்.

நன்கு திட்டமிட்டு அமைச்சர்கள் மூலம் இந்தக் கருத்துக்களை வெளியிட்டதும், இந்தியாவிடம் விசாரணைக்கு நேரம் கோரியதும் சூழ்ச்சியே. உயிரைப் பறிக்காது மைத்திரியை அரசியல் ரீதியாகக் கொலை செய்வதே ரணிலின் ஒரே நோக்கம் - என்றார். (ற)

## ஆவாவை...

சட்டத்தரணி முடியப்பு றெமீடியஸ்.

கோப்பாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஆடிய பாதம் வீதியில் இளைஞர் ஒருவரைத் தாக்கிக் காயம் விளைவித்தனர் என்ற குற்றச்சாட்டில் இளைஞர்கள் நால்வர் கடந்தவாரம் யாழ்ப்பாணம் நீதிவான் மன்றில் முற்படுத்தப்பட்ட னர். அவர்கள் நால்வரும் நேற்றுவரை விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தனர்.

சந்தேநபர்கள் இளைஞர் ஒருவரைத் துரத்திச் சென்றனர். அவர்களிடம் இருந்து தப்பிப்பதற்காக இளைஞன் கிணறு ஒன்றுக்குள் குதித்துள்ளார். கிணற்றில் குதித்தவரை துரத்திச் சென்றவர்கள் கற்களால் தாக்கினர் என்று தமக்குக் கிடைத்த முறைப்பாட்டின் அடிப்படையில் கோப்பாய் பொலிஸார் வழக்குத் தாக்கல் செய்திருந்தனர்.

சந்தேகநபர்கள் நால்வரும் நேற்று யாழ்ப்பாணம் நீதிமன்றப் பதில் நீதிவான் வீ.ரி.சிவலிங்கம் முன்னிலையில் முற்படுத்தப்பட்டனர்.

அவர்கள் சார்ப்பில் சட்டத்தரணி முடியப்பு றெமீடியஸ் முன்னிலையாகி மன்றில் பிணை விண்ணப்பம் செய்தார்.

ஆவா என்ற குழுவை உருவாக்கியவர்கள் கோப்பாய் பொலிஸார்தான். அவ்வாறானவர்களால் முற்படுத்தப்பட்டுள்ள சந்தேகநபர்கள் அப்பாவிகள். அவர்களைப் பிணையில் விடுவிக்க வேண்டும் என்று அவர் விண்ணப்பம் செய்தார்.

வழக்கை ஆராய்ந்த பதில் நீதிவான், பிரதான நீதிவான் முன்னிலையில் பிணை விண்ணப்பத்தை முன்வைக்குமாறு தெரிவித்துச் சந்தேகநபர்களின் விளக்கமறியலை எதிர்வரும் 25ஆம் திகதி வரை நீடித்தார். (ந-37)

## கல்வியற்...

ஆண்கள் விடுதியில் தங்கியிருந்த மாணவர்கள் காய்ச்சலால் பாதிக்கப்பட்டுள்ளனர். அவர்கள் சிகிச்சைக்காக கோப்பாய் பிரதேச மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர். மாணவர்கள் தொடர்ச்சியாகக் காய்ச்சலால் பாதிக்கப்படுவதை அடுத்து கல்லூரி நிர்வாகம் மற்றும் மருத்துவமனை நிர்வாகம், பிரதேச பொதுச் சுகாதார பிரிவினருக்கு தகவல்களை வழங்கின. கல்லூரி வளாகம் சுகாதாரப் பரிசோதகர்களால் பார்வையிடப்பட்டுள்ளது.

டெங்கு பரவலாக இருக்கலாம் என்று சந்தேகித்து அதற்குரிய விழிப்புணர்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இது தொடர்பில் கல்லூரி பீடாதிபதி ச.அமிர்தலிங்கத்தை தொடர்பு கொண்டு கேட்ட போது,

மாணவர்களுக்கு காய்ச்சல் வந்தது உண்மை. இடையே மழை பெய்தமை காரணமாக இந்த நோய் நிலமை ஏற்பட்டு இருக்கலாம். இது தொடர்பில் பொதுச் சுகாதார பிரிவினருக்கு அறிவிக்கப்பட்டு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. காய்ச்சலால் பாதிக்கப்பட்ட மாணவர்களை விடுதியில் வைத்து பராமரிப்பதற்கு ஏற்ற வசதிகள் இல்லை. அவர்களை வீட்டுக்கு அனுப்பியுள்ளோம். கல்லூரியின் கற்றல் நடவடிக்கைகள் பாதிக்கப்படவில்லை. நேற்று (இன்று) நவராத்திரி வழிபாடு கூட மிகச் சிறப்பாக நடைபெற்றது - என்றார். (5,7)

## வவுனியா...

சேர்ந்த ஒருவர் உயிரிழந்துள்ளதுடன், இரண்டு பேர் படுகாயமடைந்துள்ளனர். அவர்களில் ஒருவரின் கை துண்டிக்கப்பட்டுள்ளது.

வீதியில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த உழவியந்திரத்துடன், மோதியே விபத்து இடம்பெற்றதாக பொலிஸார் தெரிவித்தனர்.

ஏ9 முதன்மைச் சாலையில் புளியங்குளத்தில் உள்ள எரிபொருள் நிரப்பு நிலையத்துக்கு அருகாமையில் விபத்து நடைபெற்றுள்ளது.

கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி வந்த கூலர் வாகனம், அதே திசையில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த உழவு இயந்திரத்துடன் மோதியது. உழவியந்திரத்தில் கதிர் அறுக்கும் இயந்திரம் இருந்தது. இந்த விபத்தில் கதிர் அறுக்கும் இயந்திரமும், உழவு இயந்திரமும் தடம்புரண்டன. கூலர் வாகனம் பலத்த சேதம் அடைந்தது. கூலர் வாகனத்தில் பயணம் செய்த, திருமணம் முடித்து 7 மாதங்களேயான, யாழ்ப்பாணம் வடமராட்சியைச் சேர்ந்த மரியதாஸ் நிரோசன் உயிரிழந்துள்ளார். செ.அயந்தன் என்பவரின் கை துண்டிக்கப்பட்டுள்ளது. உழவியந்திரத்தில் இருந்த சிந்துயன் என்ற இளைஞன் படுகாயமடைந்துள்ளார். (5,110)

## 28 ஆண்டுகளுக்கு...

பட்டுள்ளது. 15 குடும்பங்களுக்குச் சொந்தமான காணி, திருகேதீஸ்வர ஆலய பரிபாலகர் சபைக்குச் சொந்தமான காணி, மருத்துவமனைக்கான காணி என்பன விடுவிக்கப்பட்ட 5 ஏக்கரில் உள்ளடங்குவதாக, மன்னார் பிரதேச செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

காணியை விடுவிக்கும் நிகழ்வு நேற்றுமுன்தினம் மாலை இடம்பெற்றது. மன்னார் பிரதேச செயலர் திருமதி சிவசம்பு கனகாம்பிகையிடம் இராணுவ அதிகாரி காணியைக் கையளித்தார்.

மன்னார் மாவட்டத்தில் முள்ளிக்குளத்தில் கடற்படையினரின் ஆக்கிரமிப்பிலுள்ள 23 ஏக்கர் காணியை விடுவிக்க அமைச்சரவை கடந்த செவ்வாய்க்கிழமை அனுமதி வழங்கியிருந்தது.

மன்னார் மாவட்டத்தில் 2 ஆயிரத்து 583 ஏக்கர் காணி இன்னமும் விடுவிக்கப்பட வேண்டியுள்ளதாக மன்னார் மாவட்டச் செயலகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. இவற்றில் 2 ஆயிரத்து 271 ஏக்கர் காணி அரச காணி எனவும், 312 ஏக்கர் தனியார் காணி எனவும் அந்தத் தகவல்களில் குறிப்பிடப்பட்டுள்ளது. (5,56,105)

## தள்ளாடி...

பற்றைக்குள் ஒரு தொகுதி வெடி பொருள்கள் இருப்பதை அவதானித்த வான்படையினர் உடனடியாகப் பொலிஸார் ஊடாக மன்னார் நீதிமன்றத்தின் கவனத்துக்குக் கொண்டு வந்தனர். கண்டு பிடிக்கப்பட்ட வெடி பொருள்களை மீட்பதற்கு மன்னார் நீதிமன்றம் அனுமதி வழங்கிய நிலையில் நேற்று வியாழக்கிழமை மாலை அவை மீட்கப்பட்டன.

சிறப்பு அதிரடிப் படையினர், பொலிஸார் மற்றும் வான்படையினர் இணைந்து வெடி பொருள்களை மீட்டுள்ளனர்.

ஆட்லறி குண்டுகள் 4, மோட்டார் வெடி குண்டு1, பயூஸ்4, கைக்குண்டு1, சிறிய ரக குண்டு1 ஆகியன இவ்வாறு மீட்கப்பட்டுள்ளன. (5,56)

## சீனாவிடம்...

நாணய தவணை நிதியளிப்பு வசதியின் கீழ், கடந்த மார்ச் மாதம் ஆயிரம் மில்லியன் டொலருக்கான முன்மொழிவுகள் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு வங்கிகளிடம் இருந்து கோரப்பட்டன. நான்கு உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு வங்கிகளிடம் இருந்து முன்மொழிவுகள் சமர்ப்பிக்கப்பட்டன.

அந்த முன்மொழிவுகளில் அமைச்சரவையால் நியமிக்கப்பட்ட வழிநடத்தல் மற்றும் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் கடுமையான மதிப்பீடுகள் மற்றும் பேச்சை அடுத்து சீன அபிவிருத்தி வங்கி தெரிவு செய்யப்பட்டது.

இதன் மூலம் அரசு ஆயிரம் மில்லியன் டொலரை சீன அபிவிருத்தி வங்கியிடம் இருந்து நேற்றுப் பெற்றுள்ளது. இந்தக் கடனை 8 ஆண்டுகளில் திருப்பிச் செலுத்த வேண்டும் என்றும் இலங்கை மத்திய வங்கி தெரிவித்துள்ளது. (ற)

## சீனத்...

ஆறு புதிய பிரிவில் 6 பயிற்சி வானூர்திகள் இலங்கை வான்படையினரிடம் கையளிக்கப்பட்டுள்ளன.

விமானப்படைத் தளபதி எயர் மார்ஷல் கபில ஜெயம்பதி, இந்த விமானங்களை நேற்றுமுன்தினம் பொறுப்பேற்றார்.

சீனாவில் தயாரிக்கப்பட்ட இந்த விமானங்களின் பாகங்கள் கட்டுநாயக்க விமானப்படைத் தளத்தில் உள்ள விமான பொறியியல் பிரிவில் ஒருங்கிணைக்கப்பட்டு தயாரிக்கப்பட்டுள்ளன.

இந்த விமானங்கள் சிறிலங்கா விமானப் படையின் முதலாவது பயிற்சி அணியில் சேர்த்துக் கொள்ளப்பட்டு, சீனக்குடா விமானப்படைத் தளத்தில் நிறுத்தப்படும். புதிதாக பயிற்சி பெறும் விமானிகளுக்கு இந்த விமானத்தில் பயிற்சி அளிக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டது. (ற)

## வதந்தி...

அம்பலப்படுத்த வேண்டும். இவ்வாறு அமைச்சர் மகிந்த சமரசிங்க வேண்டுகோள் விடுத்தார். சிறிலங்கா சுதந்திரக் கட்சி ஏற்பாடு செய்திருந்த செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் தெரிவித்ததாவது:

அமைச்சரவைக் கூட்டத்தில் அரச தலைவர் றோ மீது எந்தக் குற்றச்சாட்டையும் முன்வைக்கவில்லை. அப்படியான எதுவும் அமைச்சரவைக் கூட்டத்தில் ஆராயப்படவுமில்லை என்பதே அரசின் நிலைப்பாடாகும்.

வெளிவிவகார அமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கையில் இந்தப் போலியான தகவல்கள் இந்திய - இலங்கை அரசுகளுக்கு இடையே முரண்பாடுகளைத் தோற்றுவிப்பதற்கான முயற்சி என்பது தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

குழப்பமான நிலை தோன்றியமைக்குக் காரணமானவர்கள் தங்களை வெளிப்படுத்த வேண்டும். இதற்கு யார் காரணம் என்பதைக் கண்டுபிடிக்க வேண்டியது அரசின் கடமை - என்றார். (ற)



சிலாவத்தை இளம்பறவைகள் விளையாட்டுக் கழகம் நடத்தும் வேலுப்பிள்ளை சோமசுந்தரம் ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்துக்கான கால்பந்தாட்டத் தொடரின் இறுதியாட்டம் நாளை சனிக்கிழமை இரவு 7 மணிக்கு சிலாவத்தை இளம்பறவைகள் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெறவுள்ளது. இதில் புதுக்குடியிருப்பு சுப்பர்றாங் அணியை எதிர்த்து அளம்பில் இளந்தென்றல் விளையாட்டுக் கழக அணி மேதவுள்ளது. (ம-23)

## இன்றைய மோதல்கள்

யாழ்ப்"!ாணம், ஒக். 19

**யாழ். லீக்கின் கால்பந்தாட்டம்**

யாழ்ப்பாணம் கால்பந்தாட்ட லீக்கின் 75ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடத்தப்பட்டுவரும் கால்பந்தாட்டத் தொடரில் இன்று இடம்பெறும் ஆட்டத்தில் புத்தூர் விக்னேஸ்வரா விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து அன்னை விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. மாலை 4.45 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் நாவாந்துறை சென். மேரிஸ் அணியை எதிர்த்து ஆனைக்கோட்டை யூனியன் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது.

**யாழ். மத்தியின் கூடைப்பந்தாட்டம்**

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியின் மாணவர் முதல்வர் சபையினால் நடத்தப்படும் பொன் விபுலானந்தன் ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்துக்கான கூடைப்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியின் கூடைப்பந்தாட்டத் திடலில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று பிற்பகல் 3 மணிக்கு இடம்பெறும் பெண்களுக்கான ஆட்டத்தில் யாழ்ப்பாணம் திருக்குடும்பக் கன்னியர்மட அணியை எதிர்த்து சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி அணி மோதவுள்ளது. மாலை 4 மணிக்கு இடம்பெறும் ஆண்களுக்கான ஆட்டத்தில் சென். பற்றிக்ஸ் கல்லூரி அணியை எதிர்த்து சாவச்சேரி டிறிபேக் கல்லூரி அணி மோதவுள்ளது. (ம- 23)

# ஏஞ்சலை வென்றது யாழ்ப்பாணம் மத்தி



யாழ்ப்பாணம், ஒக். 19

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மாணவர் முதல்வர் சபையினால் பொன் விபுலானந்தன் ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்துக்காக நடத்தப்படும் கூடைப்பந்தாட்டத் தொடரில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அணி வெற்றிபெற்றது.

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியின் கூடைப்பந்தாட்டத் திடலில் நேற்று முன்தினம் புதன்கிழமை பிற்பகல் 3 மணிக்கு இடம்பெற்ற ஆட்டத்தில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அணியை எதிர்த்து மானிப்பாய் ஏஞ்சல் பான்னாட்டுப் பாடசாலை அணி மோதியது. இதில் 72:67 என்ற புள்ளிகளின் அடிப்படையில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அணி வெற்றிபெற்றது. (ம-23)

## வெற்றிபெற்றது வீனஸ்

யாழ்ப்பாணம், ஒக். 19

யாழ்ப்பாணம் கால்பந்தாட்ட லீக்கின் 75ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடத்தப்பட்ட கால்பந்தாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் புத்தூர் வீனஸ் அணி வெற்றிபெற்றது.

அரியாலை கால்பந்தாட்ட பயிற்சி நிலைய மைதானத்தில் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3.45 மணிக்கு இடம்பெற்ற ஆட்டத்தில் புத்தூர் வீனஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து உரும்பிராய் சரஸ்வதி விளையாட்டுக் கழக அணி மோதியது.


நிர்ணயிக்கப்பட்ட நிமிடங்களின் நிறைவில் இரண்டு அணிகளும் தலா ஒரு கோலைப் பதிவுசெய்ததை அடுத்து சமநிலைத் தவிர்ப்பு உதைகளில் வெற்றியைத் தீர்மானிக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. 4:2 என்ற கோல் கணக்கில் வீனஸ் அணி வெற்றிபெற்றது. (ம-23)

## திருநகர் சம்பியன்

யாழ்ப்பாணம், ஒக். 19

இலங்கை கரப்பந்தாட்டச் சம்மேளனத்தினால் நடத்தப்படும் மஞ்சி வெற்றிக் கிண்ணத்துக்கான கரப்பந்தாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற இறுதியாட்டத்தில் திருநகர் விளையாட்டுக் கழக அணி சம்பியனானது.

கிளிநொச்சி தேசிய இளைஞர் சேவைகள் மன்ற கரப்பந்தாட்டத் திடலில் இடம்பெற்ற இறுதியாட்டத்தில் திருநகர் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து வட்டக்கச்சி குறிஞ்சி விளையாட்டுக் கழக அணி மோதியது. 3 செற்களைக் கொண்டதாக இறுதியாட்டம் இடம்பெற்றது. இதில் திருநகர் விளையாட்டுக் கழக அணி 2:0 என்ற நேர்செற் கணக்கில் வெற்றிபெற்றது. (ம-23)



தமிழர்களின் பாரம்பரிய தற்காப்புக் கலைகளில் ஒன்றான சிலம்புக்கலை ஆசிரியர் விஜயராஜினால் சாவாகச்சேரி இந்துக் கல்லூரி மாணவர்களுக்கு நேற்று பயிற்றுவிக்கப்பட்டது. (ம-23)

## மாணவன் மதிப்புறுத்தல்

யாழ்ப்பாணம், ஒக். 19

இலங்கை கராத்தே சம்மேளனத்தினால் நடத்தப்பட்ட கராத்தே தொடரில் வெண்கலப்பதக்கம் வென்ற சாவகச்சேரி இந்துக் கல்லூரி மாணவன் உதயகாந்தன் சஞ்சீஸ் கல்லூரிச் சமூகத்தால் மதிப்புறுத்தப்பட்டார்.

கல்லூரியின் தலைமை மண்டபத்தில் கல்லூரி அதிபர் நடராஜா சர்வேஸ்வரன் தலைமையில் இந்த மதிப்புறுத்தல் நிகழ்வு நடைபெற்றது. மாணவனின் பயிற்சியாளர் விஜயராஜும் மதிப்புறுத்தப்பட்டார். (ம-23)


## கரவெட்டிக் கோட்ட ஆசிரியர் அணி கிண்ணம் வென்றது



யாழ்ப்பாணம், ஒக். 19

வடமராட்சி கல்வி வலய ஆசிரியர்களுக்கான வலைப்பந்தாட்டத்தில் கரவெட்டிக் கோட்ட ஆசிரியர் அணி சம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித்தது. கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரி மைதானத்தில் அண்மையில் இந்த இறுதியாட்டம் நடைபெற்றது. இறுதியாட்டத்தில் கரவெட்டிக் கோட்ட ஆசிரியர் அணியை எதிர்த்து பருத்தித்துறைக் கோட்ட ஆசிரியர் அணி மோதியது.

ஆட்டம் ஆரம்பம் முதல் ஆதிக்கம் செலுத்திய கரவெட்டிக் கோட்ட ஆசிரியர் அணி 11:5 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றிபெற்று கிண்ணம் வென்றது. (ம-422,108)



இந்தியா - மேற்கிந்தியத் தீவுகள் அணிகளுக்கு இடையிலான ஐந்து ஆட்டங்களைக் கொண்ட ஒருநாள் தொடர் நாளைமறுதினம் ஆரம்பமாகவுள்ள நிலையில் இந்தத் தொடருக்காக இரண்டு அணிகளும் நேற்றுக் கடும் பயிற்சியில் ஈடுபட்டன. (ம)



அளவெட்டி ஞானவைரவர் விளையாட்டுக் கழக கரப்பந்தாட்டத் திடலை மின்னொளியூட்டுவதற்காக வடக்கு மாகாண சபை உறுப்பினர் பா.கஜதீபனால் ஐம்பதாயிரம் ரூபா பெறுமதியான நவீன மின் விளக்குகள் கழக நிர்வாகிகளிடம் அண்மையில் கையளிக்கப்பட்டன. (ம-8)




# இலங்கை மீண்டும் தோற்றது

இங்கிலாந்துக்கு எதிரான மூன்றாவது ஒருநாள் ஆட்டத்திலும் இலங்கை அணி தோல்வியடைந்தது. இதனால் தொடரை இழக்க வேண்டிய நிலைக்கு இலங்கை அணி தள்ளப்பட்டுள்ளது.

தொடரில்ஐந்துஆட்டங்கள். முதலாவதுஆட்டம்மழைகாரணமாகக் கைவிடப்பட்டது. இரண்டாவது ஆட்டத்தில் இங்கிலாந்து அணி வெற்றி பெற்றது.

மூன்றாவதுஆட்டம்நேற்றுமுன்தினம்நடைபெற்றது. இந்தஆட்டத்திலும்இங்கிலாந்துவெற்றிபெற்று அடுத்த இரண்டுஆட்டங்களிலும் தோல்வியடைந்தாலும் 2:2 என்ற நிலையே ஏற்படும். ஆக, தொடரைப் பறிகொடுக்க வேண்டிய நிலை இங்கிலாந்துக்கு ஏற்படாது. இதனால்நேற்றுமுன்தின ஆட்டத்தில்வெற்றிபெறவேண்டும்என்ற நிலை இலங்கைக்கு இருந்தது.

மழைகாரணமாக ஆட்டம் 21பந்துப்பரிமாற்றங்களாகக்குறைக்கப்பட்டது. நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற இங்கிலாந்து முதலில் களத்தடுப்பைத்தீர்மானித்தது. முதலில்துடுப்பெடுத்தாடியஇலங்கை அணி 9 இலக்குகளை இழந்து 150 ஓட்டங்களைமட்டுமேபெற்றது. டிக்வெல்ல 20 பந்துகளில் 36 ஓட்டங்களைக் குவித்து சிறந்த ஆரம்பத்தை வழங்கிய போதிலும் குசல் மெண்டிஸ் 0, திசர பெரேரா 0, தனஞ்சய டி சில்வா 3 அடுத்தடுத்து ஏமாற்றினர். சந்திமல் 42 பந்துகளை எதிர்கொண்டு 34 ஓட்டங்களை மட்டும் பெற்றார். அவரின் அளவு கடந்த நிதானமும் இலங்கையைப் பலவீனப்படுத்தியது.

பந்துவீச்சில் ரசிட் 4 இலக்குகளையும், கரன் 3 இலக்குகளையும் வீழ்த்தினர். பதிலுக்குக் களமிறங்கிய இங்கிலாந்து அணியின் ஆரம்ப வீரரான பரிஸ்ரௌவ் 4 ஓட்டங்களுடனும், ரூட் 8 ஓட்டங்களுடனும் அபொன்சொவின் பந்துவீச்சில் ஆட்டமிழந்தனர். எனினும் ஆரம்ப வீரர் றோய் 41 ஓட்டங்களைக் குவித்தார். மோர்கன் மற்றும் ஸ்ரோக்ஸ் இருவரும் இறுதிவரைக் களத்தில் நின்று ஆட்டத்தை வெற்றியுடன் முடித்தனர். (ம)

## இலங்கை அணிக்கு வாழ்வா சாவா?

இலங்கை - இங்கிலாந்து அணிகளுக்கு இடையிலான நான்காவது ஒருநாள் ஆட்டம் கண்டியில் இன்று காலை 10 மணிக்கு நடைபெறவுள்ளது.

தொடரில் ஐந்து ஆட்டங்கள். மூன்று ஆட்டங்கள் முடிவடைந்துள்ள நிலையில் இங்கிலாந்து அணி 2:0 என்ற அடிப்படையில் தொடரில் முன்னிலையில் உள்ளது. இதனால் எஞ்சியுள்ள இரண்டு ஆட்டங்களிலும் வென்றேயாக வேண்டும் என்ற நெருக்கடி இலங்கை அணிக்கு உள்ளது.

இதன் அடிப்படையில் வாழ்வா சாவா என்ற நிலையில் இலங்கை அணி இன்று களமிறங்குகிறது. மழை குறுக்கிட்டு ஆட்டம் தடைப்பட்டாலும் இலங்கை அணி கிண்ணத்தை இழக்கும் நிலைக்குத் தள்ளப்படும். (ம)




## ஜொனியன்ஸ் அணி அபார வெற்றி



யாழ்ப்பாணம், ஒக். 19

ஏபி விளையாட்டுக் கழகம் நடத்தும் துடுப்பாட்டத் தொடரில் அண்மையில் இடம்பெற்ற ஆட்டத்தில் ஜொனியன்ஸ் அணி வெற்றி பெற்றது. யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் ஜொனியன்ஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து விக்டோறி விளையாட்டுக் கழக அணி மோதியது.

முதலில் துடுப்பெடுத்தாடிய ஜொனியன்ஸ் விளையாட்டுக் கழக அணி 20 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 9 இலக்குகளை இழந்து 128 ஓட்டங்களைப் பெற்றது. அதிகபட்சமாக சௌமியன் 23 ஓட்டங்களைப் பெற்றார்.

பந்துவீச்சில் பிரதீஸ் 3 இலக்குகளையும், கிரிசாந், கதியோன் இருவரும் தலா 2 இலக்குகளையும் வீழ்த்தினர். பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய விக்டோறி விளையாட்டுக் கழக அணி 20 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 7 இலக்குகளை இழந்து 106 ஓட்டங்களை மட்டும் பெற்றது. பந்துவீச்சில் லவேந்திரா 3 இலக்குகளையும், யதுசன் 2 இலக்குகளையும் வீழ்த்தினர். (ம-23)



# ஏற்கப்பட்டது விராட் கோக்லியின் வேண்டுகோள்

வெளிநாட்டில் சுற்றுப் பயணம் மேற்கொள்ளும்போது வீரர்களின் மனைவிமார்வீரர்களுடன் தங்குவதற்கு அனுமதிக்க வேண்டும் என்று இந்திய அணியின் தலைவர் கோக்லி விடுத்திருந்த கோரிக்கையை இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை ஏற்றது.

இந்திய அணி வெளிநாடுகளில் சுற்றுப்பயணம் மேற்கொள்ளும் போது வீரர்கள் தமது மனைவியர் மற்றும் தோழிகளை தம்முடன் அழைத்துச் செல்லக்கூடாது என்பதில் இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை உறுதியாக இருந்தது. வீரர்கள் தொடரில் ஒருநிலைப்பட்டு இருக்க வேண்டும் என்பதாலேயே இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை இவ்வாறான முடிவில் தீர்க்கமாக இருந்தது. இந்த நிலையில் இந்திய அணியின் தலைவர் கோக்லி இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையிடம் கோரிக்கையொன்றை விடுத்தி ருந்தார். அதில், "வெளிநாடுகளில் சுற்றுப் பயணம் மேற்கொள்ளும் போது வீரர்களுடன் அவர்களின் மனைவியரும் தங்கியிருக்க அனுமதிக்க வேண்டும்" என்று கேட்டிருந்தார். அவரின் இந்தக் கோரிக்கையை இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை ஏற்றது.

எனினும், தொடர் ஆரம்பிப்பதற்கு பத்து நாள்களுக்கு முன்னர் (பயிற்சிக் காலங்களில்) வீரர்கள் தமது மனைவியரை விட்டுப் பிரிந்திருக்க வேண்டும் என்றும் இந்தியக் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை குறிப்பிட்டது. (ம)

# லூயிஸ் விலகல்

இந்தியா - மேற்கிந்தியத் தீவுகள் இடையிலான ஒருநாள் தொடர் நாளைமறுதினம் ஆரம்பமாகவுள்ள நிலையில் இந்தத் தொடரில் இருந்து விலகினார் மேற்கிந்தியத் தீவுகளின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரரான லூயிஸ்.

மேற்கிந்தியத் தீவுகள் அணி இந்தியாவுக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டு விளையாடி வருகிறது. இந்த இரண்டு அணிகளுக்கும் இடையிலான டெஸ்ட் தொடரை 2:0 என்ற அடிப்படையில் வலுவாகக் கைப்பற்றியது இந்திய அணி. இதனால் மட்டுப்படுத்தப்பட்ட ஆட்டங்களில் தீவுகள் பெரியளவில் சாதிக்க வேண்டும் என்ற நெருக்கடி உள்ளது.

இந்தத் தொடரில் இருந்து கெய்ல், ரசல் இருவரும் ஏற்கனவே விலகிய நிலையில் மற்றொரு அதிரடி வீரரான லூயிஸ் தற்போது விலகியுள்ளார். காயம் காரணமாகவே தொடரில் இருந்து அவர் விலகியுள்ளார். லூயிஸுக்குப் பதில் வீரராக பவல் சேர்க்கப்பட்டுள்ளார்.

டெஸ்ட் தொடரில் அடைந்த படுதோல்விக்குப் பதிலாக ஒருநாள் தொடரைக் கைப்பற்றும் நம்பிக்கையை மேற்கிந்தியத்தீவுகளின் அணித் தலைவர் கோல்டர் வெளிப்படுத்தியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ம)

விசேட கருத்தரங்கு
★SLEAS
★SLAS
★இலஞ்ச ஊழல்
★ஆசிரியர் தெரிவு
போட்டிப்பரீட்சை வகுப்புக்கள்
20.10.2018 சனி.
21.10.2018 ஞாயிறு.
24.10.2018 புதன்
காலை - 9.00 - 4.00
நாவலர் கல்வி நிலையம்
ஆனைப்பந்தி, யாழ்.நகர்.
077 469 6695

அமெரிக்க லொத்தர் இலவச விசா
உடனடியாக பதிவு செய்யுங்கள்
இந்த வருடமே இறுதி வருடம்
இன்னும் சில நாட்களில் பதிவுகள் நிறைவடைகின்றது
V2 TRAVELS மூலம் பதிந்து அமெரிக்க விசா அதிஸ்டத்தை பெற்ற நான் என் எதிர்கால வாழ்க்கைத்துணைவருக்கும் விசா எடுத்துக்கொண்டு அமெரிக்கா செல்ல உதவிய V2 Travels க்கு எனது நன்றிகள்



திருச்செல்வம்-மரியரோகினி
V2 TRAVELS
0768226243

இலஞ்ச ஊழல் புலனாய்வு உத்தியோகத்தர்
விசேட இறுதி கருத்தரங்கு
மூன்று வினாத்தாள்களுக்கும் உரிய விடயங்கள்
சனி (20/10), ஞாயிறு (21/10) புதன் (24/10)
காலை 9.00 → 3.30 மணிவரை
தொடர்புகளுக்கு
076 688 3394
யாழ்ப்பாணக் கல்லூரி பட்டப்படிப்புகள் பிரிவு
(யாழ். ஆஸ்பத்திரி வீதி, கொமர்ஷல் வங்கியருகில்)

MATHS PERSONAL & GROUP CLASSES
தரம் - 6,7,8,9,10 மற்றும் O/L மாணவர்களுக்கான கணித, ஆங்கில குழு மற்றும் தனிவகுப்புக்கள் (TAMIL/ENGLISH Medium) அனுபவமிக்க பிரபல பாடசாலை ஆசிரியரால் வீடு வந்து கற்பிக்கப்படும்.
தொடர்பு: 077 454 0529 [நெல்லியடி – யாழ்ப்பாணம்]
விரைவில் வகுப்புக்கள்
இணுவில் புகையிரத வீதிக்கருகாமையில் ஆரம்பம்



# சூதாடினேன் என்பது உண்மைத் தகவல்!

## கனேரியா 'திடீர்' வாக்குமூலம்

பாகிஸ்தான் அணியின் முன்னாள் சுழல்பந்து வீச்சாளரான கனேரியா, சூதாட்டத்தில் ஈடுபட்டார் என்று கடந்த எட்டு ஆண்டுகளுக்கு முன்னர் குற்றஞ்சாட்டப்பட்டது. இதையடுத்து இத்தனை வருடங்களாக தன்மீதான குற்றச்சாட்டை மறுத்துவந்த கனேரியா தற்போது 'நான் சூதாடினேன் என்பது உண்மைத் தகவல்தான்' என்று தெரிவித்தார்.

கடந்த 2009ஆம் ஆண்டு இங்கிலாந்து கவுண்டி அணியில் இணைந்து கனேரியா விளையாடினார். அப்போது அனு பாட் என்ற சூதாட்டத் தரகருடன் சேர்ந்து சூதாட்டத்தில் ஈடுபட்டார் என்று முறைப்பாடு தெரிவிக்கப்பட்டது. இதையடுத்து, சூதாட்டத்தில் ஈடுபட்ட எசெக்ஸ் அணி வீரர் மெர்வின் வெஸ்ட்பீல்ட், கனேரியா ஆகியோர் அணியில் இருந்து நீக்கப்பட்டனர்.

இதில் வெஸ்ட்பீல்ட் சூதாட்ட சர்ச்சை காரணமாகச் சிறையில் அடைக்கப்பட்டார். கனேரியா பாகிஸ்தான் அணியில் இருந்து நீக்கப்பட்டார். ஏனினும் கனேரியா தன் மீதான குற்றச்சாட்டை ஏற்கவில்லை. சுமார் எட்டு ஆண்டுகளாகத் தன்மீதான குற்றச்சாட்டை மறுத்துவந்த அவர் தற்போது அதை ஏற்றுள்ளார்.

இங்கிலாந்து, பாகிஸ்தான் கிரிக்கெட் வாரியங்கள், என்னுடைய ரசிகர்கள், பாகிஸ்தான் மக்கள் அனைவரும் எனது சூழலைப் புரிந்துகொண்டு என்னை மன்னித்து விடுங்கள். நான் சூதாட்ட தரகர் அனு பாட்டுடன் சேர்ந்து மிகப்பெரிய தவறு செய்துவிட்டேன். நான் சூதாட்டத்தில் ஈடுபட்டது உண்மைதான் என்னை மன்னித்து விடுங்கள். அதற்கான விலையைக் கடந்த 8 ஆண்டுகளாக நான் கொடுத்துவிட்டேன் என்று தெரிவித்தார்.

இதைக் கேட்ட பாகிஸ்தான் கிரிக்கெட் வாரிய அதிகாரிகள் அதிர்ச்சியில் உறைந்துள்ளனர். முன்னாள் தலைவர் அப்துல் லத்தீப், 'நான் கனேரியா குற்றமற்றவர் என்று இத்தனை நாள்களும் நம்பிக்கொண்டிருந்தேன். அவரின் ஒப்புதல் பேச்சு எனக்கு அதிர்ச்சி அளிக்கிறது. பாகிஸ்தான் கிரிக்கெட்டுக்கு துரோகம் செய்துவிட்டார்' என்று தெரிவித்தார். (ம)

# வினோதமான 'ரண் அவுட்'

ஆஸ்திரேலியா - பாகிஸ்தான் அணிகளுக்கு இடையில் தற்போது நடைபெற்றுவரும் டெஸ்ட் ஆட்டத்தில் வினோதமான 'ரண் அவுட்' ஒன்று இடம்பெற்றுள்ளது.

ஆஸ்திரேலிய வீரர் பீட்டர் சிடில் பந்துவீசினார். பீட்டர் சிடில் வீசிய பந்தை அசார் அலி 'சிலிப்' திசையில் அடித்துவிட் பந்து பவுண்டரியை நோக்கி வேகமாகச் சென்றது. இதைப் பார்த்த அசார் அலி பந்து பவுண்டரிக்கு செல்கிறது என நினைத்து நிதானமாக நடந்து ஆடுகளத்தின் நடுப்பகுதிக்கு வந்தார். எதிர்த்தரப்பில் இருந்த ஆசாத்தும் வந்து இருவரும் சுவாரஸ்யமாக பேசிக்கொண்டிருந்தனர். ஆனால், பவுண்டரியை நோக்கி வேகமாகச் சென்றபந்து பவுண்டரியை தொடாமல் நின்றுவிட்டது. இதைப்பார்த்த ஸ்ராக் பந்தை எடுத்து இலக்குக் காப்பாளர் பெய்னிடம் எறிந்தார். அவர் பந்தைப் பிடித்து அசார் அலியை ரன் அவுட் செய்தார். ஆனால் அசார் அலிக்கோ ஏன் பெய்ன் ரன்அவுட் செய்தார் என்று தெரியாமல் திருதிரு என விழித்துக்கொண்டிருந்தார். அதன்பின் நடுவர் நடந்த சம்பவங்களை எடுத்துக்கூறியதும் தலையில் அடித்துக் கொண்டு அசார் அலி வெளியேறினார். (ம)



# ஆஸ்திரேலியத் தொடர் சவாலானது என்கிறார் புவனேஸ்வர்

சிமித், வோர்ணர் இல்லாத போதிலும் ஆஸ்திரேலியாவுக்கு எதிரான தொடர் மிகவும் சவாலான தொடரே என்று தெரிவித்தார் இந்திய அணியின் வேகப்பந்து வீச்சாளர் புவனேஸ்வர் குமார்.

சிமித், டேவிட் வோர்னர் இல்லாவிட்டால் கூட ஆஸ்திரேலியத் தொடர் நிச்சயம் சவாலாகவே இருக்கும்.

ஏனென்றால், நாம் நாட்டைவிட்டு வெளிநாட்டில் விளையாடுகிறோம். காலநிலை, சூழல் நிச்சயம் வேறுவேறாக இருக்கும், அப்போது அதற்கு ஏற்றால்போல் நாம் மாறிக்கொண்டு விளையாடுவது சவால்தான்.

சிமித், வோர்ணர் இல்லாதது ஆஸ்திரேலிய அணிக்குப் பாதகமானதா் என்று என்னால் சொல்ல முடியாது.

ஆனால், அனைத்தையும் அதையும் மீறி அந்த அணி வீரர்கள் சிறப்பாக விளையாடுவார்கள். நாமும் நெருக்கடி கொடுப்போம் என்று புவனேஸ்வர் குமார் மேலும் தெரிவித்தார். (ம)

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்றெட் நிறுவனத்தினால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 19.10.2018 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.